

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுடத்தின் 50வது வெளியீடாக...

# தியாகத்தீயில்

## சிறுகதைகள்

**மயில் மகாலிங்கம்**

வெளியீட்டில் உதவி:

விபுலானந்தர் இணையக் கல்விக்கழகம்,

**மகுடம்**

இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம் பதிப்பக வெளியீடு - 50**

ISBN : 978-624-5849-16-1

● நூல் - தியாகத்தீயில் - சிறுகதைத்தொகுப்பு ● ஆசிரியர் - மயில் மகாலிங்கம் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - மாசி - 2022 ● அளவு - 1/8 ● பக்கங்கள்-128 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● வடிவமைப்பு - த.சங்கர் ● அச்சு - வணசிங்க அச்சகம், மட்டக்களப்பு. ● விலை - 500/=

● Book - Thiyakath theeyil - Short stories ● Author - Myl Mahalingam ● © Author ● First Edition - February - 2022 ● Size - 1/8 ● Pages - 128 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Book & Cover Design T. Shankar ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் வெளியீட்டகத்தின் 50வது வெளியீடாகவும் இவ் வருடத்தின் (2022) முதல் புலம்பெயர் படைப்பாளியின் வெளியீடாகவும் ஜேர்மனியில் வசிக்கும் மயில் மகாலிங்கம் அவர்களின் தியாகத்தீயில் எனும் இச்சிறுகதைத் தொகுப்பினை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

மயில் மகாலிங்கம் அவர்கள் அண்மைக் காலமாக நிறையவே எழுதி வரும் ஓர் அசுர படைப்பாளி. அவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு (எரி நட்சத்திரங்கள்) வெளிவந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது.

திரு.மயில் மகாலிங்கம் அவர்கள் ஓய்வு பெற்ற உடற்கல்வி ஆசிரியர். திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்ற பின்னர் புலம்பெயர்ந்து தற்போது ஜேர்மனியில் வசித்து வருகின்றார்.

இவர் இலக்கியத்தில் தனது படைப்புகளை வெளிக்கொணர தேர்ந்தெடுத்த இலக்கிய வடிவம் சிறுகதை. இன்று பல புலம்பெயர் சஞ்சிகை களிலும் இலங்கை தேசிய பத்திரிகைகளிலும் இவரது சிறுகதைகள் வெளிவருகின்றன. பல சிறுகதைப் போட்டிகளிலும் இவரது சிறுகதைகள் பரிசுகளும் பெற்றுள்ளன. மயில் மகாலிங்கத்தின் சிறுகதைகள் மனித மனத்தின் நுட்பங்களை வெகு இயல்பாக வெளிக்கொணரும் ஆற்றல் கொண்டவை. இவரது பாத்திரங்கள் அனைத்தும் நாம் அன்றாடம் சந்திக்கும் மாந்தர்களே.

திருகோணமலையின் எழில் கொஞ்சும் தமிழ் கிராமமான ஆலங்கேணி கிராமத்தைச் சேர்ந்த இவர் தனது படைப்புகளில் தனது மண்ணைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அம்மண்ணில் ரத்தமும் சதையுமாக வாழும் மக்கள் சந்தித்த பிரச்சினைகள், சந்தித்து வரும் பிரச்சினைகள், கடந்த கால எமது விடுதலைப் போராட்டத்தின் நிகழ்வுகள் என அவரது சிறுகதைகள் ஒரு இனத்தின் மீதான அடக்கு முறையை மிகத் தெளிவாகவும், இறுக்கமாகவும் பதிவு செய்கிறது. அந்த வகையில் தனது மண்வாசனை வீசும் படைப்புக்கள் மூலம், தனது மண்ணையும், மக்களையும் வரலாற்றில் வாழ வைக்கிறார்.

மயில் மகாலிங்கம் அவர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் அவரது மனம் தாயகத்தைத் தேடி நிற்பதை அவரது பல படைப்புகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. மயில் மகாலிங்கம் தொடர்ந்து எழுத வேண்டும்; தனது மண்ணை தனது எழுத்துக்களில் தொடர்ந்து பதிவு செய்ய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**- மகுடம் வி.மைக்கல் கொலின்** (ஆசிரியர் - மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை



திருக்கோணமலை

**"வாசிப்பு சுவாசம் போன்றது"**

வாசிப்பு என்பதற்கு பாடசாலைக் கற்றலைத் தாண்டி பல்வேறு பரிமாணங்கள் உள்ளன. ஒரு சிறந்த வாசகராவது என்பது எளிதான விடயமல்ல. வாசிப்பின் பின்னணியிலுள்ள கண், மூளை இவற்றின் செயற்பாடுகளைப் புரிந்து கொள்ளலாம். உலக மொழிகளில் அறிஞர்கள் வாசிப்பை புதிய கோணங் களில் தற்போது அணுகத் தொடங்கியுள்ளனர்."ஒரு சிறந்த வாசிப்பாளன் தான் ஒரு சிறந்த எழுத்தாளன்" என்பது இன்று உலகம் கண்ட உண்மை.

"நூலளவேயாகுமாம் நுண்ணறிவு" என்பது தமிழ்ச் சான்றோர் மொழி. இந்த உலகத்தில் உயர்நிலையை அடைந்தவர்கள் அனைவரும் வாசிப்பினாலே உயர்ந்ததாக கூறுவர். வாசிப்பு ஒரு மனிதனிற்கு பூரண அறிவையும், அதிபட்ச பொறுமையையும் அளிக்கிறது.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்பது நம் திருவள்ளுவர் வாக்கு. "வாசிப்பதினால் மனிதன் பூரண மடைகின்றான்." என்பது உலகம் முழுவதும் அறியப்பட்ட சிறப்பு வாக்கிய மாகும். மனிதனின் ஆகச் சிறந்த கண்டு பிடிப்பு எதுவென அல்பர்ட் ஐன்ஸ்டீ னிடம் கேட்டபோது, சிறிதும் யோசிக்காமல் "புத்தகம்" என்று பதிலளித்தார்.

உலகம் இன்று பேசும் ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, லெனின், அப்துல் கலாம் போன்றோர் வாசிப்பினால் உயர்ந்தவர்கள்.

மாந்தர்க்கு நல் வழிகாட்டிகளாகவும் அறிவினை அள்ளித்தரும் ஆசானாகவும் விளங்கும் வாசிப்புப் பழக்கத்தை எமது அன்றாட கடமைகளில் ஒன்றாக மாற்றியமைப்பதுடன் இளைய சமூகத்தினரிடம் வாசிப்புப் பழக்கத தினை ஊக்குவிக்க வேண்டியதும் உலகத் தமிழனின் பெரும் கடமையாகும்.

இந்தத் தூரப் பார்வையுடன் இயங்கும், விபுலானந்தர் இணையக் கல்விக் கழகம் எழுத்தாளர் (ஆசிரியர்) திரு. மயில்மகாலிங்கம் அவர்களின் "தியாகத்தீயில்" எனும் சிறுகதைத் தொகுப்பை வெளியிடுகின்றது. இதன் விற்பனை வருமானம் அனைத்தும் கல்விக்கு கரம் கொடுக்கும் செயற்பாட்டில் பயன்படுத்தப்பட இருப்பதை அறிந்து பெரும் மகிழ்வடைகின்றேன். எங்கள் நேசக்கரங்களை நீட்ட வேண்டியத் தார்மீகப் பொறுப்பு எங்களுடையது.

இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றி. இதன் தொடர்ச்சி யாக இன்னும் பலரது நூல்கள் வெளிவர உள்ளன.

"வாழக் கல்"

**- துரை. சிவபாலன்**

**விபுலானந்தர் இணையக் கல்விக் கழகம், ஐக்கிய இராஜ்ஜியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பீட்டுரை

'தியாகத்தீயில்' எனுமிச் சிறுகதைத் தொகுதியின் படைப்பாளி மயில் மகாலிங்கம் 1960களில் மட்டக்களப்பு / வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் எனது வகுப்பறை நண்பன். விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றோம்.

கல்லூரியை விட்டு விலகி அரை நூற்றாண்டு காலமாகியபோதும் எமது நட்பு இன்னும் தொடர்கிறது. இப்போது ஜேர்மனியில் (பேர்ளின்) வசிக்கிறார்.

இந்நூல் இவரது இரண்டாவது (சிறுகதைத் தொகுதி) நூல். முதல் நூலான 'எரி நட்சத்திரங்கள்' எனும் சிறுகதைத் தொகுதி 2021 கார்த்திகையில் திருகோணமலை, 'அம்மா பதிப்பகம்' (31/1, சமது ஒழுங்கை, திருகோணமலை) வெளியீடாக (வெளியீடு-30) வந்தது. பன்னிரண்டு கதைகளை உள்ளடக்கியது இவ் 'எரி நட்சத்திரங்கள்'.

"தியாகத்தீயில்" எனும் இத்தொகுப்பு நூல் பதினான்கு கதைகளை அடக்கியுள்ளது. இனிக் கதைகளுக்குள் செல்லலாம்.

முதலாவது கதையான '**அடியாதது.... படியாது....**' எனும் கதை மாணவ சமூகத்தையும் ஊராரையும் நெறிப்படுத்தும் சமூக நீதிக்கதை. தமிழ்-முஸ்லீம் உறவு இக்கதையின் ஊடுபொருளாக அமைந்திருப்பது இக்கதையின் பிறிதொரு பரிமாணம். யாவும் கற்பனையல்ல என்று கதாசிரியர் கூறியிருப்பதால் இது அவரது சொந்த அனுபவம். இதில் வரும் பாத்திரங் கள் இன்றும் வாழ்கின்றனர் என்று அவரே கூறியுள்ளார். இது ஒரு சுமாரான கதைதான்.

இரண்டாவது கதை '**தியாகத்தீயில்**'. கதையின் எடுப்பு - தொடுப்பு - முடிப்பு எல்லாமே இறுக்கமாகவும் - ஒழுங்காகவும் அமைந்து சிறந்த சிறுகதையொன்றிற்குரிய பண்புகளைச் செம்மையாகக் கொண்டுள்ளது.

இது ஒரு போர்க்காலக் கதை. பூரணி எனும் கன்னிப்பெண் தமிழ்ப் போராளி இயக்கமொன்றைச் சேர்ந்த கணேசன் எனும் போராளியை இராணுவத் திடமிருந்து காப்பாற்றுவதற்காகத் தனது உடலை இராணுவத்தானின் இச்சைக்கு இரையாக்கும் ஒரு பாரிய தியாகத்தைப் புரிகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையின் இறுதிக்கட்டம் (உச்சக்கட்டமும் இதுதான்) கச்சிதமாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. கதாசிரியரின் விரசம் இல்லாத புனைவு மொழி போற்றத்தக்கது.

**'வேட்டை நாய்களின் வெறிப்பார்வையின் முன்னே பலி ஆட்டுக் குட்டியாய் அவள்.'**

**'பலி ஆட்டுக் குட்டியாய் பூரணி சடலமாய் நிலத்தில்...'**

**'சிரித்துக் கொண்டே வெளியேறி ஓடி மறைந்தன வேட்டை நாய்கள்'**

**மலத்தை உடல் முழுவதும் அப்பிக்கொண்ட அருவருப்புடன் எழுந்தாள் பூரணி'**

எனும் வரிகளிலே கதாசிரியரின் மொழி ஆளுமையும் - மொழியைக் கையாளும் அவரது வித்தையும் - படைப்பாற்றலும் வெளிப்பட்டு வாசகனை வியப்பிலாழ்த்துகின்றன.

இக்கதையிலே கதாசிரியர் அறிமுகம் செய்யும்,

**'அவிழ்த்துவிட்ட கன்று தாய்ப்பசுவிடம் தாவி ஓடுவது போல அவள் மனம் யேர்மனிக்குத் தாவியது'**

**'அவள் உள்ளம் போலச் சோற்று உலையும் கொதித்தது'**

**'வெருண்டோடும் முயலை வேட்டையாடத் துடிக்கும் வேட்டை நாய்கள் போல பாய்ந்துவருவது தெரிந்ததும்...'**

**'அவனது இதயம் வரண்ட நிலம்போல வெடித்துச் சிதலமாகியது'**

போன்ற புதிய - வித்தியாசமான உவமைகளும் படிமங்களும் கதையை அணிசெய்து பெறுமதி சேர்க்கின்றன.

இச்சிறுகதைத் தொகுப்பு நூலிலுள்ள பதினான்கு கதைகளிலும் இத் "தியாகத்தீயில்" என்ற கதையே கதாசிரியரின் படைப்பாற்றலுக்குக் கட்டியம் கூறி நிற்கிறது.

தன் உடலை இராணுவத்தினரின் இச்சைக்கு இரையாக்கிய பூரணி நடைப்பிணமாகக் கிணற்றடியை நாடிச் சென்று பிரமை பிடித்தவள் போல் நீர் அள்ளித் தன் உச்சியில் தொடர்ந்து ஊற்றித், தன் உடலில் அப்பிக் கொண்ட மலத்தைக் கழுவிக் கொள்வதாகக் காட்டிப் 'பூரணி'யைப் பூரணத்துவமாக்கியிருப்பதே - புனிதமாக்கியிருப்பதே இக்கதையின் - கதாசிரியரின் பூரணமான வெற்றி. இக்கதைக்குப் 'பூரணி' என்றே பெயரிட்டிருந்தால் பொருத்தமாயிருந்திருக்குமென - பூரணமாயிருந்திருக்குமென எண்ணத் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் ஒருவர் (திருகோணமலை மாவட்டத்திலிருந்து) தான் வெளிநாடு (யேர்மனி) சென்று பல வருடங்களின் பின்பு ஊர்வந்தபோது தன்னிடம் படித்த மாணவர்களைச் சந்தித்த போது தன்னை அவர்கள் விளித்த வார்த்தைகள் பற்றிய கசப்பான அனுபவங்கள் - யேர்மனியில் தன்னிடம் பண உதவி பெற்று வியாபாரம் செய்து முன்னேறியவன் தன்னைப் பின்பு இழிவாக நடத்திய அனுபவம் (கதாசாரியர் தன் சொந்த அனுபவங்களையே பகிர்ந்துள்ளார் போலும்) - இவற்றை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளும் ஒரு வித்தியாசமான எடுத்துரைப்புப் பாணி மூன்றாவது கதையான '**அண்ணே.... அண்ணே..... வாத்தியாரண்ணே**......" என்பது. இதன் எடுத்துரைப்பு வடிவம்தான் இதன் 'பிளஸ் + பொயின்ற்'. போலிக் கௌரவக்காரர்களை இக் கதை தோலுரிக்கிறது. இதுவுமொரு சுமாரான கதைதான்.

இத்தொகுப்பு நூலிலுள்ள ஏனைய கதைகளைப் பற்றிய விபரமான மதிப்பீட்டைச் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுகின்றேன். அவற்றை வாசகர்கள் படித்துப் பசியாறுவதே தர்மம்.

என்றாலும்கூடச் சில கதைகள் பற்றிய சிறு குறிப்புகளைத் தருவதை என்னால் தவிர்க்கமுடியவில்லை.

'**கத்தியின்றி... ரத்தமின்றி...**' என்ற கதை இந்நூலின் பத்தொன்பது பக்கங்களைப் பிடித்திருக்கிறது. இக்கதை உண்மையில் குறுநாவலாக விரிய வேண்டியதொன்றாகும். ஒரு திரைப்படமாக எடுக்கக்கூடிய தன்மையை - சினிமாக் குணாம்சத்தை இக்கதை (குறுநாவல்) கொண்டிருக்கிறது.

» '**பஞ்சமி**' அங்கதச் சுவையுடன் கூடி ஒரு பொழுதுபோக்குக் கதை.

» '**மடிப்பிச்சை**'க் கதையின் கரு சற்று வித்தியாசமாகவுள்ளது. நான்கு வாரங்களுக்கு முன்னர்தான் குழந்தை பிறந்து இரண்டாவது நாளிலேயே எதிர்பாராது திடீரென இறந்துவிட இளம்தாயான குமுதா தன் பாலூட்டும் தாய்மையுணர்ச்சிக்கு - உந்துதலுக்கு வடிகால் தேடும் ஓர் உளவியல் ரீதியான கதை.

» '**தியாகத்தீயில்....**' என்ற சிறந்த சிறுகதைக்கு அடுத்தபடியாகக் '**குருதட்சணை**' - 'மடிப்பிச்சை'- '**முதலை வேட்டை**' - '**வாய்க்காலும் வரம்புகளும்**' என்ற கதைகளைச் சிலாகித்துக் கூறலாம்.

» '**கசிப்பு**' கதையில் வரும் கசிப்புச் சாராயம் காய்ச்சும் முறைகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலுள்ள உள்ளூர்த் தொழில்நுட்பம் - 'முதலை வேட்டை' கதையில் வரும் முதலை வேட்டையாடும் முறைகள் - 'வாய்க்காலும் வரம்புகளும்' கதையில் வரும் நாய்களின் கலவிக் களியாட்டங்கள் போன்ற விடயங்கள் இலக்கிய வடிவங்களில் இதற்கு முன்னர் இவ்வளவு விபரங்களுடன் எந்த எழுத்தாளரும் மயில் மகாலிங்கம் அளவுக்கு எடுத்தாளவில்லையென்றே எண்ணுகின்றேன்.

மேலும், இத்தொகுப்பு நூலிலுள்ள கதைகளின் பொதுப் பண்புகளைப் பற்றியும் சில பதிவுகளை இடலாம் போலத் தோன்றுகிறது.

» பொங்கிப் பிரவாகித்து ஆரவாரத்துடன் வளைந்தும் நெளிந்தும் ஓடும் பேராறு போலல்லாமல் அமைதியாக நேர்கோட்டிலே செல்லும் நதி போன்ற கதையோட்டமும் - எளிய மொழிநடையும் வாசகனை எளிதாக ஈர்ப்பவை.

» தனது சொந்த அனுபவங்களையே இலக்கிய வடிவமாக்கியிருப் பதால் கதைகளில் கற்பனையும் - அழகியலையும் விட யதார்த்தப் பண்புகளே மேலோங்கி நிற்கின்றன. இவை ஆங்காங்கே 'விபரண' விபத்தை விளைவிக்கின்றன.
(உ+ம்) **'எழுதியது எழுதியபடி....'** - **'கராட்டிமாஸ்ரர் கணேசன்'** - **'மரம் தாவும்'** - **'மந்திகள்'** - **'விதிவலியது'** போன்ற கதைகள். ஆனாலும் இவை வாசிப்புச் சுவாரஸ்யத்திற்குப் பங்கம் விளைவிக்கவில்லை.

» கதைக் களங்கள் (கதாசிரியரின் )சொந்தமண்ணிலும் புலம் பெயர்ந்து சென்ற மண்ணிலும் கலந்து கிடப்பதால் வித்தியாசமான சுவாரஸ்யமான வாசிப்பு அனுபவங்களை அளிக்கின்றன.

» ஒரு தேர்ந்த 'சீரியஸ்' ஆன வாசகன் - பொழுது போக்காக வாசிக் கும் ஒரு சமான்ய வாசன் என இருதரத்தாரும் எடுத்து வாசிக்கக்கூடிய கதைகளாக உள்ளன.

» கதைகளில்கையாளப்பட்டுள்ள வித்தியாசமான - புதிய உவமைகளும் படிமங்களும் பொங்கலிலே பயறு கடிபடுவதைப் போலச் சுவை தருகின்றன.

'தியாகத்தீயில்' கதையில் வரும் ஏற்கெனவே இம்மதிப்பீட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பகுதியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள உவமைகளுக்கும் படிமங்களுக்கும் மேலதிகமாகவும் சில உதாரணங்களைக் காட்டலாம்.

1. **'அடியாதது.... படியாதது....'** என்ற கதையில் வரும்,
   **கலைத்துவிட்ட எறும்புக்கூட்டமாக** ஆதவனை ஒரு பட்டாளத்தினர் சூழ்ந்து கொண்டனர்.
2. **'அண்ணே..... அண்ணே.... வாத்தியரண்ணே.....'** கதையில் வரும்,
   எதிர்ப்பார்ப்பு **ஊதிப்பருத்த பலூனாய் 'டப்'** என வெடித்தது
3. 'கராட்டி மாஸ்ரர் கணேசன்' கதையில் வரும், **பார்க்குமிடமெல்லாம் துருவியதேங்காய் பூ போல்** பனி படர்ந்து
4. வாலாமணிச்சட்டையை **பாம்பு செட்டையை உரிப்பது போல்** வியர்த்து நனைந்திருந்த உடலிலிருந்து உரித்து உருவி....
5. **'விதிவலியது'** கதையில் வரும்,
   **கோடையில் வற்றிப்போன குளம் போல** 'பற்றறி'யின் கொள்ளளவு அடிமட்டத்தைக் கோடிட்டுக் காட்டியது.
   போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அத்துடன்,

1. 'கராட்டி மாஸ்ரர் கணேசன்' கதையில் வரும்,
   **மழைக்காளான்கள்** கணக்காய் பல்வேறு இளையோர் இயக்கங்கள் ஒவ்வொரு பெயரிலும் முளைவிட்டிருந்தன.
2. 'எழுதியது எழுதியபடி....' கதையில் வரும்,
   நாதன் வியர்வை நாற்றம் போக **காக்கைக் குளியல்** போட்டு விட்டு வந்து.....
3. 'கசிப்பு' கதையில் வரும்,
   கேள்விப்பட்டிருந்த அத்தனை உபகரணங்களும் அவன் கண்முன்னே **மடை** பரப்பியிருந்தன.
4. 'கத்தியின்றி..... ரத்தமின்றி' கதையில் வரும்,
   சாதிப்பாகுபாடு அவர் மனதில் **விசச்செடியாய்** வளர்ந்தது.
5. 'பஞ்சமி' கதையில் வரும்,
   திடீர் என ஒருநாள் **அசப்பு பிசப்பு** இல்லாமல் தலைசுற்றிவிழுந்து ஆவி அடங்கி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. 'முதலை வேட்டை' கதையில் வரும்,

முதலையின் **சிலாவனையே** இல்லை. நீர்நிலை சலனமற்றிருந்தது.

7. 'வாய்க்காலும் வரம்புகளும்' கதையில் வரும்,

பக்கத்துவீட்டுப் பெட்டைநாய் வள்ளிக்கு **மதனநீர்** சுரக்கத் தொடங்கி இரண்டொரு நாட்களாயிற்று.

போன்ற சொல்லாடல்களும் கவனிப்புப் பெறுபவை.

நிறைவாக இந்நூலில் சிலாகிக்கக்கூடிய **'குருதட்சணை'** - **'மடிப்பிச்சை'** - **'முதலைவேட்டை'** - **'வாய்க்காலும் வரம்புகளும்'** போன்ற ஏனைய கதைகள் இடம்பெற்றிருந்தாலும், இந்நூலின் தலைப்புக் கதையானதும் - இத்தொகுப்பின் இரண்டாவது கதையானதுமான **'தியாகத்தீயில்'** எனும் கதையொன்றுக்காகவே இந்நூலுக்குச் சிறந்த சிறுகதைத் தொகுப்பு நூலென்று சான்றிதழ் வழங்கலாம்

**- செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்**
607, பார்வீதி, மட்டக்களப்பு, இலங்கை.
077-1900614
senkathirgopal@gmail.com
30.01.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எனது முதலாவது நூலாக அண்மையில் அம்மா பதிப்பகத்தின், 30-தாவது வெளியீடாக வெளிவந்த "எரிநட்சத்திரங்கள்" என்பதைத் தொடர்ந்து, தற்போது வெளி வருவது "தியாகத்தீயில்" எனும் எனது இரண்டாவது சிறுகதைத் தொகுப்புஇது. இந்நூல், மகுடம் பதிப்பகத்தின் 50-வது வெளியீடாக வருவதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். மகுடம் ஆசிரியர்,திரு.வி. மைக்கல் கொலின் அவர்களுக்கு பேரன்புடனான நன்றி உரித்தாகட்டும்!

எனது எண்ணக் கருத்துகளையும், ஏற்பட்ட அனுபவங்களையும், அவதானித்த நிகழ்வுகளையும் அடிப்படையாக வைத்து புனைந்த சிறுகதைகளே இதில் உள்ளடக்கம். கருப்பொருள் இல்லாமல் கதைகளில்லை.

எனது எண்ணக் கருத்துகள், எல்லோருக்கும் ஏற்புடையதாக அமையவேண்டும் என்பது அசாத்தியம். வெவ்வேறு பார்வைகள், இரசனைகளும், கருத்துகளும் வாசகர் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக இருப்பது என்பது இயல்பு. ஒவ்வொரு வாசகர்களின் இரசனைக்கும் ஏற்ப கதை புனைவதென்பதும் அவர்கள் இரசிக்க வேண்டும் என்ற நோக்கில் கதை எழுதுவதென்பதும் அசாத்தியம். பலதரப்பட்ட எண்ணங்களையும், சம்பவங்களையும் உள்வாங்கியதாகவே எனது கதைகள் உருப்பெற்றன.

நான், ஒரு சிறந்த எழுத்தாளன் என நானே பறைசாற்றிக்கொள்வது அபத்தம். அத்தகைய அகங்காரம்என்னிடத்திலில்லை. மிகவும்நீண்ட வரிசையில், முன்னேறுவதற்காக காத்திருப்பவர்களில் நானும் ஒருவன் எவ்வாறான விமர்சனங்களையும், அறுவைச் சிகிச்சைகளையும் கல்லெறி களையும் எதிர் கொள்ளக் கூடிய மனப்பக்குவமும், பொறுமையும் என்னிடம் உண்டு. அவை என்னைப் பட்டை தீட்டி நெறிப்படுத்தும் என்பது எனது நம்பிக்கை.

"தியாகத் தீயில்" என்னும் சிறுகதையை இரண்டு சகாப்தங்களின் முன்னர் எழுதியிருந்தேன். அடுத்தடுத்து இரண்டு சிறுகதைப் போட்டிகளுக்கு அனுப்பியுமிருந்தேன். ஆனால் அது எடுபடவில்லை.

கதையின் இறுதிமுடிவு (கிளைமாக்ஸ்) நடுவர்களால் ஏற்றுச் சீரணிக்க முடியாமல் இருந்திருக்கக்கூடும் என எண்ணியிருந்தேன். அண்மையில், யேர்மனியிலுள்ள "துகள்" இலக்கியவட்டம் உலகளாவிய ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் அதே கதையை,"பூரணி"என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பிட்டும், கதை முடிவை வேறுவிதமாகவும்மாற்றி எழுதி அனுப்பி வைத்தேன். என்ன ஆச்சரியம்!!! போட்டியில், எனது கதையே முதல் பரிசைப் பெற்றுக்கொண்டது.

ஆனாலும், முன்னர் எழுதிய " தியாகத் தீயில்" என்ற கதையின் முடிவு என்னை மிகவும் ஆகார்சித்திருந்தது. எனவே, அதனை இந்தக் கதைத் தொகுப்பில் சேர்த்து வெளியிட்டுள்ளேன்.

எனது எழுத்துலக சகாக்களிடம் கதையின் முடிவு பற்றி அவர்களின் கருத்தைக் கேட்டவேளை, அவர்கள் எனக்கு ஆதரவு அளித்தனர். இனி, வாசகர்களாகிய உங்கள் விமர்சனம்.... நெஞ்சிடியுடன் எதிர் பார்க்கின்றேன்.

இதில், தொகுக்கப் பட்ட பெரும்பாலான கதைகள் ஏற்கனவே வெளி வந்தவை. அவற்றில், புலம்பெயர்வின்போது, தொலைந்துபோன சில கதைகளை மீளவும் சிரமம் எடுத்து எழுதியுள்ளேன். புதுச்சேரி (பாண்டிச்சேரி)-இலிருந்து வெளியாகும் "விடியல் இலக்கிய இதழ்" வெளியிட்ட ஈழத்து சிறப்பிதழில் எனது, சிறுகதை "விதி வலியது..." தெரிவாகி வெளிவந்தது.

இந்த இரண்டாவது, நூல் வெளி வருவதற்கு எனது எழுத்துலக அன்புத் தோழர் "திருமலை சுந்தா", "எனது எழுத்துலக ஆசான் கேணிப்பித்தன்", "மகுடம்" பதிப்பகம் வி.மைக்கல் கொலின் முதலானவர்களின் ஊக்கிவிப்பே காரணம். மகுடம் பதிப்பகத்தின் வெளியீடாக வருவதில் மீண்டும் மிகப்பெருமிதமடைகின்றேன்.

எனது உடன் பிறப்பு, கவிஞர் மயில் குமார் நல்கும் உதவிகள் அளவில்லாதன. "தம்பியுடையான் சண்டைக்கு அஞ்சான்" என்ற முது மொழியின் உயிர்வார்ப்பு. திருமலை இந்துக் கல்லூரியில் 1976/ 80 ஆண்டுகளில் என்னிடம் கல்வி கற்ற, பேரன்புக்குரிய மாணவர்கள், திரு. திருச்செல்வம்(முன்னாள் திருமலை, விஞ்ஞானக்கல்வி அதிகாரி)-ராஜ்குமார், திரு. நாராயணன்-கார்த்திகேயா, திரு. நடேசபிள்ளை-துளசிதரன், திரு, கதிர்காமநாதன்- ஜெயலோகிதன், திரு.சிவராஜா-வாசுதேவன் போன்றோரின் பெறுமதிமிக்க அனுசரணை உதவியுடன் இந்த நூல் வெளி வருகின்றது. திரு.க. ஜெயலோகிதனின் ஒருங்கிணைப்பு இதற்கு வழி வகுத்தது என்றால் அது, மிகையாகாது. எனது, முன்னாள் மாணவர்களான, அவர்கள் அனைவரும் எனக்குச்செலுத்தும் குருதட்சணையோ.... என எண்ணி, நெஞ்சம் நெகிழ்ந்து, கண்கள் பனிக்க அவர்களின் அன்பை நினைந்துப் பெருமிதமடைகின்றேன். முன்னாள் மாணவர்களில் ஒருவரான பேராசிரியர், கந்தையா-ரமணிதரன் நூலுக்கு அழகான அட்டைப் படம் வரைந்து சிறப்பித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலானந்தர் இணையக் கல்விக் கழகத்தை உருவாக்கியதில், பேராசிரியர், கந்தையா-ரமணிதரன் (அமெரிக்கா), வைத்தியக் கலாநிதி (உளவியல்) Dr. தனபாலசிங்கம்-கடம்பநாதன், திரு.துரை- ரவிராஜ், திரு. நாராயணன்-கார்த்திகேயா ஆகியோரின் ஒருங்கிணைப்புடன், தென்கயிலை ஆதீனம் அருள்மிகு சுவாமி தில்லைக்குமரன், திரு.R.S.ஜெரோம்(அதிபர்,தி/ விபுலானந்தா கல்லூரி), உதவி அதிபர் திருமதி.மதிவதனி, திரு. சசிக்குமார்- யோகானந்தம்( முன்னாள் அதிபர், சீனக்குடா- மகாவித்தியாலயம் ) திரு. நா.காளிராசா (அதிபர்,கலைமகள் வித்தியாலயம்), திரு.தா. சிவானந்தம் (அதிபர்.தி/கன்னியா இராவணேசுவரன் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரது அயராத முயற்சியில் தொடர்கின்றது.

விபுலானந்தர் இணையக் கல்விக் கழகத்தின்,புதிய பரிமாணமாக நூல்கள் வெளியீட்டுப் பிரிவு,புதிதாக உருவாக்கப்பட்டு ஓய்வுபெற்ற ஆசிரியர், திரு. ம. உதயகுமார்(கல்வி, தொழில் வழிகாட்டல் ஆலோசகர்) அதிபர்கள்: திரு. R.S.ஜெரோம், திரு.தா.சிவானந்தம், திரு.நா.காளிராசா ஆகியோரின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறப்பாகச் செயற்பட்டு சேவையாற்றுவார்களாக என வாழ்த்துகின்றேன். தொய்வில்லாத இலக்கியப் பணி வீறாப்புடன் தொடரட்டும்.

உயிர்ப்புடன் மிகவும் சிறந்த முறையில்,தமிழ் மாணவர்களின் கல்வியை வளமூட்டும் அவர்களின் அரியபணியையும் வாழ்த்தி, வணங்கு கின்றேன். மாணவர்களும் அவர்களின் சேவையைப் பெற்று பயனுறவேண்டும்.

எனது இந்தச் சிறுகதைத் தொகுப்புக்கு மதிப்புரை எழுதிய,எனது கல்லூரிக் கால நண்பன் "செங்கதிரோன்" த.கோபாலகிருஸ்ணன் அவர் களுக்கும், பின் அட்டை வாழ்த்துக் குறிப்பு எழுதிய "திருமலை சுந்தா" அவர்களுக்கும் எனது பேரன்புடனான நன்றி உரித்தாகட்டும். நூலைப் பிரசுரித்துத் தந்த "மகுடம்" இதழ் ஆசிரியர்,திரு.வி. மைக்கல் கொலின் அவர்களுக்கும் நன்றி பகர்கின்றேன்.

இறுதியாக, இந்நூலை முற்றும் சீராய்ந்து செம்மைப்படுத்திய எனதினிய நண்பன் 'செங்கதிரோன்' அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

**- மயில் மகாலிங்கம்**
ஜேர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


1. அடியாதது...படியாது... 01
2. தியாகத் தீயில் ? 07
3. அண்ணே... அண்ணே... வாத்தியாரண்ணே.... 15
4. எழுதியது எழுதியபடி.... 23
5. கசிப்பு 34
6. கத்தியின்றி... இரத்தமின்றி... 39
7. கராட்டி மாஸ்ரர் கணேசன் 58
8. குரு தட்சணை 64
9. பஞ்சமி 71
10. மடிப் பிச்சை 76
11. மரம் தாவும் மந்திகள் 83
12. முதலைவேட்டை 91
13. வாய்க்காலும் வரம்புகளும் 100
14. விதி வலியது 107




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியாதது...படியாது...

பலாலி ஆசிரியர் பயிற்சி நிறைவு பெற்றதும் ஆதவன், திருமலையிலுள்ள பிரபல கல்லூரிக்கு நியமனம் பெற்று வந்தான்.

எல்லோருக்கும் போலவே, அவனுக்கும் பயின்றவற்றைச் செயலாக்கும் ஆர்வமும், துடிப்பும் மனதில் முனைப்புக் காட்டின. சக ஆசிரியர் குழாமுடன் அந்நியோன்னியமாக நட்புப் பாராட்டினான். மாணவர்களை மரியாதையாக நடத்தினான். பாட நேரத்தில் கண்டிப்பும், முடிந்த பின் நட்புடனும் நடந்து கொண்டான்.

அவனது சுறுசுறுப்பைப் பார்த்து, அதிபரே திருப்திபட்டுப் பாராட்டினார். மற்றைய ஆசிரியர்கள் பொறுப்பேற்கத் தயங்கிய ஜீ.சி.ஈ. (ஓ/எல்)-B வகுப்பை அவன் தலையில் கட்டினார் அதிபர்.

எல்லோருமே தோளுக்கு மேல் வளர்ந்த மாணவர்கள். முதல் தடவை பரீட்சையில் சித்தியடையாமல், இரண்டாம் தடவைக்குத் தோற்றவிருப்பவர்கள். மன விரக்தியில் ஆட்பட்டு இருந்தவர்கள். கொஞ்சம் விறைப்பானவர்கள். சொல்வழி கேட்காதவர்கள் என்று பெயர் எடுத்தவர்கள். அதனால் அவர்களுடன் நிதானமாக நடக்கவேண்டுமென்பது அதிபரின் ஆலோசனை.

ஆதவனே அந்த வகுப்புக்குப் பொறுப்பு ஆசிரியர். ஆனால், ஆதவனின் அன்பினாலும், ஆளுமையினாலும் அவர்கள் அவனை பெரிதும் மதித்தனர். அவன் விளையாட்டுத் துறை ஆசிரியர் என்பதால், அவர்களை வழிப்படுத்துவது ஆதவனுக்கு இலகுவாக இருந்தது.

அன்று சமய பாட நேரம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாணவர்கள் இஸ்லாம் வகுப்புக்கும், சிலர் இந்துசமய வகுப்புக்கும்பிரிந்து செல்லவேண்டும். இந்து சமய பாட ஆசிரியர் அன்று வரவில்லை. ஆதவனுக்கு வேறுவகுப்பு இல்லை. அதனால் அதிபர், இந்து சமய மாணவர்களைக்கொண்டு, கல்லூரி வளவின் ஒரு பகுதியில், நீண்ட நாட்களாக வளர்ந்திருந்த செடி கொடிகளைத் துப்பரவு செய்யப் பணித்திருந்தார்.

அவர்களிடம் வேலை வாங்கிக்கொண்டிருந்தபோது, எதார்த்தமாக அலியைப் பார்த்து விட்டான். அவன், இஸ்லாம் வகுப்புக்குப் போக வேண்டியவன்.

"அலி..! ஏன்...உனக்கு இஸ்லாம் பாடம் இல்லையா..?" என்று கேட்டார். அலி தயக்கத்துடன், மௌலவி வரவில்லை என்றான்.

ஆதவன் மறு வார்த்தை சொல்லவில்லை. மௌலவியை அன்று காலையில் பார்த்து வணக்கம் சொன்னது நினைவுக்கு வந்தது. சந்தேகத்துடன் வகுப்பறைக்குப் போய் நோட்டமிட்டான். மௌலவி அங்கு பாடம் நடத்திக் கொண்டிருந்தது பார்வையில் பட்டது. தனக்குள் கறுவிக்கொண்டு, அலியிடம் வந்தான்.

"மௌலவி வரவில்லை என்றாயே.! அங்கு பாடம் நடத்துவது ஆர்..? ஏன் பொய் சொன்னாய் " என்று கோபத்துடன் கேட்டான்.

அலி, பதகளித்துப் போனான். ஆதவனின் செயலை அலி கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை.

"அது...வந்து...சேர்... நான் வீட்டுப் பாடம் செய்யவில்லை... அதுதான்...." என்று திக்கித்திணறி சொல்லி முடிக்கும் முன், அலியின் கன்னத்தை ஆதவனின் கை பதம் பார்த்துவிட்டது.

"ஆரிட்ட... புறுடா விடுறா...? உன்ர வகுப்புக்குப் போ..."என்று அலியைப் பிடித்துத் தள்ளினான்.

அலி,பொய் சொன்னதால், ஆதவன், கோபத்தின் உச்சியில் நின்றான். மற்ற மாணவர்கள் திகைத்து நிற்க, அலி அவமானத்தில் குமைந்து போனான். ஆதவனின் அடுத்த பக்கத்தை மாணவர்கள் முதல் தடவையாக அன்றுதான் கண்டனர்.

கல்லூரி மணி கிணுகிணுத்தது.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அன்றைக்குக் கடைசிப் பாடம். மாணவர்கள் ஆரவாரித்த படியே வீட்டுக்குச் செல்ல ஆயத்தமாகினர்.

ஆதவனும், அதிபரிடம் துப்பரவுப் பணி முடித்ததைக் கூறிவிட்டு, வீட்டுக்குப் போக, வெளி வாசலுக்கு வந்தான்.

யாருமே எதிர்பாராமல், ஒரு பெரிய கல் ஆதவனின் தலையைக் குறிவைத்துப் பறந்து வந்தது. ஆதவனும் அதைக் கவனிக்கவில்லை. அவனின் அருகாகவந்த ஒரு மாணவன் அதைப் பார்த்திருக்க வேண்டும். ஆதவனைப் பிடித்துப் பலங்கொண்ட மட்டும் ஒரு பக்கமாகத் தள்ளிவிட்டான். அவனை, யப்பான் என்று சக மாணவர்கள் செல்லமாக அழைப்பார்கள்.

அவன் அத்துடன் நிற்காமல், கல் வந்த திசையை நோக்கி விரைந்தான். யார் எறிந்தது என்பதை அவன் அனுமானித்து விட்டான். அவனுடன் சேர்ந்து இன்னும் சில மாணவர்களும் எறிந்தவனைப் பிடித்து இழுத்து வந்தனர்.

ஓ... அது அலி...! அவனைத் தண்டித்ததன் எதிர்வினை போலும்...

"நாயே ! சேரிட்ட மன்னிப்புக் கேளுடா...." எனக் கூச்சலிட்டனர். சிலர் அலியை அடித்தும் விட்டனர்.

"சரி...சரி...! அவனை ஒன்றும் செய்ய வேண்டாம். போக விடுங்க, ஏதோ தெரியாத்தனமாச் செய்துவிட்டான்." என ஆதவன், அலியை அவர்களிடமிருந்து மீட்டான்.

அதற்கிடையில் அதிபருக்கு நடந்தவை காதிலெட்டிவிட, ஆதவனை அலுவலகத்துக்கு அழைத்தார். நடந்தவற்றைக் கேட்டு அறிந்து கொண்டார்.

பத்துப் பதினைந்து நிமிடங்கள் கடந்திருக்கும்....

ஆதவன், வீட்டுக்குப் போக பிரதான வாசலுக்கு வந்தான். பத்துப் பதினைந்து பேரடங்கிய கூட்டம், வெளி வாசலில் கூச்சலிட்டபடி பொல்லுத் தடிகளுடன் நின்றனர்.

"ஏய்..! நீதானா அந்த வாத்தி..? மாடு தின்னி என்டு சொல்லி... அலியை அடித்து உதைத்தது...? வாடா...வெளியே.." ஆக்ரோசத்தில் கறுவிக் கூச்சலிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவன் அதிர்ந்து போனான்.

தவறு செய்த மாணவனைத் தண்டிக்கும் உரிமை....ஒழுங்கு நடவடிக்கை.... எடுப்பது என்பது., ஆசிரியரான தனக்கு இல்லையா? எனக் குழம்பினான்.

நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருந்த ஆலிம்ஸா அமைதி காத்தது, ஆதவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதுவும் அவனுக்குப் புரியவில்லை

ஆதவன் அச்சத்துடன் அதிபரின் அலுவலகத்தை நோக்கி ஓடினான், அதிபர் கணப்பொழுதில் நிலைமையைப் பட்டவர்த்தனமாய் புரிந்து கொண்டார். தொலைபேசியைச் சுழற்றினார்.

"கொஞ்சம்... பொறுங்க மாஸ்டர்... இப்ப பொலிஸ் வரும்... அதுக்குப் பிறகு வீட்டுக்குப்போங்க" என்றார் அதிபர். ஆதவனும் சம்மதித்தான்.

ஐந்து மிடங்கள் கூட ஆகியிருக்காது.....

'பொலிஸ் சார்ஜண்ட்' கார்த்திகேசு பிரசன்னமானார். கண்டிப் பான குரலில், அங்கு கூடி நின்றவர்களைப் பார்த்துச் சொன்னார்.

"இது ஒண்டும் மீன் சந்தையல்ல! மாஸ்டர், பிரச்சனை என்றால், மாணவனின் அப்பா, அம்மா வந்து கதைக்கட்டும்.இதில் உங்களுக்கு துளியும் சம்பந்தமில்லை. கலைந்து போகாது விட்டால் நடக்கிறது வேற. உள்ள தள்ளிப் போடுவன்." என்று கடுகடுத்தார். குவிந்து நின்றவர்கள் சடுதியாய்க் கலைந்தனர்.

"மாஸ்டர்..! இவர்களது.. வீதிப்பக்கம் போகாமல், வேறு வழியால் போக்கு வரத்துச் செய்யுங்க...! தனியே போகவேண்டாம். ஏதும் பிரச்சனை எண்டால் எனக்குத் தெரியப்படுத்துங்க" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

○•••••○

அன்றிலிருந்து, இரண்டு மூன்று நாட்களாக அலி, கல்லூரிக்கு வரவில்லை.

அதன்பின், ஒரு நாள் தந்தையுடன் வந்திருந்தான். அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை, ஏற்கனவே ஆதவனுக்கு அறிமுகமான ஆசிரியர்தான். கிண்ணியா வில் வாழ்வதுடன் அங்கேயே படிப்பிக்கின்றார். ஆதவனைப் பார்த்ததும், கைகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டார்

"மச்சான்..! என்ர மகன் அலி, தெரியாத்தனமாய்ப் பிழை செய்திற்றான். எனக்காக அவனை மன்னித்துக் கொள். " என நட்புடன் கோரிக்கை வைத்தார்.

"நான், அதை பெரிசு படுத்தவில்லை. அலி, தொடர்ந்து கல்லூ ரிக்கு வரலாம்." எனப் பெருந்தன்மையுடன் சொல்லி வழி அனுப்பினான்.

○••••••○

ஆதவன், வார இறுதியில், அவனது அம்மா வீட்டுக்கு ஆலங் கேணிக்கு வருவது வழக்கம். கிண்ணியா துறையடியில் இறங்கியதும், தேனீர் அருந்த வழமையான கடைக்குள் நுழைந்தான்.

"ஓ... நீயா..? நீதானே... முகமது மாஸ்ரரின் மகன் அலியை அடித்து உதைத்தவன்...?"

கடைக்காரன் யூசுப் ஆக்ரோசத்துடன் கேட்டார். அத்துடன் வெளியே வந்து சத்தமாக ஏனையோரைக் கூவியழைத்தார்.

"எல்லாரும் இஞ்ச வாங்கடா... மாடு தின்னி என்டு, அலியை அடித்த வாத்தி வந்திருக்கான்... டோய்..."

கலைத்துவிட்ட எறும்புக்கூட்டமாக, ஆதவனை, ஒரு பட்டாளத் தினர் சூழ்ந்து கொண்டனர். அவசர கதியில் ஒருவனின் கை ஆதவனின் கன்னத்திலும் பளாரெனப் பதிந்தது.

ஆதவனுக்கு நிலைமை துல்லியமாய் புரிந்துவிட்டது.

"நாநாக்களே..! நான் சொல்லுறத முதலில பொறுமையாக் கேளுங்க..! நான் அலியை அடித்தது என்னவோ உண்மைதான்.. அத நான் மறுக்கவில்ல...ஆனா ...ஏன் எண்டு தெரியுமா..? அவன், இஸ்லாம் பாடத்துக்குப் போகாம..பொய் சொன்னதாலதான், ஒருதரம் அறைந்தேன். நான், அவனோட வகுப்பு ஆசிரியர். தவறு விடும் மாணவர்களைத் தண்டிக்கிற கடமையும், உரிமையும் எனக்கு உண்டு."

"பெரும்பாலான, எனக்குப் படிப்பித்த ஆசிரியர்கள், நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாருமே முஸ்லீம்கள்தான். நான், இன மதத்துவேசம் பார்ப்பவனல்ல. என்னைப்பற்றி அவர்களிடம் கேட்டால் தெரிஞ்சி கொள்ளுவீங்க. நான், கிண்ணியா மகாவித்தியாலயத்தில், படித்த காலத்தில் இஸ்லாம் பாடத்தைக் கற்றவன்."

"நீங்க சொல்லுற மாதிரி -அறிந்து கொண்ட மாதிரி உதைக்கவு மில்ல.. மாடு தின்னி என்டு, சொல்லவுமில்ல... நானே முழு மாடு தின்னுறவன்தான்....முகமது மாஸ்டரை எனக்கு நல்லாவே தெரியும். அவரே என்னை வந்து பார்த்து, அலியை மன்னிக்கச் சொல்லிக் கேட்டார். அலி, எனக்குக் கல்லால் எறிந்தது உங்களுக்குத் தெரியுமா? முகமது மாஸ்டருக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு ஏன் வந்தது? " என்று துணிச்சலுடனும் எரிச்சலுடனும் சத்தமிட்டான்.

கூடிய கூட்டத்தினரிடையே அமைதி நிலவியது. ஆளுக்காள் குசு குசுத்துக் கொண்டனர்.

அதே நேரம் பார்த்து, கடைக்காரனின் மகன் அஸீஸ் வந்து விட்டான். அவன் கிண்ணியா மகாவித்தியாலயத்தில், ஆதவனுடன் ஒன்றாய்ப் படித்தவன். அவன் ஆதவனுக்காகச் சத்தமிட்டான்.

"உங்களுக்கு என்ன தெரிஞ்சு ஆதவனை அடிக்க வாறீங்க? அவனை, எனக்கு நல்லாத் தெரியும். என்னோடு படிச்ச காலத்தில, இந்து சமயத்துக்குப் பதிலாக இஸ்லாம் படித்தவன். மாடு தின்னி என்று கடைசி வரையும் சொல்லியிருக்க மாட்டான். உங்க வேலையைப் போய்ப் பாருங்க... வந்திட்டாங்க.... வேல வெட்டியில்லாம!" என்று சத்தமிட்டுக் கொண்டு, தந்தையைச் சுட்டெரிப்பது போல் பார்த்தான்.

அவனது வாப்பா, கூனிக் குறுகித் தலை தாழ்ந்தார்.

"வாடா... மச்சான்...!. இவனுகளைப் பற்றி உனக்குத் தெரியுந் தானே. வா! ஒரு 'டீ' குடி." என்று ஆதவனின் தோளில் நட்புடன் கை போட்டு அழைத்தான். அவனது வாப்பா, நாணிக் குறுகி நல்லதொரு 'டீ' போடத் தொடங்கினார்.

**************

**(யாவும் கற்பனையல்ல – கதாபாத்திரங்கள் இன்றும் வாழ்கின்றனர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத் தீயிலி்

" ஏடி.. பூரணி எழும்பிடி! விடிஞ்சி ஏழு மணியாச்சிது... இன்னும் சுருண்டு புரண்டு கிட...

பார்க்கிற சனங்கள் சிரிக்கப்போகுதுகள்... "பாக்கியம் ஆச்சி தினமும் பாடும் பல்லவிதான் இது. ஆனாலும் இன்று அதில் சிறிது செத்தல் மிளகாயின் காரம் செறிந்திருந்தது. சுருட்டை ஆழமாய் உள்ளுக்கு இழுத்துக் கொண்டு, தொடர்ந்து ஒரு முறை தொண்டை அதிரும்படி காறித் துப்பினாள். பெரிய பனை ஓலை கடகப் பெட்டியை எடுத்து எதையோ பக்குவமாக நிரப்பத் தொடங்கினாள்.

"சும்மா கிடயணை....ஆச்சி..! நான் முழிச்சிற்றுத்தான் அண்ணையப் பற்றி யோசிச்சிக் கொண்டுகிடக்கிறன்.... நீ முதலில வெயில் ஏறமுதல் ரவுனுக்குப் போயிற்று, பொழுது படமுதல் வரப்பார்.!" பூரணி இப்போது சோம்பல் முறித்து எழுந்து சுவரோடு சாய்ந்து கொண்டாள்.

"ஓம்... ஓம்...நீ கொண்ணய நினைக்கிறியா.... இல்ல... யேர்மனியில கட்டப்போறவன நினைக்கிறியா எண்டது எனக்கென்ன தெரியாதா?" என்று மனதுக்குள் நக்கலாகச் சொல்லிக் கொண்டாள் பாக்கியம் ஆச்சி.

இப்போது கோழி முட்டை, மரக்கறி, பழ வகைகளை கடகத்தில் அடுக்கி நிரப்பியிருந்தாள். இனி திரிகோணமலைக்குக் கிளம்பினால் சரி. இது ஆச்சியின் வாரா வார வாடிக்கையான வியாபாரம். ஆலங்கேணியி லிருந்து கிண்ணியாத்துறை வரை கால் நடையாக வருவாள். துறையடி யிலிருந்து பின்னர்தான் வாகன வசதி.

பாக்கியம் ஆச்சி பூரணியையும் பரதனையும் இப்படித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் பார்த்து வளர்த்து ஆளாக்கினாள். அவர்களின் பெற்றார் குழந்தைப் பருவத்திலே காலமாகிவிட்டனர்.

பரதன் படிப்பில் படு சுட்டி. திருமலை இந்துக்கல்லூரியில் படித்தான். அப்போதுதான் தமிழ்ப் போராளிக் குழுக்கள் வாலிபர்களை உள்வாங்கின. பரதனும் அதில் இணையப் போவதாகப் புரளி எழுந்தது. ஆச்சி அப்போது உசாரானாள்.

சொத்துப் பத்துகளை விற்றும், கடன் பட்டும் பிரயாண முகவர்

மூலம் ஒருவழியாக யேர்மனிக்கு ஒரே தள்ளில் தள்ளிவிட்டாள்.

தற்காலிக வதிவிட அனுமதி கிடைத்தாலும், வாய்த்த ஏதாவது வேலைகளைச் செய்து சம்பாதித்தான். அவன் தனது கூட்டாளி ஒருவனைப் பூரணிக்கு பேசி முடித்து, பயண முகவர் மூலம் எடுக்க எல்லா ஒழுங்கும் செய்துவிட்டான். பயண நாட்களை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் பூரணி.

தினமும் வெளிநாட்டுக் கனவில் மிதந்தாள்.

"எடி மோளே... இத வந்து தலையில தூக்கி வை"

உறக்கத்தில் கலைந்திருந்த உடையைச் சரிப்படுத்திக் கொண்டு ஒரு கை கொடுத்து பெட்டியைத் தூக்கிவிட்டாள். பெட்டியை, சாவகாச மாகத் தலையில் வாங்கியபடி ஆச்சி குசுகுசுத்தாள்: "புள்ள...அவன் கணேசன் மூதூரிலிருந்து மதியம் மட்டில் வருவன் எண்டவன். பாவம் பொடியன், அங்க என்னத்தச் சாப்பிடுவானோ? வந்தால், சோறு தண்ணி ஏதாச்சும் சாப்பிடக் குடு. எப்ப இனித் திரும்ப வருவான் எண்டதயும் கேட்டு வை... நான் போயிட்டு வாறன்... கவனமாய் இரு..." ஆச்சி செருமிக் கொண்டே வெத்திலையைச் சப்பிக் கொண்டு நடையைக்கட்டினாள்.

○•••••○

கணேசன் என்று ஆச்சி குறிப்பிட்டது வரதனின் கூட்டாளி. கணேசன் மூலமே வரதன் வெளிநாடு போக முடிந்தது. அவன் போனதும் கணேசன் முழு நேரப்போராளியாகிவிட்டான்.

கணேசனைத்தெரியாதவர்கள் திருமலை, மூதூர், தம்பலகாமம் பகுதிகளிலேயே கிடையாது. பரதனுடன் சேர்ந்து போகக் கணேசனுக்கும் வாய்ப்புக்கிடைத்தது. ஆனால், விடுதலை வேட்கையால் இயக்கப் பணியில் முற்றாய் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியவர்களிடம் மரியாதை காட்டியும், தன்னொத்தவர்களிடம் நட்புப் பாராட்டியும், நட்புப் பாராட்டியும், இளையோரிடம் பாசம் காட்டியும் விடுதலைப் பணியைச் சிரம்மேற் கொண்டு நடத்தினான்.

ஈழவிடுதலைக்கு எதிரானவர்களிடம், குறிப்பாக சகோதர இனத்தாரிடம் ஒட்டுறவாய்ப் பழகி அவர்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றிருந்தான். எந்தச் சமுதாயப் பிரச்சினை என்றாலும் சரி, அவற்றில் தலையிட்டு சரியான நீதியை வழங்கினான். திருமலை மாவட்டத்திலேயே மிகவும் முக்கிய புள்ளியான கணேசன் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கினான்.

அவன் மோதாத படைப்பிரிவே இல்லையெனலாம். அவன் எந்தக் களமுனையிலும் தோற்றதுமில்லை. பின் வாங்கியதுமில்லை.

நேற்று நடுச்சாமம், புதிதாகப் பயிற்சி பெற்றுவந்த சிறு போராளிக் குழுவை நேற்று நடுச்சாமம், குதிக்குக் கூட்டிக் கொண்டு பணியில் ஈடுபடுத்திவிட்டு, மீண்டும் தம்பலகாமம் திரும்ப வேண்டியவன் ஆலங்கேணி ஊடாகவே போயாகவேண்டும். விடுதலைப் பயணத்தில் முழுப்பங்காற்றிய ஆலங்கேணி அவன் பிறந்து வளர்ந்த ஊர். தங்குமடம் மாதிரி. அதிலும் பாக்கியமாச் சியையோ, பூரணியையோ பார்க்காமல் ஒருபோதும் போகவேமாட்டான்.

அவனது வாய்க்குச் சுவையாக உணவுப் பண்டங்களை ஆச்சி செய்து வைத்துக் காத்திருப்பாள். ஆற அமர இருந்து சாப்பிடாது விட்டாலும், பொட்டலமாய்க் கட்டிக் கொடுத்துவிடுவாள்.

அவனுடன் எத்தனை போராளிகள் வந்தாலும், எந்தச் சரிசாமமாக இருந்தாலும் அலுப்புச்சலிப்பு இல்லாமல் எதையாவது சமைத்துப் போடுவாள் புண்ணியவதி. அவர்களும் கஞ்சியோ கூழோ மகிழ்ச்சியாகப் புசித்துப் பசியாறிச் செல்வார்கள். இன்றும், இன்னும் சிறிது வேளையில் கணேசன் பசியுடனே வருவான்.

O•••••O

ஆச்சி போனவுடன், கழுவவேண்டிய சமையல் பாத்திர பண்டங்களை கழுவிக் கவுட்டுவிட்டு வேப்பங்குச்சியை ஒடித்து பற்களை துலக்கத் தொடங்கினாள் பூரணி. பச்சைப்பசேலென்று சிலுசிலுக்கும் தென்னங்கீற்றுக்களை ஊடறுத்துப்பாய்ந்த காலை இளம் வெயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணியின் கன்னக்கதுப்புகளில் பட்டுக் கதகதப்பாக்கிற்று.

முகத்தை அலம்பி முருகனைத் துதித்தாள்.

முற்றத்தைப் பெருக்கலாமென விளக்குமாற்றை எடுத்தபோது, எங்கிருந்தோ பறந்து வந்த சோடி மைனாக்கள், முற்றத்துத் தென்னங்கீற்றில் வந்தமர்ந்து சொண்டுடன் சொண்டு உரசி தென்றலில் ஊஞ்சலாடின.

அவற்றின் "கியாவா...கியாவா..." என்ற காதல் கீச்சலொலி பூரணியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது மெய்மறந்து போனாள். ஏக்கப்பெருமூச்சு இயல்பாய் வெளிப்பட, ஆதங்கத்தோடு அவற்றை பொறாமையுடன் பார்த்தாள். தன்னிலை மறந்த மனம், இலையுதிர் காலச்சருகாய் அலைபாய்ந்தது.

அவிழ்த்து விட்ட கன்று தாய்ப் பசுவிடம் தாவி ஓடுவது போல, அவள் மனம் யேர்மனிக்குத் தாவியது.

தினமும் தபால்காரனை எதிர்பார்த்து ஏமாந்தாள். அவளும் ஆசா பாசங்களுக்கு அடிமைப்பட்ட சராசரிப் பெண்தானே. அதுவும் போர்ச்சூழல் நிறைந்த தமிழர் பகுதிகளிலிருந்து, புலம் பெயர்ந்தாலே போதுமென்ற ஆதங்கம். ஆனால், ஆச்சியைப் பற்றித்தான் கவலைப்பட்டாள்.

"பட..பட...பட..."

பழக்கப்பட்ட அந்த நாராசமான விசிறிகளின் பிரமாண்டஓசை, வலுக்கட்டாயமாகச் சுயநினைவுக்கு இழுத்து வந்தது. மைனாக்களும் அச்சத்தில், கிறீச்சிட்டு பறந்து மறைந்தன. மரங்களிலிருந்த காகக் கூட்டங்களும் அவல ஒலி எழுப்பி, திக்குத்திசை அறியாது கலைந்து பறந்தன. தென்னை மரங்களின் பிற்புலத்திலிருந்து, தென்னோலைகளைச் சலசலக்க வைத்துத் தாழப்பறந்து வந்தது ஒரு உலங்கு வானூர்தி. வட்டமடித்தபடி தாழப்பறந்து, மேலெழுந்து மீண்டும் தாழப் பறந்து மறைந்தது. பூரணியின் நெஞ்சு 'ஹெலி' யைப் போலவே படபடத்தது. ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போவதாக உள்மனம் எச்சரித்து. அவளை யறியாது வாய் "முருகா... முருகா..." எனத்தொழுதது.

"கணேசண்ணை... வாற...நேரம்...! சனியனும்..வருது..! ." என முணு முணுத்தாள். மனம் நிலை கொள்ளாமல் பரிதவித்தது. அவள் உள்ளம் போலச் சோற்று உலையும் கொதித்தது. களைந்த அரிசியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலையிலிட்டாள். காய் கறிகளை நறுக்க ஆரம்பித்தபோது, ஹெலியின் கெக்கரிப்பு செவிப்பறையில் மோதியது. தூரத்தே கேட்கும் இடிமுழக்கம் போல, துப்பாக்கி வேட்டுகள் காற்று வாக்கில் கர்ண கடூரமாய்க் கேட்டன. பூரணிக்குப்...பகீர்...என்றது....மீண்டும் முருகனைத் துணைக்கழைத்தாள்.

"முருகா! கணேசண்ணைக்கு எதுவும் நேந்திரக்கூடாது....."

இராணுவ வாகனத்தின் உறுமல் ஒலியும் காதில் விழுந்தது. சோற்றுலை "கோத...கோத....".வென பொங்கித் தெறித்தது, அவளது நெஞ்சம் போல. தென்னம் தோப்பின் பரவலில் பார்வையைக் குவித்து ஊடுருவவிட்டாள். ஒவ்வொரு தென்னையையும் தட்டாங்கோடு மறிப்பது போல்,ஒரு உருவம் ஓடிவருவது மங்கலாய்த் தெரிந்தது.

"முருகா...அது கணேசன் அண்ணையாய் இருக்கக்கூடாது..."

உள்மனம் பரிதவித்து ஓலமிட்டது. முருகன் பூரணிக்குத் துணை நிற்கவில்லை. இப்போது துல்லியமாய்த் தெரிந்தது, அது அச்சு அசலாய் கணேசனேதான். அவளது சர்வாங்கமும் சிலிர்த்துச் சில்லிட்டன. அவளை அவன் அண்மித்தும் விட்டான்

"அண்ணை... என்ன நடந்தது.....?" பதற்றத்துடன் கேட்டாள்.

"தங்கச்சி...! ஆமி... துரத்தி வாறங்க... நீ வீட்டுக்குள்ள ஓடு... நான் கண்ணாக்காட்டுக்குள்ள ஓடிஒளியிறன்...!" மேல் மூச்சு கீழ் மூச்சுவாங்க சொல்லிக்கொண்டே ஓட அடியெடுத்தான்.

பூரணிக்கு என்ன சொல்வதென்றும், செய்வதென்றும் புரியாது திகைத்தாள். அதே நேரம் கணேசன் ஓடி ஒளிய இருந்த பக்கமிருந்து ஹெலி மீண்டும் இராட்சசத் தும்பி போல பறந்து வரத்தொடங்கியது. மதிய சூரிய ஒளி, ஹெலியில் பட்டுத்தெறித்துக் கண்களைக் கூச வைத்தது.

கணேசனுக்கு ஓடி ஒளிய அவகாசமில்லை. பொறியில் சிக்கிய புலியின் நிலை...என்ன செய்வதென்று திகைத்துக் கணேசன் நின்றான்.

"முருகா... அவனுக்கு எதுவும் நடக்கக்கூடாது... பத்தாண்டு போராட்டப் பாதையில் ஏற்படாத பயங்கரச் சூழல்...! அவனை இழந்தால் ஒரு பட்டாளத்தை இழந்ததுக்கு ஒப்பு.....! பல வருடப் பின்னடைவு....! அவன் தமிழருக்கு வேண்டும், தமிழரின் சொத்து... அதற்கும் மேல...! மேல...!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணி, அவனைவிட வேகமாய் முடிவெடுத்தாள். தீர்க்கமான முடிவுடன் கணேசனின் கையைப் பற்றி முழுப்பலத்துடன் மூர்க்கமாய் இழுத்தாள்.

“அண்ணை... உங்களைக் கும்பிடுறன்...! நான் சொல்லுறதை கேளுங்கோ. உங்களுக்கு ஒன்றும் நடக்கக்கூடாது. மறுக்காம வீட்டுக்குள்ள வாங்க சொல்லுறன். இதுக்குள்ள ஒளியுங்க...! மற்றத நான் பார்த்துக் கொள்ளுறன்...” என்றதுடன் நில்லாமல் அவனை ஒரு ஆணின் பலத்துடன், தர...தர... என இழுத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

நெல்லைச் சொரியலாய்க் கொட்டுவதற்காக எப்போதோ அமைக்கப்பட்ட பழங்கால மரப் பெட்டிக்குள் அவனைப் படுக்க வைத்தாள். கைக்கு அகப்பட்ட பழைய, புதிய துணி மணிகளை அவன் மேல் குவித்து நிரப்பி மூடினாள்.

கணேசன், வாய் திறக்க அவள் இடமே கொடுக்கவில்லை. அறைக் கதவைச் சாத்தியவளுக்கு, அடுத்து என்ன செய்வதென்று சிந்தையில் பொறிதட்டியதும், கதவைப் பரக்கத் திறந்துவிட்டாள். ‘ஆமி’ சந்தேகப்பட அதில் சாத்தியக்குறைவு இருப்பதாக மனதுக்குள் முடிவெடுத்தாள்

வெளியே வந்தபோது, கணேசன் வந்த திசையிலிருந்து நாலைந்து இராணுவத்தினர் பூரணியின் வீட்டை நோக்கி, வெருண்டோடும் முயலை வேட்டையாடத் துடிக்கும் வேட்டை நாய்கள் போல பாய்ந்து வருவது தெரிந்தது.

“இனியும் தாமதிக்கக்கூடாது....!”

பூரணியின் மனம் பதகளித்தது. தன்னைத் திடப்படுத்திக் கொண்டு செயலில் இறங்கினாள். பலிக் கிடாவை மஞ்சள் நீராட்டி பூசைக்குக் கொண்டு போவதுபோல, கிணற்றிலிருந்து....தபக்...

தபக்...என்று வாளி நீரை அள்ளி உடலில் ஊற்றிக்கொண்டாள். உடம்பு தொப்பாய் நனைந்து, உடைகள் உடலோடு உடலாய் ஒட்டிக் கொண்டன.

அது போதும் அவளது எண்ணம் நிறைவேற. அதே வேளை, முயலை வேட்டையாடத் துரத்தும் வேட்டைநாய்களும் அவளை நெருங்கி விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை இயல்பாக்கி, அவர்களைப் பார்த்து வறட்சியாக முறுவலித்தாள். ஈரத்தால் நனைந்த உடைகள், உடலோடு உடலாய் ஒட்டிப் பருவத்தின் பூரிப்பை, அங்குல அங்குலமாய்- அங்கம் அங்கமாய் வெளிக்காட்டின.

வேட்டை நாய்களின் வெறிப்பார்வையின் முன்னே பலி ஆட்டுக் குட்டியாய் அவள்......

"ஏய்... தங்காச்சி...ஒரு கொட்டியா (புலி) இந்தப் பக்கமா ஓடி வந்தான். நீ பாத்தியா? " இளைத்தபடி ஒருவன், கொச்சைத் தமிழில் கேட்டான். அவனது பார்வை அவளது பருவ உடலை வெறிப் பசியுடன் சல்லடை போட்டது.

"இல்லையே மாத்தயா..."

அவளது குரல், பதற்றமில்லாமல் ஆனால் செயற்கையாய் ஆழ் கிணற்றில் இருந்து ஒலிப்பது போல் தேய்ந்து ஒலித்தது.

அது அவளுக்கே தெரிந்தது. ஆனாலும் கலங்கவில்லை.

அடுத்த கட்டமாக வீட்டுக்குள் மெல்ல சாவகாசமாய் நுழைந்தாள். கடைக் கண்ணால் தன் பின்னே இராணுவத்தினன் வருகின்றானா என நோட்டமிட்டாள்.

அவர்களில் ஒருவன் சிங்களத்தில் சொன்னான்,

"நாங்க முன்னுக்குப் போய் தேடுறம்... நீங்க வீட்டுக்குள்ள போய் பார்த்துவிட்டு வாங்க...."

பூரணிக்கும் கொஞ்சம் சாட மாடையாய் சிங்களம் புரியும் என்ன நடக்கப் போகுது என்பதையும் பட்டவர்த்தனமாய்ப் புரிந்து கொண்டாள்.

"முருகா...! அண்ணையக் காப்பாத்து....." அவளது மனம் ஊமையாய்க் கரைந்துருகியது. அவர்களை, கணேசன் மறைந்திருந்த அறைக்குள் போக விடவில்லை.

நனைந்த உடையை, மாற்றும் சாக்கில் உடலிலிருந்து நழுவ விட்டாள். பூரணி, எதை எதிர்பார்த்தாளோ அது நடந்தது.

சூடான முரட்டுக்கரம் அவளது தோளைப் பற்றியது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணி பதறவில்லை... உதறவில்லை..... நடக்கப் போவதை எதிர்பார்த்த ஏகத்தாள நிலை......

"மச்சான்....குட்டி மடங்குது....நீ வெளியில போய் நில்லு...."

பலி ஆட்டுக்குட்டியாய் பூரணி சடலமாய் நிலத்தில்.......

கண நேரம் நரகமாய்க் கழிந்தது.......

சிரித்துக் கொண்டே வெளியேறி ஓடி மறைந்தன வேட்டை நாய்கள்....

மலத்தை உடல் முதுவதும் அப்பிக்கொண்ட அருவருப்புடன் எழுந்தாள் பூரணி.

நடைப் பிணமாக மீண்டும் கிணற்றடியை நாடி நடந்தாள்.

வாளியை எடுத்து நீரை அள்ளி, மீண்டும் மீண்டும் உச்சியில் ஊற்றிக்கொண்டாள்.

மனமும் உடலும் சில்லிட்டு உறைந்தது.

எவ்வளவு நேரந்தான் பிரமை பிடித்து ஊற்றிக் கொண்டாளோ அவளுக்கே தெரியாது......

கணேசன் அறையை விட்டு வெளியே வந்து தடுத்த போதுதான் நிறுத்தினாள்.

அவனுக்கு எல்லாமே புரிந்துவிட்டது. இடிந்து சிதறிப்போனான்.

எவ்வளவு உயரிய தியாகத்தை கணப் பொழுதில் செய்து தன்னைக் காப்பாற்றி இருக்கிறாள் பூரணி.....என்பதை எண்ணிய போது, அவனது இதயம் வரண்ட நிலம் போல் வெடித்துச் சிதிலமாகியது.

உடல் உதறி... நடுங்கிப் புல்லரித்துப் புழு போல் துடித்தது் மனம் நாணப்பட்டது... கண்கள்... சாரை சாரையாய் நீரைச் சொரிந்தன.

செய்வதறியாது திகைத்து, பட்ட மரம் போல் நின்றான்.

பூரணி, அவனது நெஞ்சில் பூரணத்துவமாய் நிறைந்து தியாகத் தீயாய்க் கனன்றாள்.

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணே... அண்ணே... வாத்தியாரண்ணே....

கரடு முரடான கற்களைச் செதுக்கி, சிற்பங்களை உருவாக்கினேன். களி மண்ணைப் பதமாகக் குழைத்து, பல்லுருவங்களைப் படைத்தேன். பாடநேரத்தில் தவறு விட்டவர்களைத் திருத்துவதற்காகத் தண்டித்தேன். மற்றைய நேரங்களில் நண்பனாகப் பழகினேன்.

எனது சக ஆசிரியர்களைக் கூட, இளையோரோ, மூத்தோரோ 'ஐயா' எனப் பண்பாக அழைத்து மதிப்பளித்தேன். அது, நான் கற்ற கல்லூரியின் சிறப்பு் கற்பித்த ஆசிரியர்களின் ஆளுமை; பெற்றோர்களின் சீரிய வளர்ப்பு முறை.

எனது ஆசிரியர்களை முன் மாதிரியாக மனதில் நிறுத்தி, நானும் அவர்களைப் போலவே நல்லாசிரியராக வேண்டும் என்பதே எனது நெடுநாட்கனவு.

நான் ஆரம்பக் கல்வி கற்ற ஆலங்கேணி பாடசாலைக்கே முதல் நியமனமும் கிடைத்தது. பெருமகிழ்வுடன் கற்பித்தலை ஆரம்பித்து, மனத்திருப்தியுடன் தொடர்ந்தேன்.

ஈராண்டுச் சேவையின் பின், பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்குத் தெரிவாகி, அங்கும் ஈராண்டு விசேட பயிற்சி பெற்று கல்விச் சேவையை திருமலை இந்துக் கல்லூரியில் தொடர்ந்தேன்.

○••••••○

நாட்டில் அரசியல் சூழல் குழப்ப நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அரசியல் சூறவளியில் சிக்கி, தவிர்க்கமுடியாத சூழலில் வெளி நாட்டுக்கு வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் போலவே, புலம் பெயர்ந்து வந்து, ஒரு குரு நிலையில் உடைந்து விட்ட உள்ளங்கள் சார்பில் எனது அனுபவங்களை இங்கு பகிர்ந்து கொள்கின்றேன்.

36-வருட அஞ்ஞாத வாழ்வின் பின்னர், அரசியற் சூறாவளி சற்று அமைதியடைந்ததும், எனது நகரான திருமலைக்குத் திரும்பியிருந்தேன்.

## அனுபவம்-01

ஊரில் பல்வேறு மாற்றங்கள். ஆட்களிலும் கூடத்தான். பலரையும் அடையாளம் காணமுடியாத, வேற்றினரான தோற்றம்.....

மிக நீண்ட காலமானது, அங்கிங்கெனாதபடி சகலவற்றிலும், பல விதத்திலும் தன் கைவரிசையைக் காட்டியிருந்தது.

என்னையும் பெரும் பாலானோர் அடையாளம் காணத் தவறினர். மிக நீண்ட காலத்துக்குப் பின் பலரையும் ஆர்வத்துடன் தேடித்தேடிச் சென்று பார்த்தேன். ஆரம்பத்தில் அதனையிட்டு மகிழ்ந்தாலும் மிக விரைவிலேயே, ஏன் வந்தோம் என்ற சிறிய வெறுப்பும், நிராசையும் என்னை ஆதங்கப்படுத்தி ஆட்கொண்டன.

நான் வந்ததையறிந்து, சிவமணி என்றொரு முன்னாள் மாணவி, தனது, கணவருடன் பார்க்க வந்திருந்தாள். வந்த உடனேயே" எப்படி அண்ணே இருக்கிறீங்க?" என்றாளே பார்க்கலாம்.

அவள் தற்போது உயர்ந்த நிலையில் இருக்கிறாளாம். படிப்பித்த ஆசிரியருக்கு இப்போதெல்லாம் மரியாதை கொடுக்கவேண்டிய அவசிய மில்லை என்பதே அவளது கணிப்பு; அதுவே எனது அனுமானம்.

மனதில் முகைவிட்டிருந்த மகிழ்ச்சி, வெண்ணெய்யின் வழு வழுப்பில் சரேலென வழுக்கி நழுவியது. அவள் என்னைக் காண வராமலிருந்திருக்கலாம்.

என்னிடம், ஊரில் கல்வி கற்றவள் அவள். எனது கிராமப் புறப் பாடசாலையில் மாணவ மாணவிகள், ஆசிரியர்களை, "ஐயா" என அழைக்கவே கற்றுக் கொடுத்திருந்தனர்.

ஆனால் இன்று, எனது மாணவிதான் "அண்ணே" என வறட்டுக் கௌரவத்தில் நாக்கூசாமல் அழைத்தாள்.

எதிர்பார்ப்பு, ஊதிப் பருத்த பலூனாய் "டப்" என வெடித்துச் சிதறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது முக மாற்றம் அவளுக்கும் மனதை உடனே உறுத்தியிருக்க வேண்டும். விரைவாகவே விடைபெற்று அகன்றும் விட்டாள்.

## அனுபவம்-02

அதே நாளில்....ஒரு தொலை பேசியழைப்பு....

தங்கை வீட்டில் தங்கி நின்றேன். அழைப்பை நானே எடுத்தேன்.

"ஹலோ... அண்ணே..! நான் கமலன் கதைக்கிறன்...என்னை ஞாபகம் இருக்கோ..?" தொலைபேசியின் மறு முனையில் ஒருவன் கேட்டான்.

"கமலனா...? ஆர்...? எந்த... கமலன்....? "சந்தேகத்துடன் கேட்டேன். ஆனாலும் ஓரளவு ஊகித்துக் கொண்டேன்.

"மறந்திற்றீங்க...போலயிருக்கு...! நீங்க, யேர்மனியில இருந்து வந்து நிற்கிறதாகக் கேள்விப்பட்டன். அதுதான் விசாரிக்க எடுத்தன். நான் இப்ப கல்முனையில பிரபலமான அரசியல்வாதியாக இருக்கிறன்.... எப்பிடி சுகநலம் ?"

எதிர் முனைக் குரல் தன்னைப் பிரபலப்படுத்தி, அறிமுகப் படுத்தியது.

"அப்படியொரு கமலனை... ஞாபகமில்லையே...!" வேண்டு மென்றே நானும்.....

"அண்ணே...! நான் உங்களிட்டப் படிச்ச கமலன்... வைரவநாதனின் மகன்.."

"ஓ...ஓ...!.படிப்பிச்ச வாத்திமாரை... இப்பவெல்லாம்.. இஞ்ச, ஐயா...என்று கூப்பிடாமல், அண்ணே.... என்றா கூப்பிடுவீங்க...? கௌரவக் குறைச்சலோ ?"

நக்கலாகவே கேட்டேன். மனதுக்குள் வெறுமையாய்ச் சிரித்துக் கொண்டேன்.

"இல்லை... இல்லை... அப்பிடி ஒண்டுமில்லை... அண்ணே... ஐயா...! நான் இப்ப கல்முனையில் பெரியஅரசியல்வாதி... தொழில்அதிபர்... என்னிட்டவாறவங்களை... அண்ணே...அண்ணே....என்று கூப்பிட்டுப் பழகிப் போச்சுது...! "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரெண்டொரு நாளில், திருமலைக்கு வருவன், வந்து பார்க்கிறன்..." சட்டெனெ தொடர்பு துண்டிக்கப்பட்டது.

நீ வராமலிருப்பதே மேல் என நினைத்துக்கொண்டேன்.

## அனுபவம்-03

அடுத்த நாள்.......

ஒரு தொலை பேசியழைப்பு... எனது தம்பி உதயன் தொடர்பில் இருந்தான்.

"அண்ணா..! உங்களோட...ஆனந்தன் கதைக்க வேணுமாம்.." என்றவன் தொடர்பை மடை மாற்றினான்.

"ஹலோ... அண்ணை..! நான்... சிவநாயகம்... கதைக்கிறன்.."

"ஆரது.... சிவநாயகம்..?" விளக்கமில்லாமல் வினவினேன்.

"நான்தான் சிவநாயகம்... அண்ணை..! உங்களிட்ட ஆலங்கேணியில படிச்ச சிவநாயகம்... நான்...! சத்தியமூர்த்தியின் இரெண்டாவது மகன்."

"நீங்க, முன்னர் படிப்பிச்ச, ஆலங்கேணி பள்ளியில இண்டைக்கு முக்கிய ஆலோசனைக் கூட்டம் ஒண்டு, என்ர தலைமையில நடக்குது... நீங்க படிச்ச, படிப்பிச்ச பள்ளிக்கூடம் தானே!. நீங்களும், பங்கு பற்றினால் கௌரவமாயிருக்கும். கட்டாயம் வரணும். இது அன்புக்கட்டளை..."

அட...அறுவானே..! இதுதானா கௌரவம்? கண்ணாடி போல நொறுங்கியது நெஞ்சம்... முன் பின் யோசிக்கவில்லை.

"எனக்கு...நேரமில்லை... தம்பி!."

தொடர்பை நானே துண்டித்தேன். மனம் குன்றிக் குமைந்தது. இப்படி ஒரு சீரழிந்த கௌரவம் எனக்குத் தேவையா?

## அனுபவம்-04

அடுத்த நாள் பிற்பகல்.....

திருமலை, உள்துறை முக வீதியில் காலாற நடந்து கொண்டிருந்தேன்.

கடலையும் 'பிறீமா' மா ஆலையையும், துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பல்களையும் பார்த்து இரசித்தபடியே, குளிர்ந்த கடற்காற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்ந்தபடியே நடந்து சென்று கொண்டிருந்த என்னைக் கடந்து விரைவாகச் சென்ற கார் ஒன்று, கிறீச்சிட்டு நின்றது. தொடர்ந்து, கார் கண்ணாடியும் கீழிறங்கியது; ஒரு தலை எட்டிப் பார்த்தது.

"சேர்..! நீங்க...லிங்கம் சேர்தானே..? யேர்மனியில் இருப்பதாகத் தெரியும். எப்ப வந்தீங்க..? கன காலதுக்குப் பிறகு பார்க்கிறன்.."

காரிலிருந்து எட்டிப்பார்த்த ஒருவர் புன்னகைத்தவாறே என்னிடன் வினவினார். எனக்கோ, சரியாக அடையாளம் பிடிபடவில்லை. அவர், என்னை அடையாளம் கண்டது போல், என்னால் அவரை, உடனே அடையாளம் காண முடியவில்லை.

பீற்றராக இருக்கும் போலிருந்தது. என்னிடம் படிக்காத யோசெப் கல்லூரி மாணவன். உதைப் பந்தாட்டத்திலும், விளையாட்டிலும் அசகாயசூரன்.

அவனது புன்முறுவல் அடையாளப் படுத்தியது.

நானும் முறுவலித்தேன்.

"சேர்! நான், பீற்றர்! ஞாபகமிருக்குதோ?! வாங்க ..சேர்.. காரில... ஏறுங்க! எங்க போக வேணும் எண்டு சொல்லுங்க ! உங்கள.. கொண்டு போய் விடுறன்." விநயமாகக் கேட்டான்.

"இல்ல- இல்ல...பீற்றர்.! நான் காலாற நடக்க வேணுமென்று நடக்கிறன். கேட்டதுக்கு நன்றி .! நல்லா இருக்கிறியா?" புன்னகையுடன் கேட்டேன்.

"ஓம் ஓம் !கர்த்தர் கிருபையில நல்ல சுகமாய் இருக்கிறன்.. சேர்!... சரி..சேர்...! போறதுக்கு முன்னம், என் வீட்டுக்கும், கட்டாயம் ஒரு நாள் வரவேணும். இந்தாங்க எனது வீட்டு விலாசம். "தனது விலாச அட்டையை என்னிடம் தந்து விட்டு மறைந்தான்.

உள்ளம் பனி போல் குளிர்ந்தது. படிப்பித்த மாணவரால் ஏற்பட்ட ஊமைக் காயத்தை, படிப்பிக்காத வேற்றுக் கல்லூரி மாணவன் ஒருவன் இதமான வார்த்தைகளால், மயிலிறகால் வருடுவது போல ஒத்தடமிட்டான். அவனை மனதுள் பாராட்டி வாழ்த்தினேன். மனதில் பெரும் பாரம் குறைந்தது போல இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவம்-05

நான், பெர்லினில்1980-இல் கால் பதித்தவன். ஈழத்திலிருந்து வந்தவர்கள் யாவருமே அரசியல் தஞ்சம் கோரியவர்களே. என்னுடன் சேர்த்து, மேலும் சில ஆசிரியர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும், ஓரளவு படித்தவர்களும் உள்ளடக்கம். பெரும்பாலானவர்கள் கல்வியறிவு குறைந்தவர்கள். ஆங்கிலம், கொஞ்சமும் தெரியாதவர்கள்.

யேர்மனியில், ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருந்தது. உதவும் சுபாவம் உடைய என்னையே பெரும்பாலானவர்கள் மொழி பெயர்ப்புக்காக நாடினர். வக்கீலைப் பார்க்கவோ, மருத்துவரிடம் போகவோ என் உதவி அவர்களுக்கு அடிக்கடி தேவைப்பட்டது.

ஆங்கிலம் தெரிந்த மற்றையோர், அலுப்புடன் மறுத்துவிடுவார்கள். அதனால் யாவற்றுக்கும் நானே. வந்தவுடன், யேர்மன் மொழியும் கற்கத் தொடங்கியிருந்தேன். அதன் மூலம், எனக்கு வேலை வாய்ப்பும் கிட்டியது.

நிரந்தர வதிவிட அனுமதியும், வேலை வாய்ப்பும் கை கூடி வந்ததால், கையில் பணமும் தாராளமாகப் புழங்கியது. காசு கை மாறுவதும், கடன் கொடுப்பதும் எனக்கு வாடிக்கையாகியது.

அப்படி காசு கடன் பட்டவர்களில், ஒருவன்தான் தேவன்.

சிறிது சிறிதாக, பணம் கைமாறியவன், எனது பலவீனம் அறிந்து, பெருந் தொகையாகவும் வாங்கினான். தரும்போது பகுதி பகுதியாகவே தருவான். வட்டி தருவதாகச் சொல்லுவான், ஆனால் நான் வட்டி வாங்குவதில்லை. அதுவே அவனுக்குச் சகாயமாகியது.

தேவன் மிகவும் சுறு சுறுப்பான வாலிபன். மாஸ்ரர்... மாஸ்ரர்... என்று வளைய வளைய வருவான். புன்னகையும், தேனொழுகும் பேச்சும் அவனிடம் நிரந்தரமாய்க் குடியிருக்கும். மற்றோரைக் கவர்ந் திழுக்கும் வசீகரத்துக்கு நிரந்தரச் சொந்தக்காரன்.

நாளடைவில், அவனது துணிச்சலான சுய முயற்சியால், பல்லினப் பொருட்கள் விற்கும் சிறியளவிலான கடை (யேர்மனில்- கியோஸ்க்) ஒன்றை வாடகைக்கு எடுத்து நடத்தினான்.

ஆரம்பத்தில் மந்தமான வியாபாரமும், நாளடைவில் விருத்தியும் பெற்றது. மது, சிகரெற், சொக்கிலேற், சிப்ஸ் வகைகள் அமோகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகின. 'இன்ரநெற்' விரிவு பட்ட சேவையையும், 'மணி கிராம்' துரித பணமாற்றுச் சேவையையும் ஆரம்பித்தான்.

சுறு சுறுப்பான வியாபாரத்தால், இரண்டு விற்பனையாளர்களையும் நியமித்தான். பணம் பெருகப் பெருக தேவனிடம், திமிரும் முளைவிட்டு வளர்ந்தது. நட்பு வட்டம் சுருங்கியது. மூத்தோரையும், மதிக்கவேண்டிய வர்களையும் உதாசீனப் படுத்தினான்.

நீங்கள் என்றவர்களை, 'நீ'என ஒருமையில் அழைக்கும் அளவுக்கு மாறினான். அதிகம் ஏன்?,.. மாஸ்ரர்... மாஸ்ரர்... என என்னிடம் வழிந்து குழைந்தவன், பண உதவிகள் பெற்ற, என்னையே, "அண்ணே... நீ..." என அழைக்கும் அளவுக்கு, தன்னை உயரப் பறக்கும் ஊர்க் குருவி என எண்ணிக்கொண்டான்.

"உயர உயரப் பறந்தாலும், ஊர்க் குருவி பருந்தாகமாட்டாது" என்பதைக் காலம் அவனுக்குக் கற்பிக்கும் என்பது திண்ணம்.

○••••••○

நான் வெளியே போகும் போது எப்போதும், தோளில் ஒரு சிறிய பையை மாட்டிக் கொள்வது வழக்கம். அவனது கடைக்குப் போகும் போதும் அவ்வாறே போவேன்.

அங்கு விற்பனையாளராக இருந்தவர்களிடம், என் மீது ஒரு கண் வைக்கும்படி அறிவுறுத்தியுள்ளான். அதன் அர்த்தம், அங்குள்ள பெறுமதியான மதுப் போத்தல் எதையாவது நான் களவாக மடக்கலாம் என்பதே அவனது எச்சை நினைப்பு. இதனைப் பின்னர்தான் அறிந்து கொண்டேன். அதனால் விலகிக்கொண்டேன்

எவ்வளவு மலினமான-கேவலமான அற்பன் அவன். அவனைப் போன்ற அழுக்குப் புத்தி, மற்றவர்களுக்கும் என நினைத்துவிட்டான் போலிருக்கிறது. மனம் வருந்தி மறுகியது. அவனது கடைப் பக்கம் போவ தையும், அவனைச் சந்திப்பதையும் முற்றாகவே தவிர்த்துக் கொண்டேன்.

காணாது கண்ட பணம், அவனை எவ்வளவு கீழ் நிலைக்குத் தாழ்த்தியுள்ளது. என்றாவது ஒருநாள் தன் போலிக் கௌரவத்தை அவன் உணரக்கூடும்

○••••••○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அனுபவங்கள், எனக்கு மட்டும் நடக்கவில்லை. தாயகத்திலும் கூட இன்று ஆசிரியர்கள் மீதான மதிப்பு, அன்றைய காலத்தில் இருந்ததை போல் இல்லாமை, மாணவர்களுக்கு கல்வியின் மேலான அக்கறையினை இழக்கச் செய்யும் காரணிகளில் ஒன்று என்பது, அண்மைக்காலங்களில் வெளியாகும், பரீட்சை முடிவுகளின் வீழ்ச்சி ஆதாரப் படுத்தியுள்ளது, கவலைக்குரிய ஒன்றாகும்.

○••••••○

(ஆசிரியர் தினத்துக்காக எழுதப்பட்டு,
கனடா - மின்னிதழ் - தீபம் - சஞ்சிகை - அக்டோபர் - 07/2021 - இல் வெளியாகியது.
இதழ் ஆசிரியர் - மனு செல்லா - அவர்களுக்கு நன்றி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதியது எழுதியபடி....

இலண்டன் மாநகரின் பிரதான வீதியொன்றில் அமைந்திருந்தது நாதனின் 'ஓப்கு' லைசென்ஸ் கடை... சிறியது என்றாலும், சுறுசுறுப்பான வியாபாரம் எப்போதுமே நடக்கும்.

நாதன், ஈழப் பிரச்சனை சூடு பிடிக்கத் தொடங்கிய காலகட்டத்திலேயே பார்த்த நல்ல அரசவேலையையும் விட்டுவிட்டு இங்கு வந்து விட்டான்.

ஆரம்ப காலத்தில் மிகவும் இடர்ப்பட்டான். பார்த்த நல்ல வேலையை விட்டு விட்டு வந்தது புத்திசாலித்தனம் இல்லையோவென தனக்குள்ளாகப் புலம்பிக் கொள்வான்.

வதிவிடஅனுமதி கிடைக்கும் வரை, அங்கிங்குவென கிடைத்த வேலைகளைச் செய்தான். நன்றாய்ப் பழகிய நண்பன் முரளியின் கடைதான் இப்போதிருப்பது. முரளி, வேறு நல்ல கடை கிடைத்ததும், நாதனிடம் இதைக் கொடுத்துவிட்டான். நாதனும் பிரயாசையுடன் உழைத்து, கடனையுமடைத்து தன்னுடைமையாக்கிக் கொண்டான். நாதனுக்கு எல்லாமே ஏறு முகம்தான்.

ஆனால் கல்யாணக் காட்சிதான் எட்டாக் கனியாயிற்று.

தலை முடி நரைத்ததுடன், உதிரவும் ஆரம்பித்தன. ஊரில் பார்த்ததோ, நண்பர்கள் பார்த்ததோ எந்தப்பெண்ணும் சரிப்பட்டு வரவில்லை. நண்பர்கள் எவ்வளவோ எடுத்துரைத்தும் அசமந்தமாகவே இருந்தான். கடையின் வேலைச் சுமையும், வயதேற்றமும் வெறுப்பையும் விரக்தியையும் விரவச் செய்திருந்தன.

முரளியின் ஆலோசனைப்படி, உதவிக்குப் பகுதிநேரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரையாவது எடுக்கத் தீர்மானித்திருந்த போதுதான் வனிதா வந்து குறுக்கிட்டாள். அவளும் ஈழந்தான். பிறந்து வளர்ந்த இடம் திருமலை.

நாதனின் கடைக்கு அடிக்கடி வருவாள். 'லைக்கா போன்கார்ட்' வாங்கிக் கொண்டுபோவாள். உயர் கல்வி கற்க வந்திருந்தாள்.

வனிதா, சராசரி அழகிதான். ஆனாலும், கண்வெட்டாமல் பார்க்க வைக்கும் கவர்ச்சி நிறையக் குவிந்து கிடந்தது. நாதன், அவளைப் பார்த்து ஜொள்ளு விட்டாலும் வனிதா, மெலிதான மாயப் புன்னகையுடன் பேச்சை அளவாக அளந்தே கதைப்பாள். இப்படியும் ஓர் அடக்கமான பெண்ணா என வியந்து மனதுக்குள் சிலாகிப்பான். இப்படியொருத்தி கிடைத்தாலும்......என அங்கலாய்த்ததும் உண்டு

எப்போதும் போலவே அன்றும் வந்திருந்தாள். ஆனாலும் அன்று, பார்த்தவுடன், சடாரெனப் புரிந்து கொள்ளக் கூடியதான கவலை, கருமேகமாய் வதனத்தில் அப்பட்டமாகக் கவிந்து கிடந்தது. கேட்போமா, வேண்டாமா என்ற தயக்கம் மனதில் இயல்பாய் எழுந்தாலும், அசட்டுத் துணிச்சலில் கேட்டே விட்டான்.

"வனிதா! கேட்கிறேன் எண்டு குறை எண்ணாதீங்க. ஏதாவது பிரச்சனையோ?"

வனிதா, உடனே பதில் சொல்லவில்லை. கணநேரத் தயக்கத்தின் பின், அவளது கண்களில் ஓர் அசாதாரணம் இழையோடிற்று.

"எனக்கொரு பகுதிநேர வேலை உடனே தேவை. இதுவரை செய்த வேலையை கொறோனாவால், நிற்பாட்டிற்றாங்கள். என்ர அறைத் தோழியும், தன்ர நண்பரோட சேர்ந்திருக்கப் போறாள். என்ன செய்யுற தெண்டே தெரியல்ல. "றூமுக்கு தனியாக வாடகை கட்டுவதென்பது இயலாத காரியம்" சொல்லும் போதே, குரல்கம்மி கண்கள் பனித்தன.

நாதனுக்குக் காட்டாதிருக்கக் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டாள். ஆனால், நாதன் அவற்றைக் கவனிக்கத் தவறவில்லை.

வாடிக்கையாளன் ஒருவன் வரவும், நாதன் அவனைக்கவனித்தான்.

அந்த இடைவெளியில், வனிதா தன்னை முற்றிலுமாக ஆசுவாசப் படுத்திக் கொண்டாள். செயற்கையான சிறு முறுவல், வலுக்கட்டாயமாக வதனத்தை மேவிப் படர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளன் அகன்றதும், வனிதாவைத் தேற்றும் தோரணையில்,

"வனிதா! நாளைக்கு மதியம் வரமுடியுமா? ஆறுதலாகக் கதைக் கலாம். என் நண்பர்களிட்டயும் விசாரிக்கிறன். அநேகமாக, சரி வருமெண்டு நினைகிறன்"

அதைக் கேட்டதும், வனிதாவின் முகத்தில் நம்பிக்கைக் கீற்று முகைவிட்டு அலர்ந்தது.

"சரி! நாளைக்கு வாறன் சேர். " என ஈனசுரத்தில் சொல்லிக் கொண்டே அகன்றாள். அவள் போவதையே கண் வெட்டாமல் பார்த்தான்,

நாதனின் சிந்தையில் யோசனை பின்னிப் பிணைந்து சதுராடிற்று.

பசி,வயிற்றைச் சுரண்டிற்று. கடைவாசலில் வந்து இரு மருங்கும் நோட்டமிட்டான். ஆள் அரவம் அடங்கிக் கொண்டிருந்தது. கடையைப் பூட்டும் தீர்மானத்துடன் தட்டியைக் கீழிறக்கினான்.

சாப்பிடலாமென சமையறைக்கு வந்து லைற்றைப் போட்டவுடன், அங்கு, வழமைபோல ஓடித்திரிந்த கரப்பான் பூச்சிகள் ஓடியொழிந்து மூலைமுடுக்குகளில் புகுந்து மறைந்தன. அவற்றை அவன் ஒருபோதும் பொருட்படுத்துவதே இல்லை

நமது நாட்டவரின் சமையல் வாசனை அவற்றிற்குப் பிடித்தமானது போலும். நம்மவரின் சமையலறைகளில் கரப்பானைக் காணாவிட்டால் அது பெரிய அதிசயமே.

○••••••○

நாதன், வியர்வை நாற்றம் போக, காக்கைக் குளியல் போட்டு விட்டுவந்து, வழமைபோல் 'ரெட்வைனை' ஊற்றி உறிஞ்சிக்கொண்டே நண்பன் முரளிக்கு போனில் அழைப்பையெடுத்தான்.

வனிதா வந்ததையும் வேலை, வீடு பற்றியவற்றையும் விபரித்தான். முரளிக்கும் வனிதாவைத் தெரியும். முரளி உடனே,

"அடேய் ! மண்டு! நான் எப்போதிருந்தோ சொல்லிக்கொண்டு இருக்கிறன்.. உதவிக்கு ஒரு ஆள் எடு.. எடுவெண்டு. நீ, நப்பித்தனம் பண்ணிக் கொண்டே இரு...இப்பவாவது முடிவெடு. அந்தப் பிள்ளைக்கும் உதவினதாகவுமிருக்கட்டும், உனக்குதவிக்கு ஆள்கிடைத்ததாகவுமிருக்கும். புண்ணியமாகப்போகட்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறிஞ்சிய 'வைன்' சிந்தையை முடுக்கிவிட்டது.

"சரிடா மச்சான். நீ சொன்னாச் சரிதான். நாளைக்கே வனிதாவை வேலையில் சேர்க்கிறன்." இப்போது, அவனது மனம் ஆறுதலடைந்தது.

நாதனுக்கு, அடுத்தநாள் விரைவாகவே விடிந்தது போலிருந்தது. மதியமும் வந்தது.

வனிதாவும், புன்னகையுடன் வணக்கம் செல்லிக்கொண்டு உள் நுழைந்தாள்.

நிவாரண உதவியை எதிர்பார்க்கும் ஏதிலியின் ஏக்க எதிர் பார்ப்பைப் போல் வனிதாவின், முகம் வாடி வதங்கியிருந்தது. நாதனும் புன்னகைத்தான்.

"என்னிடம் வேலை செய்ய விருப்பமா? அதுவும் இன்றையி லிருந்தே..." புன்னகையுடன் கண்களைச் சிமிட்டிக் கொண்டே கேட்டான்.

அதைக்கேட்டவுடன், அவளின் கண்கள் அகன்று விரிந்தன. குரல் தளதளக்க, கண்கள் ஆனந்தக் கண்ணீர் பனிக்க, வார்த்தைகள் திக்கித் திணற...

"எப்படி நன்றியைச் சொல்வதென்று தெரியல்ல..." என்றாள். அவளால் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. அவளடைந்த அதிர்ச்சியான ஆனந்தத்தை அவன் அளவிட்டுக் கொண்டான்.

"றூம் பற்றி பிறகு பார்ப்பம் " என்றான் நாதன்.

○•••••○

ஆயிற்று......

முதலில், 'காஷ்மெஷினை' எப்படிக் கையாளுவது என்பதை விளக்க முயன்றான். வனிதா, நாதனுக்கு தண்ணீர் காட்டினாள். நாதன், அசடு வழிந்தான்.

"ஓ.....நான்தான் உங்களிட்டப் பாடம் படிக்கணும் போல..."

தொடர்ந்து, வனிதாவையே கடையை நடத்தும்படி விட்டு விட்டு, அவதானித்துக் கொண்டிருந்தான். வனிதாவுக்கு முன்னனுபவம் இருந்ததால் பதற்றமின்றி சிறப்பாக வேலை செய்வதைப் பார்த்துப் பரமதிருப்தியடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கு, எத்தனை மணித்தியாலங்கள் முடியுமோ செய்யலாம். சம்பளம் பார்த்துத்தாறன்." என்றான் நாதன்.

வனிதா புன்னகையுடன் தலையாட்டினாள். ஓய்வாக நின்றபோது, கடையின் பிற்பக்கமிருந்த சமையலறை, குளியலறை, இரண்டு சிறு படுக்கையறைகளை நாதனின் அனுமதியுடன் துப்பரவாக்கி ஒழுங்கு படுத்தினாள்.

நாதன் பிற்பக்கம் வந்து ஆர்வத்துடன் நோட்டமிட்டபோது, ஆச்சரியப்பட்டுப் போனான். அடுப்பு, குளியலறை எல்லாமே பளிச்சிட்டன. படுக்கையறைகளும் மிளிர்ந்தன.

ஊதுபத்தி சாம்பிராணியின் சுகந்தம் எங்கும் வியாபித்து மூக்கைத் துளைத்துக் கமகமத்தது. பெண்களின் கைபட்டாலே எல்லாமே பொன் போல பளிச்சிடுமென்பதைக் கண்கூடாகக் கண்டு, மனதுக்குள் வியந்தான்.

வியாபாரம் ஓய்ந்தபோது, வனிதாவை வீட்டுக்குப் போகவிட்டுக் கடையை மூடினான். உடனே, முரளிக்குப் போனெடுத்தான்.

"மச்சான், முரளி...!அருமையான பிள்ளடா....திறமான வேலகாரிடா" என்றான் புழுகத்துடன்.

"அப்ப பிறகென்ன? தொடர்ந்து வைச்சிருக்கவேண்டியதுதானே." என முரளியும் ஆமோதித்தான்.

இதை எப்போதோ செய்திருக்கலாமென மனதுக்குள் ஆதங்கப் பட்டுக் கொண்டான் நாதன்.

அடுத்தடுத்த நாள் வனிதா வேளைக்கே வரத்தொடங்கினாள். கூட்டம் ஓயும்போது வீடு சென்றாள்.

○••••••○

நாட்கள் நகர்ந்தன.

வனிதா மீது நம்பிக்கையும், பற்றும், பாசமும் அவனையறி யாமலேயே துளிர்விட்டுப் படர்ந்தன. அவளில்லாவிட்டால் கையொடிந்த நிலை ஏற்படுமோ என்ற இனம்புரியாத அச்சவுணர்வு அடிக்கடி மனதி லெழுந்து அடங்கிற்று.

இருவருமே அந்நிய உணர்வைத் தவிர்த்து அந்நியோன்யமாகப் பழகத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைச்சாப்பாடு எடுப்பதைத் தவிர்த்து கடையிலுள்ள சமையல றையில், சமைக்கலாமேயென்ற யோசனையை வனிதா சொன்னதும், நாதனுக்கும் அது உகந்ததாகவேபட்டது.

"என்றாலும் உங்களுக்கு ஏன் வீண் சிரமம்" என்றிழுத்தான்.

"ஒரு சிரமமுமில்ல, ஒரு அரைமணி நேரம் காணும். என்ன சமைக்கணுமெண்டு மட்டும் சொன்னாச் சரி" என்று உற்சாகமானாள்.

"உங்களுக்கு எது லேசோ... எதையாவது சமையுங்க.... ஆனா லொண்டு, உங்களுக்கும் சேர்த்தே சமையுங்க..." வனிதாவும் தலையாட்டிக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்தாள். அங்கு என்னென்ன சாமான் சக்கட்டுகள் இருக்கிறதெனநோட்டமிட்டாள். திடீர்சமையலாக, பருப்பு, கிழங்குக்கறியுடன், சொதி, அப்பளத்துடனும் சாப்பாடு தயாரானது.

முதலில் நாதனுக்குப் பரிமாறியபோது, சப்புக்கொட்டிச் சுவைத்துச் சாப்பிட்டான்.

"இவ்வளவு சுவையாகச் சமைத்திருக்கிறீங்களே...!" எனப் புகழ்ந்தான். அடுத் தடுத்த நாட்களில் வேலைக்கு வரும் போதே, இறைச்சி, மீன் வகைகளையும், மரக்கறிகளையும் விதவிதமாக வாங்கிவந்து சமைத்துப் போட்டாள்.

நாதனுக்கு பெருமையும், திருப்தியும் உச்சிக்குத்தட்டின.

○•••••○

நாட்கள் நகர்ந்தன.....

அவர்கள் இருவரிடையேயும் அந்நியோன்னியம், முளைவிட்டு வியாபித்து, கொழுகொம்பைப் பற்றிப் படரும் கொடி போல் படர்ந்தது.

"கொறோனா", தொற்று அப்போதுதான் உருவாகிப் பரவிப் படர்ந்தது அதன் தீவிரமும் பரந்தது.

அச்சத்துடனேயே, முகக் கவசமணிந்தபடி கடையை அரைநாள் திறந்து வைத்தான் நாதன். பலதரபபட்ட வாடிக்கையாளர்களும் வந்து போகும் போது, அச்சத்துடனும், சந்தேகத்துடனும் வியாபாரம் செய்ய வேண்டியிருந்தது.

கடையை அன்று, வேளைக்கே அடைத்து, வனிதாவை வீட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பலாம் என்றிருந்த வேளை, சடுதியாக இடிமின்னலுடன் பெருமழை கொட்டோகொட்டென்று கொட்டத் தொடங்கிற்று.

மழையின் தீவிரம், கூடிக்கொண்டு போனதே தவிரக் குறைவதாகத் தெரியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் சலனமற்று நோக்கிக்கொண்டனர். கவலை இருளாய் இருவரையும் கவ்விக்கொண்டது.

"என்ன, இண்டைக்கு மழை விடுமாப் போல தெரியல்லயே" என்று நாதன் வனிதாவுக்கும் கேட்கக்கூடியதாக அங்கலாய்த்துக் கொண்டான். வனிதாவின் மனமும் பரபரக்கத் தொடங்கிற்று.

"வனிதா! இப்படியே மழை கொட்டிக் கொண்டிருந்தால், உங்களை வீட்டுக்கு அனுப்புவது எனக்கெண்டால் உசிதமாப்படல்ல." என்ற நாதன் சற்று தயக்கத்துடன் தொடர்ந்தான்,

"உங்களுக்கு ஆட்சேபனையில்லையெண்டால், மற்ற அறையில் தங்கலாம்தானே?....."

கேட்டுவிட்டு வனிதாவின் முகத்தை நோட்டமிட்டான். வனிதாவின் முகம் சலனமற்றிருந்தது. உடனே பதிலிறுக்க இயலவில்லை. சிலகணங்கள்,யோசித்தாள். அரைகுறை சம்மதத்துடன் தலையை மெல்ல ஆட்டினாள்.

மழை ஆக்ரோசமாக அழுது பொழிந்துகொண்டிருந்தது. செவியில் அறைவது போல் மின்னலுடன் இடிமுழங்கியது. இப்படியான ஆக்ரோச மழையை வனிதா இலண்டனுக்கு வந்தநாளிலிருந்து இதுவரை கண்டதில்லை கதிகலங்கினாள்.

ஏற்கெனவே துப்பரவாக்கியிருந்த அறைக்குள் நுழைந்து, படுக்கையைச்சீர் செய்தாள். பின்னர், சாப்பாட்டைச் சூடாக்கி இருவரும் பலதையும் கதைத்தபடியே ஒன்றாகவே சாப்பிட்டனர்.

பின்னர் சிறிதுநேரம் கதைத்துவிட்டு படுக்கைக்குச் சென்றனர்.

○••••••○

பொழுதும் விடிந்தது; மழையும் ஓய்ந்திருந்தது.......

பழக்கமில்லாத இடம், மனக்குழப்பங்களுடன் உறங்கிய வனிதா, நாதன் வைத்த அலாரத்துக்கு முன்பே எழுந்துவிட்டாள். தானே அரைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லி சீரகக் கோப்பியை கமகம மணத்துடன் போட்டுக் கொண்டு நாதனின் அறையை நெருங்கவும், அலாரமடிக்கவும் சரியாயிருந்தது.

சரி..., நாதன் எழும்பட்டுமென கதவருகே சிறிது தாமதித்தாள். ஆனால், அலாரம் நிறுத்தப்பட்டதே தவிர நாதன் அலாரத்தை நிறுத்திவிட்டு, இருமிக்கொண்டு புரண்டு படுத்தான். எழும்புவதுபோல் தெரியவில்லை.

வரண்ட இருமலுடன் தீனமான முனங்கல் ஒலி வனிதாவின் காதில் விழ தயக்கத்துடன் கதவை மெல்லத்திறந்து இடுக்கினூடே எட்டிப் பார்த்தாள். நாதன் போர்வைக்குள் நாய்குட்டி போல் வளைந்து சுருண்டு படுத்திருந்தான்.

"சேர்! ..சேர்!.." என மெல்லிய குரலில் கூப்பிட்டாள்.

"ம்..அம்மா..." என்ற அனுங்கல் ஒலி தீனமாய்க் கேட்டதே தவிர, நாதன் தலையைக் கூடத் தூக்கிப் பார்க்கவுமில்லை; கண் விழிக்கவுமில்லை; பதிலறுக்கவுமில்லை.

வனிதா அதிர்ந்தாள். ஐமிச்சத்துடன் அருகே நெருங்கித் தொட்ட சைத்து எழுப்ப முயன்றாள். அனுங்கல், இருமல், மூச்சிரைப்புடன் புரண்டுபடுத்தான்.

வனிதா, சந்தேகத்துடன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தபோது அதிர்ந்து விட்டாள். காய்ச்சல் அனலாய்க்கொதித்தது. இதயம் படபடத்தது.

"சேர், ...உடம்பு முடியல்லயா?" அவளது கேள்விக்கு இருமலே பதிலிறுத்தது. கொண்டுவந்த கோப்பியை வலுக்கட்டாயமாகக் குடிக்க வைத்தாள். உடனேயே, சமையலறையிலிருந்த சித்த ஆயுர்வேத மூலிகைக் குடிநீர் கலவையைக் கொதிக்க வைத்தாள். வடித்தெடுத்து நாதனைக் குடிக்கவைத்தாள்.

சூடான குடிநீர், கோப்பியெல்லாம் ஒன்று சேர்ந்து நாதனை தெம்பூட்டின. அவலமாக முறுவலித்தான்.

"உங்களுக்கு முதல்நாளே சிரமம் தாறன் போலிருக்கு...."

"சே..சே..! அப்பிடியொண்டுமில்ல. நல்லவேள, நான் இங்க தங்கினது.... நீங்க முகத்தைக் கழுவுங்க. நான் இடியப்பம் புழிந்து மிளகுச் சொதியும் வைக்கிறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது பதிலை எதிர்பார்க்காமலே துரிதமாகச் செயற்பட்டாள்.

கொறோனா தாக்கமாக இருக்குமோ? என்ற அச்ச உணர்வு மனதில் துளிர்விடவும் உடல் சிலிர்த்துக் கொண்டது.

"கொறோனாவாக இருக்கப்போகுது... தலையிடி, காய்ச்சல், இருமல், தொண்டைநோ, உடல்வலி, மூச்சிரைப்பு எல்லாமே ஒன்று கூடி வந்திருக்கு... நீங்கவேற இங்க நிற்கறீங்க....."என்று ஆதங்கத்துடன் அங்கலாய்த்துக்கொண்டு வனிதாவை ஏறிட்டு நோக்கினான்.

"சே...சே..! அப்படியெல்லாம் சொல்லாதீங்க. இது சாதாரண சளி, இருமல் காய்ச்சல்தான். இரண்டொரு நாளில குடிநீர் குடிக்கப் பறந்திடும் "

நாதனுக்குஆறுதல் படச் சொன்னாளே. தவிர அவளிடமும் அந்த அச்சவுணர்வு துளிர்விட்டிருந்தது.

உடல் ஒருமுறை சிலிர்த்து நடுங்கிற்று. முருகனை மானசீகமாய்ப் பிரார்த்தித்துக்கொண்டாள்.

நாதன், தனது நண்பனான 'டொக்டரை'ப் போனில்' அழைத்தான்.

தனக்கேற்பட்ட குணங்குறிகளை,டொக்டரிடம்விபரித்தான். டொக்டர், கடையைத் திறக்கவேண்டாமென்றும், சுயதனிமைப்படுத்திக் கொள்ளவும், தான் பின்னர் அவனை வந்துபார்ப்பதாகவும் கூறினார்.

அதனை வனிதாவிடம் கூறி, அவளை வீட்டுக்குப்போகச்சொன்னான். வனிதா ஒரேயடியாக மறுத்துவிட்டாள்.

"உங்கள இந்தநிலையில விட்டிற்று நான் ஒருபோதும் போக மாட்டன். வாறது வரட்டும். தலையில என்ன எழுத்தோ, எழுதினபடியே நடக்கட்டும். என்னைத்தெண்டியாதீங்க. உங்க கூடயிருந்தே கவனிக்கிறன்."

வனிதாவின் வார்த்தைகளிலிருந்த உறுதியும், பிடிவாதமும் நாதனை நெக்குருகச் செய்தன. அவளை வழிக்குக்கொண்டு வருவது இயலாது என்பது பட்டவர்த்தனமாய்ப் புரிந்தது.

சாம்பிராணி,குங்கிலியம் போட்டு, வீடுமுழுவதும் புகை காட்டினாள். முருகன் படத்துக்கு விளக்கேற்றி மனமுருகவேண்டிக்கொண்டாள்.

சில மணித்துளிகளில் மருத்தவ நண்பன் வந்து சேர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடமுள்ள கருவிகள் மூலம் பரிசோதித்தான். சந்தேகம் நிவர்த்தியாயிற்று.

பல ஆலோசனைகளைச் சொல்லி மருந்துவகைகளையும் கொடுத்தான். வனிதாவையும் விசாரித்து சிலநடை முறைகளைக் குறிப் பிட்டு அவதானமாயிருக்கும்படி அறிவுறுத்திவிட்டுச் சென்றான்.

நாதனைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்துக் கொண்டாள் வனிதா. நண்பன் முரளி, நேரே வருவதைத் தவிர்த்து விட்டு போனில் அடிக்கடி நலம் விசாரித்துக்கொண்டான்.

○•••••○

நாட்கள் நகர்ந்தன.

வனிதாவின் கவனிப்பால், நாதன் மனவுறுதியடைந்தான். தினமும் கசாயக் குடிநீர் குடித்ததாலும், போசாக்கு உணவுகளை உண்டதாலும் நல்ல ஓய்வினாலும் தெம்பையுணர்ந்தான். வனிதா, மிகவும் அவதானமாக நாதனைக் கவனித்ததோடு தன்னையும் கவனித்துக்கொண்டாள்.

நாதனுக்கு, பழையபடி உடலுறுதியடைந்தது. பூரண சுறுசுறுப்பைப் பெற்றான். மருத்துவ நண்பனும், நாதனை சோதித்துவிட்டு உறுதிப் படுத்திக்கொண்டான்.

வனிதாவுக்கு நன்றியை எப்படித் தெரிவிப்பதென அறியாது நாதன் திக்குமுக்காடினான். மனதுக்குள் கசிந்துருகினான். வேறு வீடு தேடுவதைக் கைவிட்டு இங்கேயே தங்கியிருக்கச் சொல்லிவிட்டான்.

வனிதாவுக்கு அளப்பரிய மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. தன்னை முருகன் கைவிட்டு விடவில்லையென முருகனைப் போற்றித் துதித்தாள்.

நாதன், நண்பன் முரளியிடம், வனிதாவைப் பற்றிப் புகழ்ந்து சிலாகித்தான். வனிதாவைப்பற்றிக் கதைக்காத நாளேயில்லையெனலாம் நாதனின் மனதைத் துல்லியமாய் அளவிட்டுக்கொண்டான் முரளி. நாதனுக்கு அவன்தானே முற்றமுழுதும். முரளி தன் மனைவியிடம் கலந்தாலோசித்து தீர்க்கமான முடிவையெடுத்தான்

நாதனையும், வனிதாவையும் இணைத்துவைத்தால் என்ன என்பதே அவர்களது யோசனை. நாதனிடம் பூடகமாக தங்கள் தீர்மானத் தைக் கூறவும், நாதன் புளகாங்கிதத்தில் முறுவலித்துக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்குள் மத்தாப்பு வண்ணக் கோலமிட்டது. இனியென்ன, வனிதாவின் சம்மதத்தைப் பெற்றால் சரி.

அன்று புதன்....பொன் கிடைத்தாலும் புதன் கிடையாதென்பார்களே!

நாதனே எதிர்பார்க்காதவிதமாக, முரளி தன் மனைவி சகிதமாய் வந்து நின்றபோது, நாதனின் கண்கள் ஆச்சரியத்தில் அகலவிரிந்தன. வனிதாவும் கேள்வி தொக்க முறுவலுடன் வரவேற்றாள். பரஸ்பரம் நலம் விசாரித்துக் கொண்டனர்.

முரளியின் மனைவி, வனிதாவின் கையைப்பிடித்து இழுக்காத குறையாய் அழைத்துக்கொண்டு வனிதாவின் அறைக்குள் நுழைந்தாள்.

பின்னர், முரளியையும் மனைவி அழைத்தாள்.

பல நிமிடத்துளிகள் கரைந்தன. கசமுசவென ஏதேதோ பேசிக் கொண்டனர். வனிதாவால் தன் காதுகளை கிஞ்சித்தும் நம்பவே முடிய வில்லை.

வார்த்தைகள் காதில் தேனீயாய் ரீங்காரமிட்டன. மகிழ்ச்சியில் கண்ணீர் பொலபொலவென ஊற்றெடுத்துப் பெருகியது.

"நாதனை கட்டிக்கொள்ளச் சம்மதமா?"

இந்த, ஓரிரு வார்த்தைகள்தான் வனிதாவின் ஆனந்தக் கண்ணீருக்குக்கான காரணம்.

"கொறோனா! நீ நல்லதோ கெட்டதோ, ஆனால், எனக்கு நல்லதே செய்திருக்கிறாய். எல்லாமே எழுதியது எழுதியபடியே..."

வனிதாவின் ஆழ்மனம் ஆர்ப்பரித்துத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டது.

அம்மாவுக்கு, நற்சேதி கூற கைபேசியை வருடினாள் வனிதா.

**(வீரகேசரி வார வெளியீட்டில் வெளியானது)**

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

# கசிப்பு

தங்கான் குழி கசிப்பு, என்றாலே, ஆலங்கேணி சுற்று வட்டாரத்தில் அதுக்கு நிகர் எதுவுமே இல்லை. அரசாங்க உற்பத்தியான கல்லோயா கரும்புச் சாராயத்தையும் விடத் தரம் வாய்ந்தது என மதுப்பிரியர்கள் வாய்ச் சவடால் அடிப்பார்கள்.

விலையும் குறைவு, தரமும் நிறைவு. கல்லோயா நாற்றமடிக்கும் நாட்டுச் சாராயம். அப்படியல்ல, பழவாசனை வீசுவதோடு, மது சாரச் செறிவும் அதிகம் என்பதும், ஒரு முடறு உறிஞ்சியதும் போதை 'ரொக்கெற்' வேகத்தில் உச்சிக்கு உடனே ஏறும் என்பதும், மதுப்பிரியர் களின் ஏகோபித்த உயர்வான அபிப்பிராயம்.

"சரி.!சரி...! ஒரு முறை குடித்துத்தான் பார்ப்போமே" எனச் சுவைத்தவர்கள், அதற்கு நிரந்தர அடிமையாகி விடுவார்கள் அப்படியொரு சிறப்பு அதற்கு. மதுப்பிரியர்கள் மன்றம் ஆரம்பிக்காதது ஒன்றுதான் குறை.

காவல் துறையினருக்கு, தனிக் கவனிப்புத் தாராளம் என்பதால், அச்சமில்லாமலும், இடையூறில்லாமலும் தொழிற் சாம்பிராச்சியம் கொடிகட்டிப் பறந்தது. கைலாசு, நாகன் இருவரும் தொழிலில் கூட்டு. அவர்களது முழு நேரத் தொழிலும் அதுவே.

நல்ல வருவாய். சம்பாத்தியமும் அள்ளிக் கொட்டியது. மற்றவர்கள் சிலரும், வடி காய்ச்சினாலும் அவர்களுக்குப் பிறகுதான்.

கசிப்புக்கு முக்கிய மூலப் பொருள் பேரீச்சம் பழம். அத்துடன் கண்ணில் பட்ட, கைக்குக் கிடைக்கும் முக்கனி முதற்கொண்டு அத்தனை பழங்களும் அதில் சேர்த்தி. அழுகிய பழங்கள் பெரிதும் விரும்பப்படும். ஏனெனில் எளிதில் நொதிக்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களே அவர்களின் விநியோகத்தர்கள். கள்ளச் சந்தையில் அவர்களுக்குப் போதியளவு பேரீச்சம் பழம் கிடைக்கும். அதுவும், இசுலாமிய நோன்புப் பண்டிகைக் காலங்களில், அறபு நாட்டின் இறக்குமதியான பேரீச்சம் பழம், மூடை மூடையாகக் கிடைக்கும். வாங்கிப் பதுக்கி வைத்துக் கொள்வார்கள்.

○••••••○

தியாகனுக்கு ஒருமுறை, சிறப்பான அநுபவம் வந்து வாய்த்தது. அவன், சுங்கான் குழியில் சேனை வேளாண்மை செய்தபோது தற்செயலாக ஏற்பட்டது.

அவனது வயல் அருகே ஒரு சுனை ஊற்று நீர் சிற்றோடையுண்டு. என்றுமே வற்றாத நீரோடையது. அதில் நீர் எடுக்கச் சென்ற போது, சற்றுத் தொலைவில் இருவரின் தலைக் கறுப்புத் தெரிந்தது.

ஓடையின் பக்கத்தே இருந்த, தவிட்டுப் பற்றை முக்காட்டுச் செடிகளின் இடையேயிருந்து இருவர் வெளியேறினர். கண்களை இடுக்கிக் கூர்ந்து பார்த்தபோதுதான், அது நாகனும், கைலாசும் என்பதை துல்லியமாய் ஊகித்துக் அடையாளம் கண்டு கொண்டான்.

ஆனால் அவர்கள், அவனைக் கண்டுகொள்ளவில்லை. ஓடை யருகேயிருந்த மருதை மரத்தில் தன்னை மறைத்துக்கொண்டான்.

"இவர்கள் எவருக்குமே இந்தச் சுற்றுவட்டாரத்தில் சேனைப் பயிரோ, வயலோ இல்லையே.? இந்தப் பக்கம் இவர்களுக்கு என்ன அலுவல்.?"

தன்னைத் தானே மனதுக்குள் கேட்டுக்கொண்டான். கேள்வி மனதைக் குடைந்தது ஆர்வம் மேலிட்டது.

அவர்கள் இருவரும், கசிப்பு வடிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தது தியாகன் அறிந்த சங்கதியே. ஒருவேளை, அதனால்தான் இங்கு பிரசன்னமோ?"

தியாகுவுக்கு அறியும் ஆவல் முகைவிட்டு மனம் பரபரத்தது.

அவர்களின் தலைக் கறுப்பு புள்ளியாய் மறையும்வரை பொறுமை காத்தான். மருதை மரத்தின் மறைவிலிருந்து வெளிவந்தான். அறியும் ஆவல் பீறிட்டுப் பொங்க, கால்களும், மனமும் துரு துருத்துப் பரபரத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எங்கேயிருந்து வெளியேறினார்களோ, அந்த முக்காட்டு மறைவிடத்தை நோக்கி ஓடாத குறையாக எட்டி நடந்து விரைந்தான்.

முக்காட்டுப் பற்றைக்குள் கூர்ந்து பார்த்தபோது, கண்கள் வியப்பில் அகலவிரிந்தன. அவனது ஊகம், பிசிறில்லாமல் மெய்ப்பட்டது.

கசிப்பு வடிப்புக்கான சகல உபகரணங்களும் அங்கே இருந்தன. இன்றுதான் அவன் யாவற்றையும் கண் நேரெதிரே பார்க்கின்றான். கேள்விப்பட்டிருந்த அத்தனை உபகரணங்களும் அவன் கண்முன்னே மடை பரப்பியிருந்தன....

தார் பீப்பா சாயலில், ஒரு பெரியளவிலான 'றம்' சணல் சாக்கால் மூடிக் கட்டப்பட்டியபடி காணப்பட்டது. இன்னொரு சணல் சாக்கு மூடைக்குள் வெற்றுப் போத்தல்கள் நிறைந்திருந்தன. இன்னொரு சாக்கினுள் தடித்த 'பிளாஸ்ரிக்'குழாய்கள், கறள் பிடித்த கம்பிச் சுருட்கள் அத்தனையும் அடக்கம்.

சாக்கினால் மூடிக் கட்டப்பட்ட பீப்பாவை, சணல் சாக்கை சற்று நீக்கி விலக்கிப் பார்த்தான். பேரீச்சம் பழங்கள், மற்றும் வேறுவகை பழங்களும் நிறைந்திருந்தன.

தியாகனுக்கு, பேரீச்சம் பழம் என்றால் கொள்ளை பிரியம். கையை உள்ளே விட்டு அள்ளி வாய்க்குள் பொது பொதெனத் திணித்தான் ஆசை தீரச்சாப்பிட்டான்.

திகட்டியது போலுணர்ந்ததும், கட்டியிருந்த சாறனில் கொடுக்குக் கட்டி, அதனுள் அள்ளி முடிந்தான்.

சரி..!. நாளைக் காலையில் மீண்டும் வருவோம் என முடிவெடுத்து தன் குடிலை நோக்கிப் போனான்.

○•••••○

இதே நினைவாகவே படுத்துறங்கி, அடுத்த நாள், விடிந்ததும் ஆவலுடன் வேக வேகமாய் வடிக்கான 'காடி'(ஊறல்) போட்டிருந்த முக்காட்டுப் பற்றைக்குள் சுற்று முற்றுப் பார்த்தபின் உள் நுழைந்தான்.

பீப்பாயைச் சுற்றிக் கட்டிய சாக்கை மீறி வெண் நுரை பொங்கி பிரவாகித்து வழிந்து கொண்டிருந்தது. சாக்கை அவிழ்த்துப் பார்த்தான். இரைச்சலுடன் நுரை தளும்பி வெளியேறிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை உள்ளே விட்டுத் துலாவினான். ஒரு பழங்கூட கையில் அகப்படவில்லை, எல்லாமே நொய்ந்து கரைந்திருந்தன. பழங்களை நொதிக்கவைக்கும் நொதியம் தன் வேலையை பக்குவமாய்ச் செய்திருந்தது.

கையை முகர்ந்து பார்த்தான். நாசியில் மதுசாரத்தின் நெடி சுரீரென ஏறியது. முகத்தைச் சுருக்கி, உடலைச் சிலிர்த்துக் கொண்டான். இந்தக் கன்றாவியை எப்படித்தான் பருகுகின்றார்களோ என்று நினைத்து அருவருப்படைந்தான்.

தேனீகள் முதற் கொண்டு பலவிதமான கொசுக்களும், வண்டினங் களும் வட்ட மடித்து ரீங்காரித்துக் கொண்டிருந்தன. காட்டுப் பல்லிகள் கூட அங்கே பிரசன்னமாயிருந்தன.

பொங்கிய நுரையை அவை அளவின்றி சுவைத்திருக்க வேண்டும். போதையில் பறக்கமுடியாமல் தடுமாறிச் சுற்றிச் சுழன்றன. அவற்றிற்குப் பிடித்தமான சுகந்தம் போலும். மலர்களில் கிடைக்கும் மதுவைவிட இது பலமடங்கு வீரியமானதுதானே.

இனிக் காரியமாகாது என எண்ணிக்கொண்டு, அவ்விடத்தை விட்டகன்றான் தியாகன்.

○••••••○

நாலைந்து நாட்களாக ஆவலுடன், இனி என்ன நடக்கும் என அந்த இடத்தை, அடிக்கடி நோட்டமிட்டபடியே இருந்தான்.

ஓரிரு நாட்களும் மெல்ல நகர்ந்தன.......

ஒரு நாள் காலையில் எழுந்து, அந்தத் திக்கை நோட்டமிட்டபோது, புகை மூட்டம் திட்டுத்திட்டாய் மேலெழுந்து கொண்டிருந்ததை அவதானித்தான்.

மதியமாகியபோதுதான், புகை மூட்டம் அடங்கியிருந்தது. ஆர்வத்துடன் நீரோடை ஓரமாக பதுங்கிப் பதுங்கி, மருது மரத்தில் மறைந்து மறைந்து அவ்விடத்தைப் பார்வையால் துலாவினான்.

நாகனும், கைலாசும் ஆளுக்கொரு சாக்கு மூட்டையை தோளில் காவிக்கொண்டு வெளியேறித் தூரத்தே போய்க் கொண்டிருந்தனர்.

பார்வையிலிருந்து அவர்கள் மறைந்ததும், தியாகன் அந்த இடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி, கசிப்புக் காய்ச்சிய இடத்தை விடுப்புப் பார்க்கும் ஆவலுடன் நோட்டமிட்டான்.

போத்தல்கள் ஒன்றையுமே காணவில்லை. மது சார நெடி முக்காட்டுப் பற்றைக்குள் சூழ்ந்திருந்தது. முன்னரைவிட இப்போது நாசியைத் தீவிரமாகத் துளைத்தது. தியாகனின் மனம் அருவருத்துக் கொண்டது.

தேனிகள், குளவிகள் வட்டமடித்துக் கும்மாளமிட்டன. பழச் சக்கைகளில் மொய்த்து, மிச்சம் மீதிகளை உறிஞ்சிக் கொண்டிருந்தன. போதையில் பறக்கமுடியாதன பல, தாறு மாறாய் நிலை தடுமாறிக் கொண்டிருந்தன.

நெருப்பு, நீரூற்றி அணைக்கப்பட்டிருந்தது. பழங்களின் கொட்டை, சக்கைகள் குவிந்து கிடந்தன. அவற்றின்மீது தேனீக்கள், வண்டுகள் மொய்த்துக் குவிந்திருந்தன. அவற்றிற்கு அகன்றுபோக மனமில்லைப் போலும்....

துருப்பிடித்த கம்பிச் சுருள், முற்று முழுதாய் கறள் நீங்கிச் சுத்தமாகிப் பளிச்சென்று ஓரமாய்க்கிடந்தது. கறள் பிடித்த கம்பிகளைச் சேர்த்துக் காய்ச்சுவதால் சாராயம் பொன்நிறம் பெறுமாம், எனக் கேள்விப்பட்டிருந்தான். இப்போது, அந்தக் கொடுமையை கண்ணெதிரே காண்கின்றான். உள்ளம் ஊமைக் கண்ணீர் வடித்தது. உடல் பதறியது.

"அட...கொலைகாரப் பாவிகளா...!" என மனதுக்குள் அங்கலாய்ப்புடன், ஆக்கிரோசமாகத் திட்டிகொண்டான். மனம் மறுகியது.

"புகை பிடிப்பதும், மது அருந்துவதும் ஆரோக்கியத்துக்குக் கெடுதி."

அன்றாடம், பார்க்கும் தொலைக் காட்சி எச்சரிக்கையை நினைத்தபோது, அவன் மனம் எரிச்சலடைந்தது.

"யார் செத்தால், என்ன..? துன்பப் பட்டாலென்ன..? நாம் மட்டும் நன்றாய் வாழ்ந்தால் சரி.." என்று சுயநலத்துடன் வாழும், அற்ப மனிதர்களை எண்ணி மனதுக்குள் குமைந்து புழுங்கினான்.

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தியின்றி... இரத்தமின்றி...

பெருமாள், அந்த ஊரின் முதற்தர செல்வந்தர். பரம்பரை பரம்பரையாகக் குவிந்த சொத்துகள். அரசர்களின் அரண்மனை போன்று பரந்துவிரிந்த பழங்காலக் கட்டிடக் கலையிலான வீடு. அங்கு வசிப்பதற்கு அவரையும் மனைவியையும் தவிர, வீட்டு வேலை யாட்கள் மட்டுந்தான் உண்டு. எடு பிடி வேலைகளுக்கு, செல்லன் -அவன் மனவி வள்ளி உணவு சமையல் போன்ற ஒத்தாசைக்கு மனைவியின் உறவுக்கார இளம் வயதுப் பெண் - ஒரு வீட்டுத்தோட்ட வேலையாள். அவ்வளவே.

பத்துப் பதினைந்து அறைகள், பிரமாண்ட வரவேற்பு விருந்தினர் மண்டபம், வீட்டுக்குள் அமைந்த குளியலறை, சாமியறை, சமையற்கட்டு என்பனவும் உண்டு, காலத்துக்குக் காலம் இடித்துக் கட்டி நவீன மயப்படுத்தி மெருகு ஊட்டப்பட்டிருந்தது. வீட்டின் முற்பக்கம் "போர்ட்டிகோ"வுடன் பரந்த பூந்தோட்டம், நானாவித பூச்செடிகளுடன் பூஞ்சோலையாக அழகூட்டிக்கொண்டிருந்தது.

மல்லிகைப் பந்தலும் சுற்றுச்சூழலை நறுமணமூட்டிக் கொண்டிருக் கும். பின்கொல்லைப் புறத்தில் கிணறும்,பலவித கனிதரு மரங்களும். மரக்கறித் தோட்டமும் உண்டு. வளவைச் சுற்றி, உடைந்த கண்ணா டிகள் பதித்த சுற்று மதில் வீட்டுக்குப் பாதுகாப்பாய் அமைந்திருந்தது.

பெருமாள், இரண்டு பெண்களையும் நல்ல இடங்களில் கட்டிக் கொடுத்துவிட்டார். அவர்கள் வெளியூர்களில் வாழ்கிறார்கள். எப்போதா வது இருந்துவிட்டு சுபநிகழ்வுகளுக்கு வந்து போவார்கள். ஒரேயொரு மகன் இலண்டனில் உயர்கல்வி கற்றுக்கொண்டிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பல இடங்களிலும், நீர் பாய்ச்சல் வயல் நிலங்கள், மாட்டுப் பட்டிகள், செங்கற்சூளைகளும், பாறாங்கற்களை உடைத்து, சல்லி போன்ற பலதரப்பட்ட விதத்தில் விற்பதும், அவருக்கு மித மிஞ்சிய செல்வத்தை வாரியிறைத்துக்கொண்டிருந்தன. அரசாங்கக் "கோட்டா" கிடைத்து, புழுங்கல் அரிசி குத்திப் பதப்படுத்தும் பெரிய அரிசி ஆலையும் பணத்தை கட்டுக் கட்டாக வாரியிறைத்தது.

அவ்வாறு இருந்தும், அவரிடம் வேலை செய்பவர்கள், கொத்தடிமைகளாகவே நடந்தனர். நடத்தப்பட்டனர். வேலைக்கேற்ற கூலியில்லை அடாவடி மேலாண்மை.

அவரது வேலையாட்களை, என்றுமே வறுமையிலேயே வைத்திருந்தார். அவசரத்துக்குத் கடன் கேட்டால், மறுக்காமல் வாரி வழங்குவார். ஆனால், வட்டிக்கு வட்டி; ஈடாக வீடு காணிகளை அடமானம் பிடித்துக் கொள்வார். கடன் கட்டி முடிக்கும்வரை அவர்கள் அடிமைகளே. ஆண்டான் அடிமை, காலம் காலாமாக நடப்பது போல இங்கும், ஆரவாரமில்லாமல் நடந்தது.

வேளாளன் என்ற சாதித் தடிப்பு மேலதிகமாகவே நிறைந்து கிடந்தது. சாதி தாழ்ந்தவர்களை, தள்ளி நின்றே கதைக்க அனுமதித்தார். வீட்டு வாசலை மிதிக்கவே அனுமதியில்லை. அவரது வீட்டுப் பணியாளர்களோ, பணிப்பெண்களோ கொல்லைப் புறமாகவே வந்து நிற்கவேண்டும். ஆனால், செல்லனுக்கும், அவனது மனைவி வள்ளிக்கும் ஒரு தனிச்சலுகை உண்டு. வீட்டுக்குள், எங்கும் நுழையக் கட்டுப் பாடில்லை.

அது,பெருமாளின் அப்பா, சிவபாதர் காலத்திலிருந்தே நடைமுறையில் இருந்து வந்தது. செல்லனின் பரம்பரை, சாதித்தொழில் எதுவுமே செய்ததில்லை.. அவர்கள் பஞ்சமர் வகுப்பினர். அவர்கள் குலத்தொழில் செய்வதில்லை. ஆனால், ஊரவர்கள், "செல்லன் கட்டாடி" என்றே அழைத்தனர்.

அப்பா சிவபாதர்,செல்லன் குடும்பத்தினரை ஏற்றத் தாழ்வில்லாமல் அன்பாகவே நடத்தினார்.

பெருமாளிடமும், தன்னைப் போலவே அவர்களை நடத்தவேண்டுமென அடிக்கடி கூறுவார். அவரும் காரணம் கேட்டதில்லை. அதனை கட்டளையாகவே பெருமாள் நினைத்து நடந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லனும் பெருமாளும் சிறுபராயத்திலிருந்தே ஒன்றாகவே வளர்ந்தவர்கள். செல்லன் இரண்டு வயது மூத்தவன். செல்லனை என்றைக்குமே கூட வைத்திருக்கவேண்டும் என்று, பெருமாளை நெறிப்படுத்தி வைத்திருந்தார்.சாகும் போதும் கூட, அழுத்தியுறுத்திவிட்டே உயிர்விட்டார்.

பெருமாளின் மனைவி சீதாவும், அவர்களைக் கண்ணியமாகவே நடத்தினார். பெருமாளைவிட மனைவி சீதா அதிகம் படித்தவர் பட்டதாரியுங்கூட. சாதி வேறு பாடு பாராட்டுவதில்லை முற்போக்குவாதி.

வள்ளியைத் தனது தாய் போலவே நடத்தினார். செல்லனின் மனைவி வள்ளி பெருமாளின் மூன்று பிள்ளைகளையும் சீராட்டி பாராட்டி வளர்த்து ஆளாக்கியிருந்தாள். எப்படியும் தாங்கள் பெருமாளின், வாழ்நாள்அடிமைகள் என்பதை மனதில் நிறுத்தியே சேவகம் செய்தனர்.

சீதாவுக்கு வள்ளியை மிகவும் பிடிக்கும். வள்ளியின் பணிவும், பழக்கவழக்கங்களும், சுத்தமும் அவளை ஆகர்சித்திருந்தன. எல்லாவித வேலைகளையும் தானாகவே தூக்கிப் போட்டுச் செய்வாள். தினமும் வேலைகள் முடிந்ததும், செல்லனும் வள்ளியும் தமது வீட்டுக்குப் போய்விடுவார்கள்.

❍•••••❍

ஒருநாள் செல்லன், பெருமாள் வீட்டில் இரவு தங்கவேண்டி ஏற்பட்டது. கோடை வெயிலின் புழுக்கத்தால் பெருமாள், "போர்ட்டி கோவில்" உறங்கிவிட்டார். நாய்களை அவிழ்த்து விட்டுப் பயமில்லாமல் தூங்குவார்.

செல்லன் தங்கிய நாளன்று, பெருமாளை நச்சுப் பாம்பு ஒன்று படுக்கையில் தீண்டிவிட்டது. நாய்களின் அதீத குரைப்பால் திடீரென பெருமாள் எழுந்துவிட்டார். அப்போதுதான் காலில், நெருப்பால் சுட்டது போல உணர்ந்தார்.

நாய்களும் கடித்த பாம்பை வேட்டையாடின. தலைமாட்டில் இருந்த "டோச் லைற்றை" வாரியெடுத்து அந்தத் திசையில் ஒளியைப் பாய்ச்சினார். வேட்டையாடப்பட்ட பாம்பைப் பார்த்ததும் பயத்தில் அதிந்து போனார். மரண பயத்தில் கூக்குரலிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்லா..! இஞ்ச ஓடிவாடா..."

வீட்டு வாசலில் நிலத்தில் படுத்திருந்த செல்லன் வாரிச்சுருட்டிக் கொண்டு ஓடிவந்தான். அவனும், நாய்கள் வேட்டையாடிய பாம்பைப் பார்த்துவிட்டான். பெருமாளின் ஆபத்தான நிலைமையை ஊகித்துக் கொண்டான். சற்றும் தாமதிக்காமல், பக்கத்தில் நின்ற வாழை மரத்திலிருந்து நாரை வார்ந்து கடி காயத்தின் மேற்புறமாக, இறுக்கமாக கட்டிவிட்டு, தன் வாயை வைத்து மீண்டும் மீண்டும் உறிஞ்சித் துப்பினான். பெருமாள் பயத்தில் மூர்ச்சையாகிவிட்டார்.

அவர் போட்ட சத்தத்தில், மனைவியும்,அக்கம் பக்கத்திலுள்ள வர்களும், எழுந்து குவிந்துவிட்டனர். அடுத்த பத்து நிமிடங்களில், சித்தவைத்தியர் செல்லையா, விடயமறிந்து வந்து சேர்ந்துவிட்டார் தன் கைவைத்தியத்தையும் ஆரம்பித்துவிட்டார். கடித்த பாம்பு அங்கே, நாய்களால் வேட்டையாடப்பட்டுக் கிடந்தது, அவருக்கு வசதியாய்ப் போய்விட்டது. முதல் உதவி செய்த செல்லனை வெகுவாகப் பாராட்டினார். அன்றிலிருந்து செல்லனை, இனி இரவிலும் அங்கேயே தங்க வேண்டு மென்று கட்டளை.

ஊரிலேயே வயது முதிர்ந்தபெரியவர் செல்லையா. அவரை, எல்லோருமே சாத்திரி செல்லையா என்றே அழைத்து மரியாதை செய்வர். மூன்று தலைமுறையைக் கண்டவர். சாத்திரம், சித்தவைத்தியம், விசக்கடி, சாத்திரக் குறிப்பு எழுதுதல் என்று எல்லாவற்றிலும் கை தேர்ந்தவர். வெளியூர்களிலிருந்தும் கூட அவரைத் தேடி வருவார்கள். ஊரிலுள்ள ஒவ்வொருவரதும் சரித்திரமும் அவர் கையில்.

அவரது சோதிடக் கணிப்புகள் என்றுமே பொய்த்ததில்லை. அவராக வாய் விட்டு தனது காசைக் கேட்டதில்லை. கொடுப்பதை மனத்திருப்தியுடன் பெற்றுக் கொள்வார். பெருமாளை அடிக்கடி வந்து சந்தித்து நலன் விசாரித்தும் போவார்.

அன்றும் அவ்வாறே வந்தார் ...

"ஏன்டா பெருமாள் ! சுகமாஇருக்கிறியே?" என்று குசலம் விசாரித்தபடி வளவுக்குள் நுழைந்தார். வாய்க்குள் குதம்பிக் கொண்டுவந்த வெற்றிலைக் குதம்பலை காறி உமிழ்ந்து விட்டு, தோளில் கிடந்த துண்டால் வாயைத் துடைத்துக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாள், அனல் வெக்கை தாளாமல், மல்லிகைப் பந்தலின் கீழே சாய்மானக் கதிரையில் சரிந்திருந்தார். பக்கத்தே செல்லன், பனையோலை விசிறியால் விசிறிக்கொண்டு நின்றிருந்தான். குறிப்பறிந்து, ஓடிச் சென்று, ஒரு கதிரையை தூக்கிவந்து சாத்திரியாருக்குக் கொடுத்தான்.

பெருமாள் புன்னகையுடன், "வாங்க... ஐயா!" என வரவேற்றார்.

செல்லன், வீட்டுக்குள் ஓடினான். அதைத் தொடர்ந்து,வீட்டுப் பணிப் பெண், தண்ணீர்ச் செம்பை சாத்திரியாரிடம் பணிவுடன் கொடுத்து விட்டு மீண்டும் உள்ளே போய்விட்டாள். அவள் கொடுத்த செம்பிலிருந்த நீரை, வாய் நிறைய மொண்டு, வாயை அலம்பிக் கொப்பளித்து உமிழ்ந்தார். தொடர்ந்து, ஒரு முடறு நீரையும் அருந்தினார்.

"ஏண்டா..செல்லா..! ஐயாவை ஒழுங்காக் கவனிக்கிறியோ ?" என்று வழமை போல் விசாரித்தார்.

"ஐயாவை.. கண்ணும் கருத்துமாய் பார்க்கவேண்டும் கண்டியோடா..!".

செல்லன், வளைந்து நெளிந்து தலையைச் சொறிந்துகொண்டும், வெற்றிலைக் கறையேறிய பற்களை இளித்துக் கொண்டும் தலையைப் பலமாய் ஆட்டினான்.

பணிப்பெண், ஒரு தட்டில் பலகாரங்களும், தேநீர்க் கிண்ணத் துடனும் பவ்வியமாக வந்து நின்றாள்.

செல்லையர் வடையை எடுத்துக் கொறித்துக்கொண்டே, "தம்பி பெருமாள்! நான் முன்பே உனக்குச் சொல்லியிருக்கிறன். உனக்கும் ஞாபகம் இருக்குமெண்டு நினைக்கிறன். இந்த வரிசம் தொட்டு, உனக்கு ஏழரைச் சனி ஆரம்பிக்குதடா தம்பி... தேவையில்லாத பிரச்சனைகளில தலையிடாத. கோபத்தைக் கொஞ்சம் அடக்கிக் கொள்ளணும். தூரப் பயணங்கள தவிர்த்துக்கொள். இங்கிலிசு டாக்டரிடமும் போய், பிறசர், சர்க்கரையை சோதித்து, கட்டுப்பாட்டில் வச்சுக்கொள். நான் தந்த சூரணங்களையும் ஒழுங்காக எடுத்துக் கொள்." என்றவர், மேவாயை யோசனையுடன் தடவிக்கொண்டார்.

"நான், இதை சும்மா சொல்லல. உன்ர ராசிப்படி, சனியின் பார்வையில கண்டம் இருக்குது. பாம்பு கடிச்சதுதான் ஆரம்பம். இனியும் ஏதாவது பாரதூரமாய் நடக்கலாம். ஒவ்வொரு வாரமும், சனி தோசத்துக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகாரம் பண்ணு. செல்லன் இல்லாமல் ஒரு இடமும் தனியப் போகாத.." என்று ஆலோசனை கூறினார். பெருமாளும் தலையையாட்டி ஆமோதித்தார்.

"செல்லா...அம்மாட்டப் போய் வெத்திலைத் தட்டை வாங்கி வா.." என்று அவனை உள்ளே அனுப்பிவிட்டு, பெருமாளிடம் குசுகுசுத்தார்.

"பெருமாள் ! இவன் செல்லனின் சாதகம். உனக்கு எப்பவும் பக்கபலம். அவன், உனக்குக் காவல் தெய்வம் மாதிரி. அவனில்லாம நீ, எங்கயும் தனியப் போகாத. இரவிலையும் அவனை இஞ்சயே தங்கவை. உன்ர நன்மைக்குத்தான் சொல்லுறன். இத அசட்டைபண்ணாத.." என்று எச்சரித்தார்.

அவர் சொன்னவற்றைக் கேட்டவுடன், பெருமாளுக்கு சற்றுக் கலக்கமாகவேயிருந்தது. செல்லையர், சும்மா வாய்க்கு வந்தபடியெல்லாம் சொல்லமாட்டார். அவர் சொல்வதற்கு நிச்சயமான காரணமில்லாம லிருக்காது. அவர் சொன்னபடி, எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக் கின்றன. பாம்பு கடித்ததைப் பற்றியும் முற்கூட்டியே கணித்திருந்தார்.

செல்லன் வெற்றிலை கொண்டுவரவும், வெற்றிலையை முறைப் படி மடித்து வாய்க்குள் திணித்துக் கொண்டு, போக எழுந்தார். எப்போதும் போலவே பெருமாள், சட்டைப் பக்கெற்றுக்குள்ளிருந்து சில காசுத் தாள்களை, செல்லையரின் கையில் திணித்தார். செல்லையர் புன்னகைத்தபடியே நடையைக் கட்டினார்.

❍•••••❍

குழந்தைப் பராயத்திலிருந்தே, தன்னைச் செல்லனின் அம்மா தூக்கி வளர்த்த ஞாபகங்கள், பெருமாளுக்கு இன்றும் சீரணிக்கமுடியாத கசப்பான உண்மைகள்தான். ஊரவர்கள் கூட அதனைப், பெருமாளுக்கு சாக்கடி சாக்காய் காதில் போடுவார்கள். அதில் அவர்களுக்கு ஓர் ஆத்மதிருப்தி. செல்லனுக்குப் பெருமாள் கொடுக்கும் முக்கியத்துவத்தில் அவர்களுக்கு அப்படியொரு காழ்ப்புணர்வு.

அவரை அப்படியான கதை பேச்சுகள் முற்றாய் மாற்றா விட்டாலும், ஓரளவு பாகு பாட்டை-வெறுப்பை அவர் மனதில் வளர்த்துவிட்டிருந்தது உண்மையே. அதனால், காலப்போக்கில் சாதிப் பாகுபாடு அவர் மனதில் விசச்செடியாய் வளர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையான சொத்துப் பத்துக்களுக்கு அதிபதியான சிவபாத ருக்கு, ஏழு தலைமுறைக்கும் அனுபவிக்கச் செல்வம் குவிந்து கிடந்தது. ஆனாலும், வாரிசாகக் குழந்தைகள் எதுவும் இல்லாததுதான், அவர் மனதைப் போட்டுப் பெரிதும் வாட்டி வதைத்தது. அவரைவிட அவரது மனைவியே மனப் பாதிப்படைந்து, தீராத மனநோயாளியானார். செய்யாத வைத்தியங்களே இல்லை. ஆங்கில வைத்தியம் செய்து நம்பிக்கை இழந்து, சித்த வைத்தியத்தில் அடைக்கலமானார். அவரது நெருங்கிய நண்பரான சாத்திரியும், சித்தவைத்தியருமான செல்லையா அவருக்குக் கைகொடுத்தார். அவரும் தீவிர முயற்சியில் இறங்கினார். சாத்திரம் பார்த்து, குழந்தைப் பாக்கியம் நிச்சயம் உண்டு என்றும், ஆனால் கால தாமதம் எடுக்கும் என்றும் உறுதியாகக் கூறினார்.

சிவபாதர், பெண்கள் விடயத்தில், மிகவும் பலவீனமானவர். கண்டகண்ட பெண்களையும் விட்டு வைக்காதவர் என்பது செல்லையருக்கும் வெளிச்சம். ஊருக்கும் காதில் விழுந்த செய்தி. குழந்தைப் பாக்கியத்துக் காக, அவரது லீலைகளை மட்டுப் படுத்த புத்திமதி கூறினார். சிவபாதரும், மனதை அடக்கிக் கொண்டு,கோவில் கோவிலாக ஏறி இறங்கி பூசை, புனர்காரியங்களை நடத்தினார்.

இறுதியில்,செல்லையா கூறியபடியே, குழந்தைப் பாக்கியம் கை கூடியது. அவ்வாறு பிறந்தவர்தான் பெருமாள். அவர் பிறந்ததும், நோய்வாய்ப் பட்டிருந்த மனைவி, சிவனே என்று சிவபதமடைந்துவிட்டார்.

அவரை வளர்த்து ஆளாக்கிவிட்டது செல்லனின் தாய் பூமணியே. பெருமாள் வளர்ந்து ஆளாகியதும், அவருக்கும் சீதாவுக்கும் மணம் முடித்து வைத்துவிட்டு, சிவபாதரும் சிவ பதமடைந்தார்.

அன்றிலிருந்து, செல்லையா சாத்திரியாரே பெருமாளை வழி நடத்திவந்தார். பெருமாளை, தனது நிலையிலிருந்து வழி நடத்தவேண்டு மென்பது சிவபாதரின் வேண்டுகோள். பெருமாளுக்கும், அது தெரியும். அவருக்குப் பெருமாள் எப்போதுமே மிகுந்த மரியாதை கொடுத்து வந்தார். அவரது ஆலோசனைகளை என்றும் மீறுவதில்லை.

O•••••O

செல்லனின் தாயும் அவனிடம், மரணத் தறுவாயில் சில இரகசிய விடயங்களைச் சொல்லி, சீவிய பரியந்தம் வரை பெருமாளுக்கு சேவகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும் என்றும், எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரை விட்டுப் பிரியவே கூடாது என்றும், சத்தியம் வாங்கிவிட்டே உயிர் பிரிந்தாள். அதனாலே , அட்டையாய் ஒட்டிக் கொண்டு பெருமாளின் அடிமையாய் வாழ்ந்தான் செல்லன்.

செல்லனின் பிள்ளைகள் எல்லோருமே திருமணம் முடித்துத் தனிக்குடித்தனம் போய்விட்டார்கள் கடைக் குட்டி முகிலனைத் தவிர. அவன் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருக் கிறான். அவன், இடது சாரிப் போக்குடையவன் சீர் திருத்தவாதி. அவனுடன் ஒரு வாலிபக் கூட்டமே, வேலை வெட்டியில்லாது கூட்டம் போட்டுக்கொண்டும், முதலாளிமாருக்கு வயிற்றில் புளியைக் கரைத்து விட்டுக் கொண்டுமிருக்கிறது.

செல்லனுக்கும் மகன் முகிலனுக்கும் எட்டாம் பொருத்தம். தந்தையின் அடிமைச் சேவகத்தை முழு மூச்சாய் எதிர்த்தான். தகப்பனு டன் தர்க்கப்பட்டு அவனுடன் கதைப்பதையே நிறுத்திவிட்டான். எப்போதாவது இருந்துவிட்டே வீட்டுப் பக்கம் எட்டிப் பார்ப்பான். நண்பர்களுடன் இணைந்துகொண்டு, பெருமாளையும், அவர் போன்ற முதலாளிமார்களையும் எதிர்த்துப் போராடினான். செல்லன், முகிலனை தன் வழிக்குக் கொண்டுவர எவ்வளவோ முயற்சித்தான். வள்ளியிடமும் சொல்லி வழிப்படுத்த முயன்றும், அவன் அலட்சியப் படுத்திவிட்டான். தனது கை மீறிப் போன காரியம் என்பதைப் புரிந்து, அவனுடன் கதைப்பதையே நிறுத்திக் கொண்டான்.

“மே” தினத்தன்று பெரிதாக ஆர்ப்பாட்ட ஊர்வலமும், கூட்ட மும் நடத்த ஒழுங்கு செய்திருந்தனர். முகிலனே இளைஞர் அணியின் செயற்குழுத் தலைவன். பெரும் எடுப்பில் நடத்தவேண்டும் என்பது அவனது திட்டமாம். அதற்காக, அக்கம் பக்கத்து ஊரிலிருந்து எல்லாம் இளைஞர்களைத் திரட்டியிருந்தான். புற்றீசல் போல வந்து குவிந்தனர்.

ஊரே அப்படியொரு பட்டாளத்தைக் காணவில்லை.பெருமாளே, அவர்களின் முக்கிய இலக்காக இருப்பதாக செல்லன் மட்டுமல்ல, பெருமாளும் கூட அச்சொட்டாக அறிந்திருந்தனர். பெருமாளுக்கு, ஊர் எல்லாம் உளவாளிகள் உண்டு. முதல் நாளே பெருமாள், செல்லனை பார்த்துக் கேட்டும்விட்டார்.

“செல்லா...! என்னடா... உன்ர பொடியன் முகிலந்தான், புரட்சி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சி, அப்படி இப்படியெண்டு இயக்கம் நடத்துறானாமே.....? சாப்பிட வழியில்ல...அதுக்குள்ள என்னடா புரட்சி ! மண்ணாங்கட்டிப் புரட்சி...!அவன், நான் போட்ட பிச்சையிலதானே படித்து வளர்ந்தவன். நன்றி கெட்ட நாய். உனக்கும் ஒண்டும் தெரியாம இருக்காதே. அவனுக்கு எடுத்துச் சொல்லக்கூடாதா? " என்று எகத்தாளமாகவும், ஏளனமாகவும் கேட்டார். செல்லன், வளைந்து நெளிந்து, கூழைக் கும்பிடுவுடன், திக்கு முக்காடித் திணறி உளறினான்.

"ஓமோம்...ஐயா! அவனுக்கு எவ்வளவோ சொல்லியும் கேட்கிறா னில்ல. வள்ளியும் சொல்லிச் சொல்லி கடைசியில அவனோட நாங்க கதக்கிறதேயில்ல. அவன்ட கூட்டங்களே கட்டாக் காலிகள்தான். நான் என்ன ஐயா செய்யிறது? "என்று ஆற்றாமையில் தலையைச் சொறிந்தான். பெருமாளுக்கும் செல்லனின் கையாலாகாத நிலை,தெட்டத் தெளிவாகப் புரிந்தது.

தந்தை சிவபாதர் உயிர்விடும் போது, அவருக்குச் செய்து கொடுத்த சத்தியம் எப்போதும் நினைவில் நிழலாடும். அது எதற்காக என்பது பெருமாளுக்கு இன்றுவரை மறைபொருளே. சாத்திரியார் செல்லையரும் அதனை அடிக்கடி நினைவு படுத்தத் தவறுவதில்லை. அதன் பூடகமும் பெருமாளுக்குத் தெரியவில்லை. ஆனாலும், தன் நினைவு தெரிந்த நாளிலிருந்து செல்லனுடன் வளர்ந்ததும், செல்லனின் அம்மா, தன்னை தூக்கி வளர்த்து ஆளாக்கியதும் உயிர்ப்புடன் நிழலாடும்.

"ஒண்டு சொல்லுறன் கேட்டுக்கோ..! அவனும், அவன்ர தறுதலை களும், எனக்கும், என் போன்ற பணக்காரர்களுக்கும் எதிராக, புரட்சி மண்ணாங்கட்டியெண்டு துள்ளித்திரியிறது நல்லதுக்கில்ல. உன்னை நினச்சுத்தான் இதுகால வரையில பொறுத்துக் கொண்டிருந்தன். நான் எப்படிப்பட்டவன் எண்டது உனக்கு நல்லாவே தெரியும். இனிப் பொறுக்க மாட்டன். சுட்டுத்தள்ளிப் போடுவன். அரசியல்வாதிகளும், பொலீசும் என்ர கையில. என்ர மயிரையும் புடுங்கேலாது. சொல்ல வேண்டியதைச் சொல்லிப்போட்டன். இனி உன்ர பாடு... உன்ர மகன்ட பாடு." என்று கடுகடுப்பாய் நறு நறுத்தார். கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன.

எதுவுமே சொல்ல முடியாது விக்கித்துப்போய் நின்றான் செல்லன். முழுக்கோபத்தையும் வள்ளியின் மேல் காட்டினான். அவளும் என்ன செய்வாள்.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையாச் சாத்திரியார் கூடச் செல்லனிடம், மகன் முகிலனை நெறிப்படுத்த அறிவுறுத்தினார். பெருமாளுக்குச் சொன்ன பதிலே அவருக்கும் கிடைத்தது. பெருமாள், தகப்பனுக்குச் செய்து கொடுத்த சத்தியமும், பாம்புக் கடியிலிருந்து உயிர் பிழைக்க வைத்ததுந்தான் தன்னை அவர் இன்றுவரை அனுசரித்து அரவணைத்து வைத்திருப்பதன் சூட்சுமம் என்பதைச் செல்லன் நன்றாகவே அறிவான். பெருமாளிடம் சாதிப் பாகுபாட்டை ஊட்டிவளர்ப்பது அவரது உறவினர்களும், செல்வந்த நண்பர்களும் என்பதைப் பட்டவர்த்தனமாய் ஊகித்து உணர்ந்திருந்தான். அதனால் அவனும் அளவோடே பழகினான்.

○•••••○

முகிலனும் கூட்டாளிகளும் "மே" தினக் கோரிக்கைகளை வெளியிட்டிருந்தார்கள்.

"பெருமாளும், அவரது பணக்கார உயர் குல முதலாளிகளும் உடனடியாக அவர்களது அடக்குமுறைகளைக் கைவிட வேண்டும், வேலைக் கேற்ற கூலி கொடுக்கவேண்டும் சம்பளத்துடனான சுகவீன விடுமுறை, பொது விடுமுறை, பண்டிகை கால விடுமுறை என்பவற்றை சட்ட வரையறைக்குள், இரு பாலாருக்கும் கொடுக்கவேண்டும் என்பன முக்கியமானவை. ஒவ்வொரு முதலாளிமார்களுக்கும் அவை விநியோகிக் கப்பட்டன. அவற்றைப் பார்த்ததிலிருந்து, பெருமாளுக்கு உயர் குருதி யழுத்தம் எகிறி விட்டிருந்தது.

'மே' ஊர்வலம், கூட்டம் என்பவற்றின் பின்னர், அரிசி ஆலையைச் சூறையாடி ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பது என்பது அவர்களின் திட்டத்தின் உச்சம்.

ஊர்வலம் ஆரம்பித்தது.......

ஊர்வலமானது, ஊர்க் கோவிலில் ஆரம்பித்து, பதாகைகளுடனும், கோசங்களுடனும், முதலில் பெருமாளின் வீட்டு முன்னே வந்து நின்று வானதிர முழக்கமிட்டனர்.

பெருமாள், தனது வேட்டை நாய்களை அவிழ்த்துவிட்டு, தனது இரட்டைக் குழல் துப்பாக்கியையும் தயார்ப் படுத்தி வைத்திருந்தார். செல்லனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை, பதற்றத்துடன் குறுக்கும் மறுக்கும் அந்தரப்பட்டு ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தில் ஓரிருவர் வீட்டு இரும்புக் கதவைப் பலங்கொண்ட மட்டும் மூர்க்கத்தனமாக இழுத்து ஆட்டினர். ஒருவன், வீதியில்கிடந்த கல்லை எடுத்து கதவுப் பூட்டை உடைக்க ஆரம்பித்தான்.பெருமாளின் வேட்டை நாய்கள் ஆக்ரோசமாய்க் குரைத்துக் கொண்டு, கதவை உடைத்தவனைத் தாக்கப் பாய்ந்தன. பெருமாளும் துப்பாக்கியை நீட்டிய படியே, வாசலை நோக்கிக் கொலை வெறியுடன் புயலாய்ப் பாய்ந்தார்.

கூட்டத்தில் செல்லனின் மகன் முகிலனே முன்னணியில் நின்றான். நெஞ்சு தகிர்க்க, செல்லன் அடித்தொண்டையில் கூக்குரலிட்டுக் கத்தினான்.

"என்ர... கடவுளே! முருகா !! உங்களக் கையெடுத்துக் கும்பிடுறன்... கலைஞ்சு போங்கடா..."

அந்த ஆர்ப்பாட்ட இரைச்சலில், அவனது கத்தல் யார் காதிலும் விழவில்லை. காற்றில் கரைந்து மறைந்தது.

அடுத்து, பெருமாளின் துவக்கிலிருந்து "படீர்" என்ற பெரு முழக்கத்துடன் எச்சரிக்கை வேட்டு முதலில் தீர்ந்தது. கூட்டதினர், எவருமே குண்டுத் தாக்குதலைக் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லைப் போலும்.

வேட்டொலியில், மரங்களில் தங்கியிருந்த காக்காய்க் கூட்டம் சிதறி திக்குத் திசையறியாது அலறிப் பறந்தது போல், ஆர்ப்பாட்டக் கூட்டமும் அலறியடித்துக் கலைந்தனர் .

அப்படியிருந்தும், கூட்டத்தில் ஒருவன் விட்டெறிந்த கல்லொன்று, பெருமாளின் நெற்றிப் பொட்டைப் பதம் பார்த்தது. நிலை குலைந்த பெருமாள், அலறியபடி நிலத்தில் சாய்ந்தார். அதைக் கொஞ் சமும் எதிபார்க்காத செல்லனும் அலறியடித்துப் பெருமாளிடம் பாய்ந்து ஓடினான். ஓலமிட்டு அழுதான். ஆர்ப்பாட்ட ஊர்வலம் மாயமாய் மறைந்தது.

செல்லன், அரற்றிக் கொண்டே பெருமாளின் காயத்தை, துணியால் கட்டி, இரத்த இழப்பைத் தடுக்க முயன்றான். மனைவி சீத்தா தலையில் அடித்து ஓலமிட்டாள். வள்ளியும் அழுத படியே, சீதாவைப் பரிவுடன் ஆறுதல் சொல்லித் தேற்றினாள்.

யாரோ உறவினர், "அம்புலன்ஞ்" சேவைக்கு அழைப்புவிடுத்தனர். பிரபலமான மனிதர் ஆனதால், நோயாளி காவு வண்டியும் மிக விரைவில் வந்துநின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாளுடனே செல்லனும் முந்தியடித்து ஏறி அமர்ந்துவிட்டான். அதனைத் தொடர்ந்து, ஒரு"ஆட்டோ" வில், சீதா,வள்ளியுடன் பின்னாடி விரைந்தார். மருத்துவ மனையில், அவசரச் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, துரித சிகிச்சையும் முடுக்கப்பட்டது. மருத்துவர்கள் தொடங்கித் தாதிகள், சிப்பந்திகள் வரையும் பெருமாளுக்கு அந்நியோன்யம் ஆனவர்களே. அதனால், முழு மூச்சாய்த் தீவிர சிகிச்சை கால தாமதமின்றி நடந்தது.

காயம் ,நெற்றிப் பொட்டில்பெரியளவில் ஏற்பட்டிருந்ததால், வெகுவாக இரத்தம் வெளியேறிவிட்டிருந்தது. அதனால் அவரது குருதி அழுத்தம் மந்தமாகிவிட்டிருந்தது. பெருமாள் மயக்க நிலையிலேயே இருந்தார். பலதரப்பட்ட மருத்துவர்களும் குவிந்தனர். அவருக்கு உடனடியாகப் பெருமளவு இரத்தம் தேவைப்பட்டது. அவரது குருதி சோதிக்கப்பட்டது.

அவரது குருதிப் பிரிவுக்குப் பொருத்தமான இரத்தம், மருத்து வமனை சேமிப்பில் இருக்கவில்லை. மருத்துவர்கள் திகைத்தனர். அங்கு குழுமியிருந்த அவரது உறவினர்களிடம் வேண்டுதல் விடுத்தனர். சிலர் முன் வந்து குருதியைப் பரிசோதித்தனர். எதுவுமே சரிப்பட்டு ஒத்துவரவில்லை. மருத்துவர்கள் கையைப் பிசைந்துகொண்டனர்.

அந்தவேளையில்தான், சாத்திரியார் செல்லையரும் வந்திருந்தார்.

நிலைமையைப் புரிந்துகொண்டார். அவர் கண்கள் செல்லனைத் தேடின. கண்ணில் பட்டதும் சைகை மூலம் அவனைக் கூப்பிட்டார். அதையே எதிர் பார்த்தது போல, செல்லன் அவரருகே வந்தான்.

மருத்துவரிடம் செல்லனை முன்நிறுத்தி, அவனிடம் குருதி எடுத்துச் சோதிக்கும்படி சொன்னார். பெருமாளின் உறவினர்கள், ஒருவர் முகத்தை ஒருவர் பூடகமாகப் பார்த்தனர். தங்களுக்குள் குசு குசுத்துக் கொண்டனர். ஒரு சிலர், பெருமாளின் உறவினர்கள், செல்லன், இரத்தம் கொடையளிப்பதை, செல்லையரிடம் வன்மையாகக் மறுதலித்து கண்டித்து எதிர்த்தனர்.

"ஒரு கீழ் சாதி, பெருமாளுக்குக் குருதியளிப்பதா? நம்ம சாதியாட் களிடம் எடுத்துப் பாய்ச்சவேண்டும். இது ஒரு அசிங்கமான செயல்..." என்று விதண்டாவாதமாக எதிர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்துக்குப் பாவமில்லை, இப்படி வறட்டுக் கௌரவம் பார்த்தால், பெருமாள் உயிர் பிழைக்க முடியாது என்று சாத்திரியார் வாதிட்டார். அவர்கள் உடும்புப் பிடியாய் முரண்பட்டு நின்றனர்.

"தம்பிமாரே ! இப்பிடியே அடம் பிடித்தால் பெருமாள், தப்பிப் பிழைக்கமாட்டான். சரி ! உடனடியாக உங்களில் ஆராவது இரத்தம் குடுங்களேன் பார்ப்பம். ஆர் வேணாம் எண்டது.? யதார்த்த நிலைமையைப் புரிஞ்சி கொள்ளுங்கோ!"என்று ஆத்திரத்துடன் சொல்லிக் கொண்டு அவர்களைச், சுற்றிச் சுழற்றிப் பார்வையால் நோட்ட மிட்டார்.

ஒருவர் முகத்தை, ஒருவர் பார்த்துக் கொண்டனரே தவிர. பதில் எதுவுமில்லை. அப்போதுதான், சீதா குறுக்கிட்டார்.

"ஐயாமாரே ! என் கணவர் உயிருக்குப் போராடிக் கொண்டு சடலமாய்க் கிடக்கிறார். அவருக்கு இப்ப ஆர் குருதி குடுத்தால் என்ன? குருதியிலும் பாகுபாடு பார்க்கிறீங்களே? உங்கட, வறட்டுக் கௌரவத்தால், நான், என்ர கணவனை இழக்கத் தயாரில்ல." என்று உச்சியிலடித்தது போல, சொல்லிக் கொண்டு, மருத்துவர்களைப் பார்த்துச் சொன்னார்.

"ஐயா ! நான் மனைவி சொல்லுறன். நான் அனுமதி தாறன். மற்றவர்களின் கதையெல்லாம் தேவையில்லை" என்று உறுதியாகச் சொன்னார். பத்திரங்களைக் கேட்டு வாங்கி ஒப்பமிட்டார். செல்லையர் முறுவலித்துக் கொண்டார்.

செல்லனின் இரத்தம் பெருமாளுக்குப் பொருந்தும் என்பது அவருக்கு வெட்டவெளிச்சம். செல்லையர் மருத்துவர்களைத் துரிதப் படுத்தினார்.

செல்லனும் பூரிப்புடன் ஆயத்தமானான். மாதிரி இரத்தம் எடுக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டது. மருத்துவர்கள் பூரித்துப் போயினர். அவனது குருதி வகை அச்சொட்டாக ஒத்துப் போனது. நிம்மதிப் பெருமூச் செறிந்தனர்.

மள மளவென மேற் கொண்டு பெருமாளினருகே செல்லனுக்கும் கட்டில் போடப்பட்டு குருதியேற்றம் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து பெருமாளின் இதயத் துடிப்பு இயல்பு நிலைக்கு மெல்லத் திரும்பியது. செல்லன் அசதி நிலைக்குப் போய், அசந்து அரைத் தூக்க நிலைக்குப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே,சீதா,வள்ளி,மேலும், உறவுக்காரர்கள் பெருமாளின் சுகம் வேண்டி பிரார்த்தனையுடன் நின்றனர். இனிக் கவலைப் படத் தேவையில்லை என, மருத்துவர்கள் கூறியதும் நிம்மதிப் பெருமூச்செறிந்து கலைந்தனர்.

நேரம் கடந்தது.......

பெருமாள் மெல்லக் கண் விழித்தார். தான் மருத்துவ மனையில் படுப்பதை உணர்ந்து கொண்டார். தனக்கு "சேலைன்" பாய்ந்து கொண்டிருப்பதையும், ஒரு கணத்தில் ஊகித்துணர்ந்து சுற்று முற்றுப் பார்வையைச் செலுத்தினார். தனக்கு அண்மையாகக் கட்டிலில், செல்லன் படுப்பதையும் பார்த்து, ஒரு கணம் நெஞ்சம் பதறியது. அவன் அசதியில் உறங்கிகொண்டிருந்தான்.

"இவன் ஏன், எப்படி இங்கு வந்தான்? " என்றவாறு மனம் அலை பாய்ந்தது.

அண்மையில் நின்ற தாதியை சைகை மூலம் அழைத்தார். தனக்கு என்ன நடந்தது என்று அவளை மெல்லிய குரலில் வினவினார். அவள் நடந்தவற்றை சுருக்கமாய்ச் சொன்னாள்.

"இவனுக்கு என்ன நடந்தது? "என்று செல்லனைக் காட்டிக் கேட்டார்.

"அவர் தான் ஐயா, உங்களுக்கு இரத்தம் தந்தவர்."

பெருமாளுக்கு, உச்சியில் பாறாங்கல்லால் தாக்கியது போல பதறினார். அவரது பதற்றத்தை, அவருடலில் பொருத்தியிருந்த கருவி தெட்டத்தெளிவாகக் காட்டியது. அதனைப் பார்த்த தாதி எச்சரித்தாள்.

"ஐயா! உங்கள் உடல்நிலை, இன்னும் சீராகவில்லை. மனதைச் சாந்தமாக வைத்துக் கொள்ளவேணும். ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டீர்கள். உங்கள் குருதி வகை, எங்களிடம் சேமிப்பில் இருக்கவில்லை. எத்தனையோ ஆட்களிடம் சோதித்துப் பார்த்தும் எதுவுமே ஒத்துவர வில்லை. ஆண்டவன் புண்ணியம், இவரோட இரத்தம் மட்டுமே பொருந்தியிருந்தது. இரத்தம் பாய்ச்சுவது தாமதித்திருந்தால் உங்கள் நிலை இக்கட்டில் போயிருக்கும். "

தாதி சொல்லச் சொல்ல, பெருமாளின் காதுகளில், ஈயத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சி ஊற்றியது போல, முழு உடலும் அணுவணுவாக அசிங்கத்தில் துடித்தது. கண்களை இறுக மூடிக்கொண்டார். ஆனால் மனதில் ஆர்ப் பரித்து எழுந்த, அருவருப்பான எண்ண அலைகளை அடக்கமுடியவில்லை. இப்படியும் உயிர் பிழைக்கவேண்டுமா என ஆற்றாமையும், கோபமும் ஒரேயடியாகத் தாக்கின.

அப்போதுதான், நோயாளிகளைப் பார்த்துக் கொண்டுவந்த மருத்துவர் பெருமாளிடமும் வந்தார். பெருமாளைப் பெயர் சொல்லி அழைத்தார்.

"ஐயா, பெருமாள் ! உடல் வருத்தம் எப்படியிருக்கு ? கருவிகள் எல்லாம் நல்லபடியே காட்டுது. விரைவில் வீடு போகலாம் என்று நினைக்கிறம். " என்றவாறே, கருவிகளை அவதானித்தபடியே "ஸ்டெதஸ் கோப்பாலும்" பரிசோதித்தார். திருப்தியுடன் தன் தலையை ஆட்டிக் கொண்டார்.

"தருகின்ற மருந்துகளை ஒழுங்காகச் சாப்பிடுங்க. " என்றபடியே செல்லனிடம் வந்தார்.

"செல்லா..! உங்க உடல் நிலை ஓகே தானே? நீங்க இப்பவே வீட்ட போகலாம்."

மருத்துவர் அகன்றுவிட்டார். செல்லன், பயத்துடனும் பரிதவிப் புடனும் பெருமாளைப் பார்த்தான். அவர் அவனைச் சுட்டெரிப்பது போலப் பார்த்தார். அவன் தலையைக் குனிந்து கொண்டான். உள்ளம் அச்சத்தில் உறைந்தது.

பெருமாள் கண்களை மூடிக்கொண்டார். செல்லன் வெளியே வரவும், பெருமாளின் மனைவி சீதா, வள்ளியுடனும், வேறு உறவினர் களுடனும் பெருமாளிடம் வந்தனர்.

○•••••○

வெளியே வந்த செல்லனின் மனதில், நிம்மதி அலை மோதியது. தனது அம்மாவை நினைத்துக் கொண்டான். அவனது அம்மா, இறக்கும் தறுவாயில் அவனிடம் கூறிய வார்த்தைகள் காதில் அலை மோதின.

"செல்லா !.... பெருமாளை நீ எண்டைக்கும் விட்டுப் பிரியக் கூடாது. என்ன நடந்தாலும் பொறுமையுடன் அவருடனே சாகும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாய் இருக்கவேண்டும்." என்று சொல்லி இன்னும் ஒரு விடயத்தையும், இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என கூறி உயிர்விட்டார்.

O•••••O

செல்லனின் அம்மா பூமணி, நல்ல பேரழகி ! சேற்றில் விளைந்த செந்தாமரை. காண்பவர்களைக் கவர்ந்து இழுக்கும் கட்டழகி .

எல்லாப் பெண்கள் மீதும், மன்மதக் கணை வீசும் சிவபாதர், கட்டழகியான பூமணியையும் தன் காமக் கணை வீச்சில், வீழ்த்தியும் விட்டார். மனைவி, குழந்தைப் பாக்கியம் இல்லாததாலும், நோயாளி யானதாலும் பூமணியை நிரந்தரமாக்கிக் கொண்டார்.

பெருமாளின் மனைவிக்கு, குழந்தை கிடைப்பதுக்கு எல்லாவித வைத்தியங்களும் செய்து களைத்து, கடைசியில் அவரது நெருங்கிய நண்பரான செல்லையாவே சித்த மருத்துவம் பார்த்தார். அதன் பலாபலனாகப் பிறந்தவர்தான் பெருமாள். பெருமாளுக்கு முன்பே, சிவபாதருக்கும் பூமணிக்கும் பிறந்தவன்தான் செல்லன், இந்த இரகசியம், செல்லனுக்கும் தாய் மூலம்சொல்லப்பட்டது. அவனும் அதனைக் காத்து வந்தான். அந்த உறவினால்தான், தனது இரத்தம் பெருமாளுக்கு அச்சொட்டாகப் பொருந்திவந்தது என்பதும் அவனுக்குப் புரிந்தது. உடல் முழுதும் புல்லரித்தது.

புதிதாக அவனுக்குச் செல்லையாச் சாத்திரியார் மேல் இனம் புரியாத சந்தேகமும் முளைவிட்டது. ஏன் அவர் தன்னை குருதி கொடுக்கச் சொன்னார் ? அப்படியானால், அவருக்கும் இந்த இரகசியம் தெரிந்ததோ? என மூளை குழம்பிற்று.

அன்றே, செல்லையாச் சாத்திரியாரும் பெருமாளை நலன் விசாரிக்க வந்தார்.அவரைப் பார்த்ததும், வழமையான புன்முறுவலோ, மதிப்பு ணர்வோ முகத்தில் பரவவில்லை. வேண்டாவெறுப்பாக வலுக்கட்டாயமாக "வாங்க ஐயா!" என்றார்.

செல்லையர் பெருமாளின் மனவோட்டத்தை, துல்லியமாய் அளவிட்டுவிட்டார்.தொண்டையைக் கனைத்து குரலைச் சரிப்படுத்திக் கொண்டார். பெருமாளின் முகத்தை, ஆழ ஊடுருவிநோக்கினார்.

சில நொடிகள், கண்களைமூடி, தன்னை, நிதானப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். தன்னைச் சுற்றிலும் ஒருமுறை நிதானமாக நோட்டமிட்டார். அவரையும், பெருமாளையும் தவிர, எவருமே அண்மையில் இல்லை.

"பெருமாள் ! நான் இப்ப சொல்லப் போவதைக் கவனமாகக் கேள் .சொல்லப் போறவை, உன்னை மிகவும் அதிர்ச்சியடைய வைக்கும் என்பது எனக்குத் திண்ணம். ஆனாலும்,செல்லனின் இரத்தம் பாய்ச்சப் பட்டு விட்டதே என்ற, அசிங்க உணர்வு உன்னுள் எழுந்து உன்னை, வாட்டிவதைக்கும் என்பதும் எனக்குப் புரியும். ஆனால், நான் சொல் வதைக் கேட்டபின், நிச்சயம் உன் உள்ளத்தில் தெளிவும் அமைதியும் ஏற்பட்டு, சாந்தியடையும் என்பது, என் பெருமான் முருகனுக்கு வெளிச்சம்." என்று ஆரம்பித்த செல்லையர், சிறிது தாமதித்து கண்களை மூடி, முருகனைப் பிரார்த்தித்தார்.

"அப்பனே முருகா...! எல்லாம் உன் செயலே. " என வாய்க்குள் முணுமுணுத்தார். அது,பெருமாளுக்கும் துல்லியமாய் காதில் விழுந்தது. என்ன சொல்லப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு அவரின் நாடித்துடிப்பை அதிகரித்தது.

"பெருமாள்! இதைவிட்டால், பொருத்தமான தருணம் இனிமேல் வருமா என்பது சந்தேகமே. எவ்வளவோ காலம், மனதுக்குள் போட்டுப் புதைத்த வைத்த உண்மைகள் வெளியே வரவேண்டிய நேரம் வந்துவிட்டது. என்னோட இறப்புடன், அவையும் இறந்து விடக்கூடாது..."

"பெருமாள்! உன் அப்பாவை, உன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட அப்பா என்று மட்டுமேதெரியும். ஆனால் சிவபாதனை, எனக்கு சிறு வயதிலிருந்தே முற்று முழுதாய்த் தெரியும். ஒன்றாய்ப் படித்து, ஒன்றாய் வளர்ந்தவர்கள் நாங்கள். எங்களுக்கிடையே எந்த ஒளிவு-மறைவுகளுமே கிடையாது. நாங்கள் உறவினர்கள். ஆருக்குமே தெரியாத ஒரு இரகசியம், அவனுக்கும் எனக்கும் மட்டுமே தெரியும். இப்போது, உனக்கும் தெரியப் போகிறது. நான் சொல்லப் போகிறது, உனக்குப் புதிதாகவும், பேரதிர்ச்சியாகவும், சீரணிக்க முடியாத வேதனையாகவும் இருக்கலாம். நீ மனத்திடமானவன். சீரணிக்கும் சக்தி உனக்கு உண்டு, என்பதை நான் நன்கு அறிவேன்." என்றவர் கணநேரம், நிறுத்தி-நிதானித்து, பெருமாளின் முகத்தில் ஏற்படும் உணர்வுகளைக் கூர்ந்து அவதானித்தார். பெருமாளின் முகம் இறுகிக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெருமாள் ! உனக்குச் செல்லனின் இரத்தம் எப்படிப் பொருந்தியது, என்று தெரியுமா ? அவன் உனக்கு இரத்த உறவு. உனது அண்ணன். நீங்க இருவருமே, சிவபாதரின் வித்து. உன் அம்மாவுக்குக் குழந்தைப் பாக்கியமில்லை என்று தப்பான முடிவெடுத்து, செல்லனின் அம்மாவை நாடியவர்தான் உன் அப்பா. எங்கே தனக்கு வாரிசு இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சத்தில் நடந்த, சம்பவமே அது. எனது விடா முயற்சியான சிகிச்சையால்தான், நீ இரண்டு ஆண்டுகள் கடந்து பிறந்தாய். இது, எனக்கும் உன் அப்பாவுக்கும், செல்லனின் அம்மா, பூமணிக்கும் மட்டுமே தெரிந்த இரகசியம். ஆனால் செல்லனுக்கும், சாட மாடையாய், தாய் மூலம் தெரியும் என்பதும் எனது ஊகம். ஆனால், அவன் எந்தச் சந்தர்ப்பதிலும் அதைக் காட்டிக்கொண்டதில்லை. அவன், உனது சொத்துப் பத்துக்கு ஆசைப் பட்டவனில்லை. என்றும் உனக்கு விசுவாசமாகவே நடக்கும் ஒருவன். உனது நிழலாகவே, அவன் எப்போதும் நடந்து கொண்டான். இனியும் நடப்பான். இவ்வளவு காலமும் என் மனதில் வைத்துப் பூட்டி வைத்திருந்தவற்றை உனக்குச் சொல்லிவிட்டேன். இனி உன்பாடு." என நிறுத்தித் தன்னை ஆசுவாசம் படுத்திக் கொண்டார்.

பெருமாள் எல்லாவற்றையும், நிதானமாகக் கேட்டுக்கொண்டு கண்களை மூடிக்கொண்டார். எல்லாமே சித்து விளையாட்டுப் போலிருந்தது. கேட்பது, கனவா நனவா எனத் திகைத்து அமைதி காத்தார்.

செல்லையர், பெரியதொரு பாரத்தை, இறக்கி வைத்துவிட்டு எழுந்தார். "சரி ! நான் கிளம்புறன். நீ வீட்டை வந்த பிறகு வந்து பார்க்கிறன். " பெருமாள்,தலையை மட்டும் ஆட்டி விடை கொடுத்தார்.

O•••••O

பெருமாள் ஓரளவு சுகமானதும், வீடு திரும்பினார். அவரது உள்ளம், தெளிவு பெற்றிருந்தது. செல்லையரை வரவழைத்திருந்தார். நீண்ட நேரமாக பல விடயங்களை, செல்லையருடன் அலசி ஆராய்ந்தார். தீர்க்கமான சில முடிவுகளை, அவர் முன்பாகவே பேசித் தீர்மானித்துக் கொண்டார். இவ்வளவு விரைவாக ஒரு நல்ல முடிவுக்கு வந்ததை எண்ணிச் செல்லையர் மிகுந்த ஆச்சரியப்பட்டார். செல்லனை, அவரின் முன்பே கூப்பிட்டார். அவனும் பாய்ந்து விழுந்துவந்து நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்லா ! உனது மகன் முகிலனை, என்னை வந்து இன்றே பார்க்கச் சொல்லு. அவனது சங்கத் தீர்மானக் கோரிக்கைகளையும் கையோடு, எடுத்துவரச் சொல்லு." என்று புன்னகைத்துக் கொண்டே சாதாரண தொனியில் கூறினார்.

அதில் எதுவித அதிகாரத் தோரணையும் இல்லாதது செல்லனை ஆச்சரியப்பட வைத்தது. பக்கத்திலிருந்த, செல்லையரையும் ஏடெறுத்துப் பார்த்தான். செல்லையர் மர்மப் புன்னகையைச் சிந்தினார். கண்களைச் சிமிட்டினார். என்ன நடக்கிறது என்பதையே புரிந்துணராத செல்லன், தான் காண்பது கனவா நனவா என எண்ணித் திகைத்து நின்றான். அவனது குழப்ப நிலையை உணர்ந்த செல்லையர் சொன்னார்.

"அடேய் ! செல்லா...! இனிமேல், உன்ர மகன் முகிலந்தான், பெருமாள் ஐயாவின், எல்லாத் தொழிற்துறைகளையும் பொறுப்பெடுத்து நிர்வகிக்கணும். அவன் கேட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறை வேற்ற வேண்டியது அவனது பொறுப்பு. பெருமாள் ஐயா,இனித்தான் உண்மையான பெருமாள் தெய்வம். ஊரே கொண்டாடப் போகிறது."

செல்லையர் சொல்லச் சொல்ல, செல்லனின் முகம் ஆயிரம் "வோல்டேஜ்" மின் குமிழ் போல பிரகாசித்தது. பெருமாளுக்கு ஏற்பட்ட, சிறு விபத்து, அவரை முற்றகவே மாற்றிவிட்டதா என நம்ப முடியாமல் சிலையாய் நின்றான்.

"இப்போதே போ ! முகிலனைத் தேடிப் பிடித்து கையோடு கூட்டி வா" என்றார் பெருமாள்.

(யாவும் கற்பனை)

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

# கராட்டி மாஸ்ரர் கணேசன்

அது,1980- ஆண்டு காலப் பகுதி.......

ஈழத்தில் அரச பயங்கரவாதம் முகை விட்டு வெடித்து, தீயாய்ப் பரவி, இயல்பு வாழ்க்கை சிதைந்து சிதிலமாகிவிட்டிருந்த வேளை.....

மழைக்காளான்கள் கணக்காய், பல்வேறு இளையோர் இயக்கங்கள் ஒவ்வொரு பெயரிலும் முளை விட்டிருந்தன. யார் பெரியவர், யார் தமிழரை தலைமையேற்று வழி நடத்துவது என்ற போட்டா போட்டி மனப்பான்மையின் விளைவாக, கண்ட கண்ட இயக்கங்களெல்லாம் விடுதலைப் போராட்டம் என்ற போர்வையைப் போர்த்தி, அரச படை களைச் சீண்டிச் சினமூட்டிக் கொண்டிருந்தன.

உலகிலேயே ஒற்றுமையில்லாத-ஒருமைப் பாடில்லாத இனம் என்றால், அது தமிழ் இனமே என்பதைக் கட்டியம் கூறி நிருபித்துக் கொண்டிருந்த சூழல்.....

மூவேந்தரிடமில்லாத ஒற்றுமை புதிதாய் எங்கே வந்துவிடப் போகிறது?

வேலை வாய்ப்பின்மை, இனப்பாகுபாடு, ஒடுக்குமுறை, கல்வித்தரப்படுத்தல் என்பன பல வடிவங்களில் தமிழரைக் குறி வைத்து கடித்துக் குதறின.

படித்த வாலிபர்களும், அரசு பதவிகள் வகித்தவர்களும் தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம் எனக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, வெளி நாடுகளுக்குத் தப்பியோடினர். பணம் பொருள் படைத்தோர் முன்னிலை வகித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த குறி நீதான் என்றவர்களும், அச்ச உணர்வில் தூண்டப் பட்டவர்களும், நகை நட்டுகளை, காணி பூமிகளை விற்றோ அடவுவைத்தோ, வெளி நாடு போக முண்டியடித்தனர்.

அரசியல் பிரச்சனையில் அகப்படாமலிருக்க, கூண்டிலிருந்து வெளியேறிய பறவைகள் கணக்காய் திக்குத் திசை அறியாது, கிடைத்த வாய்ப்புகளைப் பயன் படுத்திக்கொண்டவர்களில் நானும் ஒருவன்.

இத்தனைக்கும் நான் ஓர் ஆசிரியர். அரசியல் சூறாவளியில் சிக்கிக் கொள்வதைத் தவிர்ப்பதற்காகக் கடன்பட்டு, ஒருவித நப்பாசையில் யேர்மனிக்கு இடம்பெயர்ந்து கூடு கலைந்து பறந்தேன்.

பறவைகள் யாவும் திசையறிந்தே புலம்பெயரும். ஆனால் நானோ, என் போன்றவர்களோ சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சாத்தியமான நாடாக யேர்மனியைத் (பெர்லின்) தேர்ந்து பயன்படுத்திக் கொண்டோம்.

நான் வந்து சேர்ந்தது, கிழக்கு யேர்மனி என அந்நாளில் அழைக்கப்பட்ட (DDR) 'கொம்யூனிஸ்ட் யேர்மனி. - கிழக்கு - பெர்லினில்.

அங்கு வந்து இறங்கியவுடன் 24-மணித்தியாலங்களில், மேற்கு-பெர்லின் எல்லைக்குள் போய்விட வேண்டும்.

இரண்டாம் உலக யுத்தத்தில் யேர்மனி, நேச நாட்டுப் படைகளால் வெற்றிகொள்ளப்பட்டதன் பின்னர், பெர்லினை பங்கு போட்டுக் கொண்டன.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆளுகையில் மேற்கு பெர்லினை தங்களுக்குள் மேலும் பங்கு போட்டுக்கொண்டன.

ரஷ்ய ஆளுகைக்கு உள்பட்ட கொம்யூனிஸ்ட் கிழக்கு யேர்மனி, மேற்கு பெர்லினைச் சுற்றி இரவோடு இரவாக, சுற்று மதில் கட்டி மின்சாரக் கம்பி வேலியும் அமைத்து தனிமைப்படுத்திக் கொண்டது.

கொம்யூனிஸ்ட் யேர்மனியில், மிகவும் கெடுபிடியான கொம்யூனிஸ்ட் அடக்கு முறை ஆட்சி.

மேற்கு- பெர்லினில், அகதியாக அரசியல் தஞ்சம் கோரியோர் கும்பல் கும்பலாக வந்து குவிந்தனர். அரபு, துருக்கி, ஆப்கானிஸ்தான், பங்களாதேசம், வியட்நாம் போன்ற நாட்டுப் பிரசைகள் கண்டமேனிக்கு வந்து குவிந்தனர். அதில் ஈழத் தமிழர்களும், நான் அடங்கலாக அடக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு - பெர்லினுக்கு வந்து சேர்ந்துவிட்டால், அங்குள்ள வெளி நாட்டு விவகாரங்களுக்கான பொலீசில், கட்டாயம் பதிந்து கொள்ள வேண்டும். எமது கடவுச் சீட்டை ஒப்படைத்து, எமது அரசியல் பிரச்சனை களை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் விசாரணையின் பின்னர், சோசியல் உதவி வழங்கும் நிலையங்களுக்கு அனுப்புவார்கள்.

வெளிவிவகார பொலீஸ் நிலையத்தில் அதிகாலையிலேயே கிலோ மீற்றர் நீண்ட, பல்லின தஞ்சக் கோரிக்கையாளர்கள் எறும்புக் கூட்டமாய் குவிந்து நிற்பர். தள்ளு முள்ளுப் பட்டு உள்ளே நுழைய வேண்டும் போதும் போதும் என்றாகிவிடும்.

அலுவலகம், காலை- 8.00 மணிக்கே திறக்கும். ஆனால் நாங்கள் குவிவதோ அதிகாலை மூன்றுநான்கு மணிக்கு. நான் வந்திருந்த வேளை குளிர் காலம், பழக்கமில்லாத கால நிலை.

எப்படித்தான் முன்னே போய் வரிசையில் நின்றாலும், முன்னேறுவது அசாத்தியம். நின்ற இடத்திலேயோ, அல்லது பின் நோக்கியோ தள்ளப் படுவோம்.

வல்லவன் வகுத்த வழி என்பது போல், அரபி, துருக்கி இனத்தவர்கள், பின்னே வந்து முன்னே நுழைவர். நாங்கள் அஞ்சி அடங்கி பின் வாங்குவோம்.

ஏற்கெனவே வதிவிட அனுமதி கிடைத்து தொழில் செய்பவர்கள், யேர்மன் மொழி பேசுபவர்கள், வசதி வாய்ப்புடன் வாழ்பவர்கள், தமது புதிய உறவினர்களை அழைத்து வருவார்கள். ஆடம்பர, விலை மதிப்பான கார்களில் கொண்டுவந்து இறக்கி, வரிசையில் முன்னே கொண்டுவந்து புகுத்துவார்கள்.

பொலிஸ்காரர்கள் கூட, கண்டும் காணாதது போல், அவர்களுடன் முரண்படுவதைத் தவிர்த்துக்கொள்வார்கள். நாங்கள் வீறாப்பாய்க் கதைத்தால், கை நீட்டுவார்கள். முகத்தில் காறித்துப்புவார்கள். அது அவர்களின் சாதாரண நடத்தை. இவற்றையெல்லாம் பொலிசார் பெரிது படுத்துவதில்லை. அவர்களும் துப்பலுக்கு ஆளாகியதுமுண்டு.

○•••••○

அன்று ஒரு 'வின்ரர்' குளிர் நாள்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்குமிடமெல்லாம் துருவிய தேங்காய்பூ போல், பனி படர்ந்து நிலத்தையே வெண் போர்வையால் போர்த்தியிருந்தது. பார்ப்பதற்கு அழகுதான் ஆனால் எம்மிடத்தில் குளிருக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய மேலங்கியோ, 'சுவிற்றர், பாதணிகளோ, கழுத்துச் சால்வைகளோ கிடையாது.

உறை பனியால் எமது உடல்களும் விறைக்க ஆரம்பித்தன. கால்,கை நகங்கள் குளிர் மிகுதியால் ஊசி குத்துவது போல் வலித்தன. தள்ளு முள்ளு ஆரம்பித்தது. முன்னேற வேண்டிய எங்கள் குழு பின் தள்ளப்பட்டது.

என்னை இடித்துக் கொண்டு பல அரபிகள் உள்நுழைந்தனர். நான் நிலை தடுமாறிய போது, நண்பன் ஒருவன்கூறிய 'ஐடியா' நினைவுவந்தது......

"ஓஓ...! அல்லாஹ்..!" என்று சத்தமிட்டேன்.

என்ன ஆச்சரியம்? எனது 'ஐடியா' பலித்தது.

"ஓ...!.நீ முசல்மானா ?" (இஸ்லாமியனா) என்று கொச்சை ஆங்கிலத்தில் கேட்டுவிட்டு "சகோதரம்...முன்னே வா.." என்று அன்புடன் உபசரித்தான் அந்த அரபி. அருமையான யோசனை. மனதுக்குள் சிரித்துக்கொண்டேன்.

எனது பின்னாடி நின்ற ஈழத் தமிழர்கள் இங்கும் அஞ்சியடங்கி ஒடுங்கி, பின் வாங்கிக் கொண்டிருந்தனர் அச்சத்துடன்.....

"சீ..சீ... என்ன ஒரு சீர் கெட்ட வாழ்க்கை....."

'பொலீஸ்' அலுவலக வாசல் திறந்தது, கோவில் மடை வாசல் திறந்தது போல.... யாவரும்முண்டியடித்து உள்ளே நுழைந்தனர். அப்போதும் கூட' பென்ஸ் காரில் வந்து

இறங்கி, முன்னே பாய்ந்து புகுந்தனர் துருக்கி- அராபி இனத்தவர்கள்.

என் பின்னே சற்றுத் தூரத்தில் நின்ற ஒரு ஈழத் தமிழ் இளைஞர் ஆங்கிலத்தில் சத்தமிட்டான். எதிர்ப்பு எழுவதைக் கண்டதும் அவனை நோக்கி, அரபி-துருக்கியினர், வேட்டை நாய் போல பாய்ந்தனர். அவனை இழுத்து போட்டு அடிக்க ஆரம்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுதான்.... !

எதிர்பாராத தாக்குதலால் விழித்தெழுந்தவன், சீறிச் சினந்து தனியாளாக தனது கைவரிசையைக் காட்டினான்.

அப்பப்பா...! என்ன ஒரு துணிச்சல்...? என்ன வேகம்...! எத்தகைய ருத்திரம்...! தன்னந் தனியே, பம்பரமாய் சுழன்றான். ஒரே வீச்சில்... சுழற்சியில்... பலர் நிலத்தில்... வேரறுந்த மரம் போல் வீழ்ந்தனர். பலர் அலறியடித்து ஓடினர்.

ஒரு சிலரே எதிர்த்து நின்றனர். பின்னர், அவனை சமாளிக்க முடியாது பின் வாங்கினர். எதிர்த்துத் தாக்கிய வாலிபன் கராட்டியை, முறையாய்க் கற்ற அனுபவசாலி போலும்.

"டேய்...! நீங்க... எல்லாம் தமிழர்கள் தானே ? எதிர்த்து அடியுங்கடா...! அகதியாய் இந்த நாட்டுக்கு வந்தும், கண்டவன் வந்தவனிட்டையெல்லாம் அடி படப் போறிங்களா..?"

சூறாவளி போல சுழன்று அடித்தபடியே கர்ச்சித்தான். வரிசையில் நின்ற மற்றத் தமிழ் வாலிபர்களும் ஊக்க ஊசி போட்டது போல், அவனுக்குத் துணையாகத் துணிந்து இணைந்தனர்.

ஈழத்தமிழரின் சூறாவளிப் பாய்ச்சலில் பின் வாங்கிச் சிதறி ஓடினர். வீதி ஓரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவர்களின் "பென்ஞ்" கார்கள் தலை குப்புறக் கவிழ்ந்தன.

தமிழரின் துணிச்சலை, வீரத்தை அன்றுதான் "யேர்மன் பொலிஸ்" கண்கூடாகப் பார்த்தது. பாராட்டும் வார்த்தைகளை தம்மை மறந்து உரத்துக் கூவினார்.

"கமோன்...... "கமோன்.... ! வெல் டண்... !"

தாங்கள் செய்ய முடியாததை இவர்களாவது செய்கின்றார்களே என்ற பூரிப்பு....

அவர்களுக்கு ஈழத்தமிழர் மீது அன்றுதான், முதல் தடவையாக மரியாதை ஏற்பட்டது. மற்றைய நாட்டினரும், அறபு, துருக்கி இனத்தவர் களும், விதிர் விதிர்த்து வாயில் கை வைத்து நின்றனர்.

இதுவே ஆரம்பம்....!. ஆட்டம் மேலும் தொடர்ந்தது....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழர் என்றால் ஓர் அச்சமும், மதிப்பும் ஏற்பட்டிருந்தது. அதனை ஆரம்பித்து வைத்த துணிகர வீரத்தமிழன் யார் என விசாரித்தபோது, அவர்தான் "யாழ்-பிரபல கராட்டி மாஸ்டர்" கணேசலிங்கம் என்ற தகவல் கிடைத்தது. மிகவும் பெருமையாக இருந்தது.

ஆனால், அவரைச் சந்தித்து உரையாடி வாழ்த்துச் சொல்ல எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை. அவரது முன்மாதிரியும் துணிச்சலும் இன்றும், பெர்லின் வாழ் பழைய தமிழர்களிடையே பேசு பொருளாக நிலவுகிறது.

❍•••••❍

**(இது வெர்ளினில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம். மிக நீண்ட நாட்களின் பின் அவரை எதிர் பாராவண்ணம் இலண்டனில் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது.)**

❍❍



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

# குரு தட்சணை

இரவில் போர்த்தியிருந்த மெல்லிய போர்வையான, மூடு பனி இன்னும் விலக வில்லை. வீட்டைச் சுற்றியிருந்த மா, பலா, தென்னை இன்னோரன்ன மரங்கள், மூடு திரையுக்குள் அடக்கம்.

காசிநாதன் வாத்தியார், குளிரைப் பொருட்படுத்தாது எப்போதும் போலவே வேளைக்கு எழுந்து, வழமையான காலைக் கடமைகளை மாச்சல் படாமல் செய்யத் தொடங்கினார். தென்னங்கீற்றிடையே காலைச் சூரியன், சோம்பலுடன் ஒழுங்கில்லாத ஒளிக் கதிர்களை ஊடறுதுப் பாய்ச்ச முயன்று கொண்டிருந்தது. அதில் கொஞ்சம் கூட வெப்பக் கத கதப்பு சுவறவில்லை.

காக்கை குருவிகள் கூட இன்னும், கூட்டுக்குள்ளேயே சோம்பலில் முடங்கிக் கிடந்தன போலும். அவற்றின் பறப்பைக் கூட காண முடியவில்லை.

வாத்தியார், தென்னம் பாளைகளைத் தீ மூட்டி, குண்டான் சட்டியில் நீரை மொண்டு, சூடு படுத்தத் தொடங்கினார். பச்சைத் தண்ணீரில் குளித்தால் சளி பிடித்துவிடும் என்ற பயம். கால் கை முகம் கழுவக் கூட மனைவிக்கும் சுடு நீரே வேண்டும். தென்னம் பாளையும், ஓலையும் சட சடத்து சுடர்விட்டு எரியத் தொடங்கின.

சில மணித்தியாலங்களில், ஆலங்கேணியிலிருந்து கிண்ணி யாவுக்குப் போயாக வேண்டும். தொகுதி "எம்பி" கொழும்பிலிருந்து வந்திருப்பதாக அறிந்தார். வாத்தியாரின் பழைய ஆரம்ப கால மாணவன் அவர். இதுவரை அவரிடம் எந்த உதவியும் கேட்டுப் போகாதவர். இப்பதான், தன் மகனுக்காக முதன் முதலில் போகத் தீர்மானித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி மகன் கலாசாலை முடித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருந்தான். திறமை இருந்தும், அரசியல் செல்வாக்கு இல்லாததால் எதுவுமே கிடைக்கவில்லை. தன் திறமையை நம்பியதால், சிபார்சுகளை எதிர் பார்க்கவில்லை. இலஞ்சம் கொடுத்து வேலை பெறுவதை அவன் சிறிதும் விரும்பவில்லை.

அந்தளவுக்கு இலட்சக்கணக்கில் தாரை வார்க்கவும் வாத்தியாரிடம் வசதியில்லை. "பென்சன்" காசு, சீவியத்துக்கே போதாதிருந்தது. மனைவியின் கெட்டித்தனத்தில் வாழ்க்கை நகர்ந்தது. மனைவிதான், "எம்பி"யை போய்ப் பார்க்கச் சொல்லி நச்சரித்துக் கொண்டிருந்தாள்.

வங்கி மேலாளருக்கான நேர்முகத் தேர்வுக்குப் போய் விட்டு வந்து, முடிவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான் மகன். அவனைப் பொறுத்தமட்டில் முழு நம்பிக்கையுடனிருந்தான். மனைவியின் நச்சரிப்புத் தாங்காமல் அரை மனதுடன் இதோ போகப் புறப்படுகிறார்.

நீர் சுட்டதும், மேலை அரை குறையாகக் கழுவிக்கொண்டு, மனைவி அவித்த இடியப்பத்தில், இரண்டு மூன்றைத் தேங்காய் சம்பலுடன் பிசைந்து பொக்குவாயால், அரைகுறையாக குதப்பி விழுங்கினார். இஞ்சி போட்ட தேனீரை உறிஞ்சினார்.

நேற்றே, காற்று அடித்து நிரப்பி, துடைத்து வைத்திருந்த துருப்பிடித்த பழைய 'றலி' சைக்கிளை உருட்டிக் கொண்டு, தெருக் கடப்புக்கு வந்தார்.

"அப்பனே....முருகா..." என முனங்கிக் கொண்டே வீதிக்கு வந்தார்.

"பாத்துப் போங்க...!." என்று மனைவி வாசல் வரை வந்து வழி அனுப்பினாள். அவளது அக்கறை வார்த்தைகளை காதில் வாங்கிக் கொண்டார்.

"ஓம்...ஓம்..! எத்தனை மணிக்குத் திரும்புவன் எண்டு தெரியாது." என்று சைக்கிளில் ஏறி மிதித்தார். அது கிறீச்சிட்டு உருண்டது. அவர் சந்தியில் போய் திரும்பும் வரை மனைவி பார்த்துக் கொண்டு நின்றாள்.

மேடும் பள்ளமுமாய் இருந்த வீதியில், 'சைக்கிள்' வளைந்து நெளிந்து கிறீச்சிட்டு உருண்டது. அவரால் மட்டும்தான் அதை ஓட்ட முடியும். வேறு யாரும் அதை இரவல் கேட்பது கூட இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறவலும், களி மண்ணும் பரப்பிய வீதி, இடையிடையே மணற் பாங்காகவும் இருந்தது. மாட்டு வண்டிகளின் இரும்புச் சக்கரங்கள் வீதியை, பல இடங்களில் பதம் பார்த்தி ருந்தன.

ஒருவாறு குட்டிக் கரைச்சைச் சந்திக்கு வந்துவிட்டார். சந்தியிலிருந்து 'எம்பி' யின் வீடுவரை இனித் தார் வீதிதான் விரைவாகப் போய் விடலாம். வழி நெடுகிலும், அவரிடம் படித்தவர்கள், தெரிந்தவர்கள் வணக்கம் செலுத்தி மரியாதை செய்தனர்.

சன நடமாட்டம், சுறுசுறுப்புடன் இருந்தது. 'எம்பி' யின் வீட்டுக்கு வந்தபோது ஏற்கெனவே கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆனாலும், வாத்தியாரை வரவேற்று வழி விட்டனர்.

'எம்பி'யின் செயலாளர் வாத்தியாரைப் பார்த்துவிட்டான். அவரை அவனுக்கு அறிமுகம் உண்டு. வணக்கம் வைத்துக் கொண்டு, ஏற்கனவே அமர்ந்திருந்த ஒருவனை எழுப்பி, அவருக்கு இடம் அளித்தான்.

"இதில இருங்க ஐயா!, 'எம்பி' யிடம் சொல்லுறன்" என்று உள்ளே புகுந்தான்.

நேரம் ஆமை வேகத்தில் நகர்ந்தது......உள்ளே போன செயலாளன், நீண்ட நேரமாய் வெளியே வரவில்லை.

எம்பியிடம் எப்படிக் கதையைத் தொடங்குவது, என்ன கேட்பது என்று மனதுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டார். மகனுக்கு வேலை கிடைக்க, உதவுவாரோ இல்லையோ என்ற ஆதங்கம் வேறு, அவர் மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. தன்னிடம் படித்த மாணவந்தானே என்ற நப்பாசையும் முன்னெடுத்தது.

O•••••O

எம்.பி, படிப்பில் சரியான மொக்கை, பாடசாலைக்கும் அடிக்கடி மட்டம் அடிப்பார். அவரிடம் தவிர, மற்ற விஞ்ஞான-கணித ஆசிரியர் களிடம் அடிவாங்காத, நாளே இல்லை எனலாம்.

காசி நாதரிடம், அதிபர் என்ற வகையில், நிறைய திட்டுக்கள் மட்டும் வஞ்சகமில்லாமல் வாங்குவார். சில வேளையில் சினம் பொறுக்காமல், "நீயெல்லாம் ஆடு மாடு மேய்க்கத்தான் லாயக்கு." என்று வெடித்து விழுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதெல்லாம், கொஞ்சமும் சுரணையில்லாமல் இளித்துக் கொண்டே நிற்பார். முதல் தடவையில், 'ஓ.எல்.' பரீட்சையில் நாலைந்து பாடங்களில் மட்டுமே சித்தி பெற்றார். இரண்டாவது முறை, என்ன மாயமோ சில திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்தாலும், கலாசாலை போக முடியவில்லை.

தந்தையின் பணச் செல்வாக்கில் ஆசிரியானார்.

நாளடைவில் உள்ளூர் அரசியலில் ஈடுபட்டு, செல்வாக்கும் பெற்றார்: அவரது பேச்சுத் திறமையால் மேடைகளில் ஏறி, விளாசியதால் செல்வாக்கு ஏற்பட்டது. நாளடைவில், சிறந்த மேடைப் பேச்சாளன் என்ற புகழைத் தேடிக் கொடுத்தது.

உறவினர்-நண்பர்களின் உற்சாகத்தால், பாராளுமன்ற தேர்தலில் சுயேச்சையாகத் துணிவுடன் போட்டியிட்டார். அதில் தோற்றாலும், கணிசமான வாக்குகளைப் பெற்று, கட்டுக் காசையும் பெற்றார். ஆனாலும் அடுத்து வந்த தேர்தலில், அதிஸ்டக் காற்று அவர் பக்கம் அடித்தது.

பிரபல தேசியக் கட்சி ஒன்றில் வாய்ப்புக் கிடைத்தது. தொடர்ந்து இரண்டு முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். இன்று, செல்வாக்கு மிக்க பிரபல அரசியல்வாதி.

பழையனவற்றை அசை போட்டுக்கொண்டிருந்த காசிநாதரை செயலாளர், சுய நினைவுக்கு இழுத்து வந்தான்.

"ஐயா,.!.உங்களை.. எம். பி...வரச்சொன்னார்.." என்று உள்ளே அழைத்துப் போனான்.

"வாங்க ..சேர்.! அப்பிடி.. இருங்க.." இருக்கையை விட்டு எழாமலேயே வரவேற்றார். வாத்தியார், ஒரு அசட்டுப் புன்முறுவலுடன் இருக்கையில் அமர்ந்தார்.

"என்ன சேர்..சங்கதி..? இவ்வளவு நாளும், இந்தப் பக்கமே தலை காட்டவில்லை...? எப்பிடி.. ..சுகமா இருக்கிறீங்களா.?"

ஒரு போலி மரியாதை அரிதாரம் பூசி, வார்த்தைகளாய் வெளிவந்தது.

வாத்தியார் சங்கோசத்துடன், "நான் ஆண்டவனே எண்டு கிடக்கிறன்... எனக்கு, உங்கட ஒரு பெரிய உதவி தேவை. எனது கடைசி மகன், கலாசாலை முடித்துவிட்டு, வேலைக்கு அலைந்து கொண்டிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன மாதம், வங்கி மேலாளர் நேர்முகத் தேர்வுக்குப் போயிற்று வந்திருக்கிறான். இந்த வாரம் முடிவு வரும் என்று செய்தி அடிபடுது. 'தேர்வு ஆவேன்' என்று அவனுக்கு நம்பிக்கை...இருந்தாலும், உங்களால் உதவி செய்ய முடிந்தால் பெரிய நம்பிக்கையாக இருக்கும்....".

வார்த்தைகளை நிதானமாக இழுத்து, நிறுத்தி... கூறி முடிக்கும் போது, வாய் வறண்டு விட்டது. மாணவனாய் இருந்த போது, 'எம். பி.' -க்கும் தன் முன்னே இப்படித்தான் பலதடவைகள் வாய், வற்றி வரண்டு போயிருக்கும் என எதார்த்தமாய் நினைத்துக்கொண்டார்.

"சரி...சேர்..! மகனின் விபரங்களைத் தந்திற்றுப் போங்க.! கொழும்புக்குப் போனதும் பார்க்கிறன்." என்றவர் தொடந்தார். "ஆடு மாடு..மேய்க்கத்தான் லாயக்கு என்று என்னைத் திட்டுவீங்களே, நினைவிருக்கா சேர்..! குளப்படி செய்தேன் என்று பாடசாலையை விட்டு நீக்கினீங்களே..! ஆனால் ஆண்டவன் என்னைக் கைவிடல்ல."

நமட்டுச் சிரிப்புடன் நாசுக்காக வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் சொன்னார். பழைய...மிகவும் பழைய... துருப்பிடித்த நினைவுகளை... வாத்தியாருக்கு நினைவு ஊட்டினார்... பழைய மாணவனகிய 'எம்.பி.'.....

வாத்தியாருக்கு அந்த நினைவூட்டல் வார்த்தைகள், சாட்டை அடிபோல் சுள்ளென்று வலித்தது. நாடி- நரம்புகள் புடைத்து, உடல் வியர்த்து, கூனிக்குறுகியது. அசட்டுத்தனமாகச் செயற்கையாய் முறுவலித்தார். அவரிடமிருந்து எந்த வித வார்த்தைகளும் வெளிவரவில்லை. வயது..., அறிவு முதிர்ச்சி... அவரை அமைதியில் அமுக்கியது.

"சரி..சேர்..! சும்மா பகிடிக்குச் சொன்னேன்... தப்பாக எடுக்காதீங்க..! கொழும்பிலிருந்து வந்ததும்..முடிவு சொல்லுறன்.." என்று சொல்லி செயலாளருக்குக் கண் சாடை காட்டினார். அவன், வாத்தியாரை அழைத்துக்கொண்டு அறையைவிட்டு வெளியே வந்தான்.

"ஐயா... உங்களோட... ஒரு கதை..." என்ற பீடிகையுடன் செயலாளர், ஒரு மூலைக்கு கூட்டிச்சென்று, அவரின் காதில் குசுகுசுத்தான்.

"ஐயா வங்கி, மனேச்சர் வேலை, டிமாண்டானது. 'மினிஸ்றி'யில... அங்குள்ளவர்களுக்கு வெட்டினால்தான் காரியமாகும். அதுக்கு நீங்களும் தயாராய் இருக்கணும். இரண்டொரு லட்சம் மட்டில ஆயத்தப் படுத்துங்க. கொழும்பு போய்த், திரும்பியதும் இஞ்ச வந்து பாருங்க. அநேகமாக..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி வந்த மாதிரித்தான். " வஞ்சகப் புன்னகை உதட்டுக் கடைக் கோடியில் கணநேரம் தோன்றி மின்னலாய் மறைந்தது.

வாத்தியாரின் காதுகளில் நாரசமாய் ஒலிக்க, உச்சியில் இடியிறங்கியது. வார்த்தைகள் ஏதும் கூறாமல், தலையை மட்டும் மெதுவாய் அசைத்தார். உள்ளம், புகைந்து குமைந்தது. முறுவலிக்க முயன்று தோற்றுப் போனார்.

○••••••○

'எம்.பி.' படித்த பாடசாலைக்குக் காசிநாதர், அதிபராக வந்தபோது, மாணவர்கள் ஒழுங்காக வரவேமாட்டார்கள். வீடு வீடாகப் போய் கெஞ்சிக் கூத்தாடி கூட்டி வந்துதான் பாடம் படிப்பித்தார்.

பெற்றோர்களும் அக்கறை காட்டுவதில்லை. வயல்,தோட்ட வேலைகளுக்கு கூட்டிப் போய் விடுவார்கள். பாடசாலைப் புத்தகம், கொப்பிகளைக் கூடத் தன், கை காசு செலவழித்து வாங்கிக் கொடுத்தவர் தான் காசிநாதர். அறியாமையில் மூழ்கிக் கிடந்தவர்களை, கல்லில் நார் உரிப்பது போன்று கல்வி ஊட்டியவர் அவர்.

எம்.பி.-யின் கல்விக்கு அத்திவாரமிட்டு, வழி காட்டியவர். அவரைப் புடம்போட்டு உருவாக்கியவர். அப்படியான ஆசானிடந்தான், கையூட்டை இப்போது எதிர்பார்க்கிறார். இதுவும் ஒருவகை குருதட்சணையோ?

காசிநாதரின் நெஞ்சம் வேகித்தகித்தது. உதவி கேட்டுத் கடமைப் பட, அவருக்கோ, மகனுக்கோ துளியும் விருப்பமில்லை. மனைவியின் நச்சரிப்பில்தான், இன்று வந்திருந்தார்.

கொஞ்சமும் எதிபாராத அவமானம்..... நடைப் பிணமாக வீடு வந்து சேர்ந்தார்..........

"என்னப்பா,போன காரியம்...?" வந்ததும் வராததுமாய் மனைவி, கேட்டுக் குடைந்தாள்.

"முதலில், ஏதாவது குடிக்கத்தா.." என்று வாலாமணிச் சட்டையை, பாம்பு செட்டையை உரிப்பது போல் வியர்த்து நனைந்திருந்த உடலிலிருந்து உரித்து உருவி, கதிரையில் போட்டுவிட்டு, ஆயாசமாக சாய்மானக் கதிரையில் சாய்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே தயாரித்து வைத்திருந்த, அவருக்குப் பிடித்தமான தேசிக்காய்ப் பானத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். உறிஞ்சிக் குடித்தார். வறண்டிருந்த வாய்க்கு தேவாமிர்தமாக இருந்தது. அவராகவே சொல் லட்டுமென்று அவரின் வாயைப் பார்த்தபடி மனைவி நின்றாள்

"எல்லாமே... சிக்கல்தான்... காசு... காசு... காசு...! கொஞ்ச நஞ்சமில்ல... லட்சக்கணக்கில்..." வெறுப்புடன் அரற்றினார் வாத்தியார். மனைவி மருண்டு போய் மேற்கொண்டு, எதுவுமே கேட்காமல் விழி பிதுங்கி நின்றாள்.

அதே நேரம்.....

வெளி தெருவாசலில் தபாற்காரனின் சைக்கிள் மணி கிணுகிணுத்தது. என்ன ஏது தபால் என்று யோசித்துக் கொண்டே, வாசலுக்கு வந்தார்.

கிடைத்த தபாலை, மேலோட்டமாகப் பார்த்தார். மகனின் பெயருக்கு வந்திருந்தது. 'வங்கி' முத்திரையுடன் உறை காணப்படவே, ஆவலை அடக்க முடியாது பரபரப்புடன் பிரித்தார். இதயம் வேகமாய் அடித்துக் கொண்டது.

மற்றப்படி, அவர் என்றைக்குமே, மற்றவர் கடிதங்களைப் பிரிப்பதில்லை. வங்கிமுத்திரையில் வந்திருந்ததால், ஆர்வ உந்துதலில் பிரித்தவரால், அவரது கண்களையே நம்ப முடியவில்லை. மீண்டும் ஒருமுறை வரிவரியாக நிதானித்து வாசித்தார்.

"அம்மா..!! இஞ்ச ஓடி..வாவேன்..!" தன்னை மறந்து கூவினார்.

"என்னப்பா...?" மனைவி பாய்ந்து விழுந்து வந்தாள்.

"மகனுக்கு வங்கி வேலை கிடச்சிருக்குது....!! நியமனக் கடிதம்தான்... இது...!!" நிலை கொள்ளாமல் பரபரத்தார். கூத்தாடாதது மட்டுமே குறை...

"அப்பனே .....முருகா....நீ எங்களக் கைவிடவில்லை..."

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சமி

ஆலங்கேணி-ஈச்சந்தீவு அடங்கலாக குஞ்சு குருமான் தொடங்கி ஒவ்வொருவருக்கும் வள்ளி ஆச்சியைத் தெரியும். அவர்களுக்கு ஆச்சியை மிகவும் பிடிக்கும். இரக்க சுபாவமும், அன்பும் நிறைந்தவர்.

80-வயது தாண்டினாலும் நோய் நொடியில்லாமல் வாழ்ந்தவர். தனது வீட்டுத் தோட்டத்திலிருந்தே, சகல வகை மரக்கறிகளையும் பயிரிட்டு சமையலுக்குப் பயன்படுத்துவார். ஊர்வன, பறப்பனதொட்டு, நீர் வாழ் நண்டு, இறால், மட்டி என்பவற்றையும் ஒரு பிடி பிடிப்பார். அதனால்தானோ என்னவோ அவருக்கு அப்படி ஒரு திடகாத்திரமான உடல் வாகு.. உடனலமில்லை என்று மருத்துவமனைப் பக்கம் எட்டிக் கூடப் பார்த்ததில்லை

எது சமைத்தாலும், அக்கம் பக்கத்து வீடுகளில் சாப்பிட்டாச்சா என்று கேட்டுப்பார்த்து விட்டுச் சாப்பிடும் பரோபகார குணம் நிறைந்தவர். குழந்தைகளும், இளஞ் சிறார்களும் ஆச்சியுடன் அந்நியோனியமாய் ஒட்டிக்கொள்வர்.

திடீர் என ஒரு நாள் அசப்பு பிசப்பு இல்லாமல் தலை சுற்றி விழுந்து ஆவி அடங்கி விட்டது. அன்று அமாவாசை நாள், அவரின் சாவு 'பஞ்சமி' என்று விபரமானவர்கள் ஆளுக்காள் குசு குசுத்துக் கொண்டனர்.

ஊராரும் உறவினர்களும் காக்கைக் கூட்டம் போல்,ஒன்று குவிந்தனர்.

"பஞ்சமியில் சாவாம்-ஆவி, வீட்டைச் சுற்றி சுற்றித் திரியுமாம். பூசை, படையல்கள் பெரும் எடுப்பில் செய்ய வேண்டுமாம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றே ஒரு பசு மாட்டைக் கொண்டு வந்து கிணற்றடியில், பாக்கு மரத்தில் பிணைத்துக் கட்டிவிட்டு வைக்கோல், இலை தளிர்களைப் போட்டனர். வாளியில் நீரும் நிரப்பி வைத்தனர். பசு, ஆவியைக் கண்டு மிரளுமாம். அப்படி மிரண்டால் நிச்சயமாய் அது பஞ்சமிதான் என்பது உறுதி. இது காலா காலமாக நம்பப்படும் ஐதீகமாம்.

ஊராரும், உறவினரும் சாவு வீட்டில் இரவு பகலாகக் குவிந்திருப்பார்கள். பெரும்பாலும் விழித்திருப்பார்கள். பெண்டுகள் கூட்டம், உளுத்துப் போன ஊர்க் கதைகளுக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். ஆண்கள் குழுக் குழுவாகச் சீட்டாட்டம் ஆடுவார்கள். எல்லாருமே நெஞ்சிடியுடன்தான் இரவைக் கழிப்பார்கள். சிலர் வீட்டுக்குள்ளும் முற்றத்திலும் உறங்க முயற்சிப்பார்கள்.

நடு நிசி கடக்கும் நேரம்....

வீட்டு நாய், ஊர் நாய்கள் எல்லாம் ஒன்றாய் ஊளையிடத் தொடங்கின. அவை ஒரு அவலமான ஒலியை எழுப்பின. பிணைத்திருந்த பசு மாடும் எதனாலோ மிரண்டு, நிலைகொள்ளாமல் அந்தரப்பட்டுத் திமிறியது. துணிச்சலான ஒருவர், டோச் வெளிச்சத்தை, பசு மாட்டை மேவி சுழற்றிப் பாய்சினார். வெளிச்சத்தைப் பார்த்த பசுவும், சற்று அமைதியாயிற்று.

இவ்வளவுக்குப் பிறகு யாருக்குத்தான் தூக்கம் வரும். வயது முதிர்ந்த சிலர், தேவார திருவாசகங்களை, கந்தசஷ்டி கவசத்தை குரல் எழுப்பிப் பாடத்தொடங்கினர். சுறுசுறுப்பான சிலர், வெளியில் அடுப்பை மூட்டித் தேனீர் வைக்கத் தலைப்பட்டனர். இளம், விடலைகள் இழுத்து மூடிக்கொண்டு தூக்கத்தைத் தொடர்ந்தனர்.

இப்படியான களேபரத்தில், இருள் விலகி கிழக்கும் வெளித்தது. பசுவும் நிலத்தில் கிடையாகச் சாய்ந்து உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

மரணவீடும் விழித்தெழுந்து களை கட்டியது. விடிய விடிய விழித்திருந்த கிழடு கட்டைகள், இரவு நடந்தவற்றை ஒன்றுக்குப் பத்தாய் அபி நயத்துடன், கதையளக்கத் தொடங்கினர்.

சம்பிரதாயம் தெரிந்தவர்கள், செய்ய வேண்டியவற்றைச் சட்டுப் புட்டென்று செய்யத் தொடங்கினர். ஐயர் ஒருவரும் வந்து, சமய சம்பிரதாயப்படி கருமங்களை முடித்து விட்டுப் போய்விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவ அடக்கமும் ஊரே கூடி சிறப்பாக நடத்தி முடித்தனர்.

அடுத்து நடக்க வேண்டியது துடக்குக் கழிவுதான்.....

நாலு நாள் கழிந்து, செய்ய ஏற்பாடாகியிருந்தது. ஆச்சி வாழ்ந்த காலத்தில், என்னென்ன உணவுகளை விரும்பிச் சாப்பிட்டாவோ, அவற்றை ஒன்றுவிடாமல் தேடிப் பிடித்து சமைத்தனர். பல் சுவைப் பலகார பண்டங்கள், பழ வகைகளும் உணவுப் பட்டியலில் அடக்கம். சமையலில் கை தேர்ந்தவர்களால் உணவுகள் தயாராயின. பத்து வீடுகளுக்கு அப்பாலும், சமையலின் கம கம மணம் காற்றில் பரவி வாயூற வைத்தது.

இரவில் தினமும் சாவீட்டில் தூங்கிய முத்தன், லிங்கன் இருவரும் நுணுக்கமாக யாவற்றையும் நோட்டமிட்டுக் கொண்டனர். தங்களுக்குள் சாடை காட்டிக் கொண்டனர். ஏதோ திட்டம் அவர்களிடையே உருவாகிக் கொண்டிருந்தது.

அவர்களுக்கு இவற்றில் துளியும் நம்பிக்கை கிடையவே கிடையது. பத்தாம்பசலி நம்பிக்கைகள் என்பது அவர்களின் வியாக்கியானம். அவர்களுடன் துரையன், மகா இருவரும் கூட்டு.....

முத்தன், கூட்டாளிகளுக்கு உணவுப் பட்டியலை நாவூற விபரித்தான். பக்கத்தில் இருந்த பள்ளிக் கூடத்தில் சந்தித்து திட்டமிட்டனர்.

அதாவது, எட்டு வீட்டு சாப்பாட்டுப் பெட்டியை பக்குவமாய் தூக்குவது என்பதே அவர்களது திட்டம். எல்லோருமே துணிந்த கட்டைகள். இது அவர்களுக்கு, இரண்டாவது முறை. படையல் சாப் பாடுகளின் சுவை அவர்களுக்குத்தான். தெரியும். அப்படியான சாப்பாட்டை ஒட்டு மொத்தமாய், வாழ்க்கையில் கண்டே இருக்கமாட்டார்கள். அதுவும், பஞ்சமிக்கு படைக்கும் விசேட உணவுகள்.... அப்பப்பா.. சிறப்பைச் சொல்லி மாளாது.

திட்டம் முடிந்த முடிவாகியது. பாடசாலையிலிருந்து பார்த்தால், சாவு வீட்டில் நடப்பது அத்தனையுமே துல்லியமாகத் தெரியும்.

நேரமும் நெருங்கியத் இருளும் கவியத் தொடங்கியது.

இருவர் பாடசாலையிலும், மற்றுமிருவர் சுடலையிலும் நிலை கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் இருந்து நோட்டம் பார்ப்பவர்கள், படையல் பெட்டி கிளம்புவதைப் பார்த்து சுடலையில் நிற்பவர்களுக்கு 'சிக்னல்' கொடுக்கவேண்டும். அவர்கள் உசாராகுவார்கள். தெரு நாய்களிடமிருந்து சாப்பாடுப் பெட்டியை சேதமில்லாமல் கைப்பற்றியாக வேண்டும்.

ஒரு முறை, இவர்களுக்கு முன்னால் நாய்கள் முந்திவிட்டன. திட்டம், தோல்வியில் சொதப்பிற்றுது. வயிற்றெரிச்சல் பட்டுக் கொண்டார்கள்

நேரம்,நெருங்க சாவு வீடு பரபரத்தது....

படையலுக்கான யாவும் பனையோலைக் கடகத்தை நிறைத்திருந்தன. உணவு வகைகளின் நறுமணம் எல்லோரது நாவிலும் உமிழ்நீரை சுரக்கச்செய்தது.

இப்படியான காரியங்களுக்கு, கந்தையா, கதிர்காமர் இருவருந்தான் துணிச்சலுடன் முன் வருவார்கள். அவர்கள்தான் துணிச்சலுடன் சுடலை வரை சென்று கச்சிதமாய் காரியத்தை முடித்து வருவார்கள். இருவருமே அண்ணன், தம்பிகள். அவர்களை விட்டால் வேறு ஆட்களே கிடையாது. எல்லாருமே பயந்தாங் கொள்ளிகள். சுடலைக்குப் போகாமல், தெரு முனையிலேயே பயத்தால், படையலை வைத்து விட்டு புரடியில் கால் அடிபட ஓடிவந்துவிடுவார்கள்.

அவர்கள் முன்னிலை வகிப்பதுக்கும் காரணம் உண்டு. கதிர்காமர், சுடலை வைரவரின் கலை கொண்டவராம். ஆலங்கேணியில், அவரை தவிர வேறு யாரிடமும் சுடலை வைரவர் கலை கொண்டு சாமி ஆடுவ தில்லை. கந்தையர் மந்திரம் கற்றவர். இதுவே, அவர்களின் சிறப்பு. அவர்களுக்கு விசேட கவனிப்பும் உண்டு.

நேரம் தீர்மானிக்கப்பட்டதும், கந்தையரும், கதிர்காமரும் படையல் நிறைந்த கடகப்பெட்டியுடன், தீப் பந்தமும் எடுத்துக் கொண்டு, தேவார, திருவாசகங்கள், காவடிப் பாட்டுகளைப் பெரும் குரலெழுப்பிப் பாடியபடி சுடலையை நோக்கிச் சென்றனர்.

அதே நேரம், முத்தன் குழுவினர் தலை மறைவானதையும் யாருமே கவனிக்கவில்லை.

படையல் கடகத்துடன் போனவர்கள், சுடலையின் மையப் பகுதிக்குப் போகவில்லை. நிலவு வெளிச்சம் பால் போல் ஒளிர்ந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவுப் பகுதியை அண்டியதும், கடகத்தை நிலத்தில் இறக்கி வைத்துவிட்டு படையலிலிருந்த சாராயத்தைப் பகிர்ந்து குடித்தனர். கந்தையர் குரல் எழுப்பித் தேவாரங்களைக் கட கட வெனப் பாடினார்

முடியும் தறுவாயில் கதிர்காமர், அண்மையில் புதருக்குள் சர சரத்த அரவம் கேட்கவும் பயத்துடன், "அண்ணா! மாறுவம்.." என்று குசு குசுத்தார்.

மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல, பஞ்சமியின் நினைவில் இருந்தவர்களுக்கு சரசரப்பு கிலியை எழுப்பியதில் எதுவித சந்தேகமுமில்லை

"சரிடா... தம்பி! ஓடுவம்.." என்று கந்தையர் சொல்லி, இரண்டு எட்டு காலடி எடுத்து வைக்கவும், தம்பிக்கு கற்பூரம் கொழுத்தாதது ஞாபகம் வந்தது.

"அண்ணா! கற்பூரம் கொழுத்த மறந்திற்றன்.." என்றார் படபடப்பாக.

"சரி ! வா...கொழுத்து... தீப்பெட்டி... உன்னிட்டத்தானே..." என்ற கந்தையர், படையல் கடகம் வைத்த இடத்தை நோக்கினார். கடகம் மாயமாகிவிட்டிருந்தது, நிலவு ஒளியில் துல்லியமாகத் தெரிந்தது.

மணல் தரையில் பெட்டி இழுபட்ட அடையாளம் தீப்பந்த ஒளியில் துல்லியமாய் தெரிந்தது. இருவருக்கும் நெஞ்சு திக்கென்றது

"டேய்... தம்பி...! பேய்... பெட்டியை இழுத்திற்றுதுடா.... ஓடுவம்டா.." என்று பதட்டத்துடன் கூறிய கந்தையர் முந்தி ஓடினார். கதிர்காமர் அவரை முந்தி ஓடினார்.

மூச்சிரைக்க ஓடிவந்த அண்ணன், தம்பியின் நிலையைப் பார்த்து, சாவு வீடு அச்சத்தில் அரண்டு சலசலத்தது.

இனியும் கேட்கவா வேண்டும் சாவு வீட்டில், இதுவே அச்சத் துடன் பலரது வாயிலும் நர்த்தனம் ஆடியது.

அதே நேரம், கடத்தல் கூட்டத்தினர், கடகத்தை பாடசாலைக் கட்டடத்தை நோக்கித் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டும், புளுகத் துடன் வாய் ஊறிக்கொண்டும் விரைந்தனர்.

**(யாவும் கற்பனையல்ல)**

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# மடிப் பிச்சை

குமுதாவால் கொஞ்சமும் தாங்கிக்கொள்ள முடியவேயில்லை. இரண்டு மார்பகங்களும், கனத்துக் கல்போன்று ஈவிரக்கமின்றி விண் விண் என்று வலித்தன. வலியைத் தாங்கவோ, அடக்கவோ யாதொரு வழியும் அறியாது அல்லாடினாள். எவ்வித வலிநிவாரண மாத்திரைகளும் உதவவில்லை. அவளால் அழாமலிருக்கவும் முடியவில்லை. எத்தனை நாட்களுக்குத் தான், பால் சுரக்கும் மார்பகங்களை, கையால் கசக்கிக் கறந்து வெளியேற்றுவாள். அதுவும் ஒரே நாளில் பல தடவைகள் என்றால்...

கணவன் இருந்தாலாவது குழந்தையாகி வலி தீர்ப்பான். அவன், வேலை முடிந்து வர இன்னும் நேரமிருக்கிறதே. அதுவரை... அதுவரை... தாளமுடியுமா....?

மார்பகங்கள் இரண்டும் கல்லுக் கட்டியாய் விறைத்துக் கனத்தன.

குமுதாவுக்கு, முதல் குழந்தை நான்கு வாரங்களுக்கு முன்னர்தான் பிறந்தது. அவளது துர்ப்பாக்கியம், இரண்டாம் நாளிலேயே எதிர்பாராது திடீரென இறந்துவிட்டது. குழந்தை இறந்த சோகம் ஒருபுறம், குழந்தைக் காக சுரக்கும் பாலின் வலி மறுபுறம்....

மருத்தவர் கொடுத்த வலி நிவாரணிகள், சில மணித்துளிகள்தான் சற்று உதவின. எத்தனை நாட்களுக்கு,...எத்தனை...மாதங்களுக்கு.... இப்படி... இப்படியே....?

இப்போது மாலை ஆறு மணி.... கணவன் வேலைவிட்டு வீட்டுக்குவர ஏழு, எட்டாகிவிடும். இருப்புக்கொள்ளாது தவித்தாள். மன அமைதி உடைந்து நொறுங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கிக் கொண்டிருந்த தொலைக் காட்சியில், மனம் கிஞ்சித்தும் ஒன்றவில்லை. குட்டி போட்ட பூனைபோல், குறுக்கு நெடுக்காய் நடந்து கொண்டிருந்தாள்.

ஆமாம்... அவளும் குட்டி போட்ட பூனைதானே. இயற்கையின் நியதிப்படி, தாய்மையின் உப வாதை அவளைப் போட்டு வாட்டியெடுத்தது. குழந்தை இறந்தது, தாய்மை உடலுக்கென்ன தெரியுமா? இயற்கை நியதிப்படி இயங்கி, பாலை அளவின்றிச் சுரந்துகொட்டியது.

அருந்தத்தான் குழந்தையில்லை. தானாகச் சுரந்து வெளியேறும் பால், சட்டையை நனைத்துத் தொப்பமாக்கியது. தினமும் பல தடவைகள் மாற்றவேண்டியேற்பட்டது. அதே நேரம், கிலேசமும் மனதை வாட்டி வதைத்தது.

பால்குடி வயதுக் குழந்தைகளை யாரிடமாவது வாங்கி பாலூ ட்டலாம் என்ற எண்ணம் தோன்றினாலும், என்ன ஏதும் நினைப்பார்களோ, வக்கணை கதைப்பார்களோ என மனம் கூச்சமடைந்து தடுத்தது. அவளுக்குத் தெரிந்தவரை அக்கம் பக்கத்தில் கூட குழந்தையுள்ளவர்கள் யாருமேயில்லை.

பெண் பிறவியும் தாய்மையும் இறைவனால் சபிக்கப்பட்டனவா?

அழுதழுது கண்ணீர் வற்றி வரண்டு விட்டது, ஆனால், அளவில் லாமல் பால்தான் பெருக்கெடுத்துச் சுரக்கின்றது.

சூனியத்தை மனம் சுற்றிச் சுழன்றபோது, வீட்டு வாசலில் ஆளரவம் கேட்டது.

"அம்மா தாயே,! பசி தாளமுடியல்லம்மா. குழந்தையும், இண்டைக்கு முழுவதும் ஒருசொட்டுப் பாலும் பருகல்ல.... ஏதாச்சும் இருந்தா தாங்கம்மா, கோடி புண்ணியமாப்போகும்"

வெளியே வாசலிலிருந்து, தீனமாய் நொறுங்கித் தெறித்த ஒரு பெண்ணின் குரல், தொலைக் காட்சிப் பெட்டியின் இரைச்சலையும் மீறிக்கேட்டது.

யன்னலைச் சிறிதாகத் திறந்து, வெளியே எட்டிப் பார்த்தாள். காய்ந்து மெலிந்த ஒல்லிக் குச்சியான ஒரு பெண் அழுது கரையும் குழந்தையை, இடுப்பில் இடுக்கியவாறு நின்றுகொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை மூக்குச் சளி வழிய சிணுங்கிக் கொண்டு, வாடிய கொடியாய் துவண்டு இடுப்பில் தொங்கியது. அவள் குழந்தையை வாஞ்சையுடன், அணைத்தபடி ஏக்கத்தில் நின்றிருந்தாள்.

குமுதினி ஒரு நொடிதான் யோசித்தாள். விருட்டென வாசலைத் திறந்தாள். ஏக்கப் பார்வை தொக்கியிருந்த பிச்சைக்காரியின் முகத்தில், நம்பிக்கை ஒளிக்கீற்று மின்னியது. குமுதினி மலர்ச்சியுடன் வரவேற்றாள்.

"வாம்மா..உள்ளே... !"

எதிர்பாரா வரவேற்பைப் பார்த்த பிச்சைக்காரிக்குத், தன் காது களையே நம்ப முடியாது மலங்க மலங்க முழித்துத் தயங்கினாள்.

"அம்மா!, நான், இஞ்சயே நிற்கிறன்..." என்றாள் தாழ்வு மனத் தயக்கத்துடன்.

"பரவாயில்ல....உள்ள வா.....!." குமுதினியின் குரலில் இரக்கம் இழையோடியது மதுரம் குழைந்து வழிந்தது.

"உனக்குச் சாப்பாடு தாறன் குழந்தைக்கு என்ன வேணும்? " அன்புடனும், அக்கறையுடனும் கேட்டாள்.

"எனக்கு, ஏதாச்சும் மிச்ச சொச்சம் கிடந்தால் போடுங்கம்மா... குழந்தைக்குச் கொஞ்சமா பால்... அதுக்கு இண்டைக்கு நாள் முழுக்கக் குடிக்க ஒண்டுமே நான் குடுக்கல்ல....எனக்குத் தாய்பாலே சுரக்குதில்ல..." என ஆதங்கத்துடன் சொன்னாள். கவலை தோய்ந்த வார்த்தைகள்...

"இரண்டு பேருக்குமே உண்டு...! அதுசரி, உன்ர பேர் என்ன? உனக்கு கணவன், அப்பா அம்மா உறவுகள் ஆருமேயில்லயா?" அக்கறையுடன் விசாரித்தாள்.

"இல்லம்மா...! நாங்க ஆருமில்லாத அநாதைங்க...! இது பொறந்து ஆறு மாதத்திலேயே அப்பன முழுங்கிற்றுது...! ஊரார் வீடுகளில ஏதாவது எடுபிடி வேலவெட்டி செஞ்சுதான் காலம் ஓட்டுறன். ஊரில கஸ்டம்... எண்டு தான், ரவுணுக்கு வந்தா, ஆருமே, என்னய நம்பி வேலைக்கு சேர்க்கிறாங்கல்ல...குழந்தையோட செய்யமாட்டனாம்..! என்ர பேர் துளசி."

பெரும் ஆதங்கத்துடன் சொன்னவளின் குரல் கம்ம,கண்கள் சற்றுப் பனித்தன. குழந்தையை வாஞ்சையுடன் அணைத்து, ஒருமுறை உச்சி மோந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுதினி பச்சாதாபப்பட்டாள். சில நொடிகள் யோசித்தவள் சடுமெனக் கேட்டாள்...

"என்னோட தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்ய விருப்பமா? தங்க இடமும் சாப்பாடும் தாறன். சம்பளமும் பார்த்து போட்டுத் தாறன்..." சொல்லியவாறே துளசியின் முகத்தை ஆழமாகத் பார்வையால் துலாவி நோட்டமிட்டாள்.

துளசியின் வாடிய கண்கள் மலர்ந்தன. தன் காதுகளையே அவளால் நம்பமுடியாத மன வெழுச்சி முகத்தில் வியாபித்தது. கண்கள் பனிக்கக் குழந்தையை கீழே இறக்கிவிட்டு, தடாலென குமுதினியின் காலில், முட்டுக்காலில் அமர்ந்து தொட்டுக் கும்பிட்டாள். அவளுக்கு குமுதினி தெய்வமாகத் தெரிந்தாள்.

"அம்மா,.! நீங்க தெய்வம் மாதிரி....எப்பிடி நன்றி சொல்லுற தெண்டு விளங்கல்ல...." என்று கசிந்தருகியவள், தொடர்ந்தாள், "அம்மா, ஐயாட்டக் கேட்காம என்னை வேலைக்கு எடுக்கிறீங்களே....அவர் ஐயா,ஏதும் சொல்லமாட்டாரா?...." ஐயம் தொக்கி நின்றது.

"சேச்சே...! அவரொண்டும் சொல்லமாட்டார். நாங்களும், நல்ல வீட்டு வேலைக்காரியைத்தான் தேடியபடி... நல்ல வேளயா, நீயே வந்து சேர்ந்திருக்கிறாய். உன்னை முழுசா நம்பலாந்தானே..?" புன்னகையுடன் கண்களைச் சிமிட்டியபடி குமுதினி கேட்டு வைத்தாள்.

"ஐயோ..அம்மா..! உங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தா, கோணேசர் எங்களத் தண்டிப்பார். என்ர குழந்தை மேல சத்தியம்... நீங்களாக என்னை வேலையைவிட்டு போ... எண்டு சொல்லுற வரையும் உங்க காலடிதான் எங்களுக்குத் தஞ்சம்..." என அடிமனதிலிருந்து எழுந்த வார்த்தைகளைச் சிந்தினாள். குழந்தையின் தலையில் கையும் வைத்தாள்.

"நான் உன்னை முழுசா நம்புறன்...துளசி! இனிமேல் நீ என்னை "அக்கா" எண்டே கூப்பிடு...." என்ற குமுதினி, தனது அறைக்குள் நுழைந்து, கைகள் நிறைய உடுப்புகளுடன் வந்தாள்.

"இந்தா துளசி! இது என்ர உடு துணிகள்தான்... வைச்சுக்கோ... குழந்தைக்கு வேண்டிய சட்டைகளும் இதில இருக்கு...இன்னும் ஏதும் தேவைப்பட்டா நாளைக்குக் கடையில போய் வாங்குவம்... "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தொகை உடுதுணிகளைத், துளசியிடம் கொடுத்தாள் குமுதினி. முகம் பளிச்சென வெளிக்க துளசி, அவற்றை வாங்கிக் கொண்டாள். இவ்வளவு தரமான விலைகள் உயர்ந்த உடைகளைத் தன் வாழ்க்கையில் துளசி கண்டதேயில்லை.

“சரி..!.நீ போய் நல்லபடியா குளிச்சி முழுகிற்று வா. காக்கா குளியல் போடாம ஆறுதலாய் குளி...! குழந்தைய நான் பார்த்துக் கொள்ளுறன்.” என்று கூறியபடி, குழந்தையை நோக்கிக் கைகளை வாஞ்சையுடன் நீட்டவும், அது, முகத்தை அம்மாவின் மார்பில் புதைத்தபடி தாயை இறுகப்பற்றியது.

“அது, புது ஆட்களிட்டப் போகவே போகாது அக்கா, ஆனா பழகிச்சுதெண்டா...அம்மாடி, நான் தேவையேயில்ல....! பொல்லாத சிறுக்கி “ என்று வக்கணையாகச் சொல்லி நமட்டுச் சிரிப்பை யுதிர்த்தாள் துளசி. குமுதினி கூடவே, கையில் எடுத்து வைத்திருந்த சூப்பியை குழந்தைக்கு காட்டவும் அதன் கண்கள் விரிந்து மலர்ந்தன.

முன்னர், ஒரு சூப்பி வைத்திருந்து, அது நாளாட்டத்தில் நைந்து சீர்கெட்டுவிட்டது. பல நாட்களாகத் தாயிடம் கேட்டழுது கடைசியில் மறந்தேவிட்டது. இப்போது புதிதாகச் சூப்பியைப் பார்த்ததும் ஆவல் பொங்க, வாயைச் சப்புக்கொட்டியபடி குமுதினியிடம் தாவிப் பாய்ந்தது. இருவரும் ஒரே நேரத்தில் வெடிச்சிரிப்பைச் சிந்தினர்.

சந்தர்ப்பத்தைக் குமுதினி பயன்படுத்தி குழந்தையை வாரியெடுத் தாள். சூப்பி கிடைத்த சந்தோசத்தில், குழந்தையும் அவளிடம் ஐக்கிய மாயிற்று.

துளசி, முறுவலுடன் குளியலறை நோக்கிப்போகவும், குமுதினி குழந்தையைத் தாய்மை உணர்வுடன் வாரியெடுத்து மார்போடு இறுக அணைத்தபடி , தனது படுக்கையறையை நோக்கிப் புயலாய்ப் பாய்ந்தாள்.

குழந்தையின் பரிசம் கிடைத்ததும், இரண்டு மார்பகங்களும் விம்மிப் புடைத்து விறைத்தன. கணகணப்புடன் துறுதுறுத்தன. ஒன்றுட னொன்று போட்டியிட்டு பாலைச் சுரந்ததை குமுதினி, பட்டவர்த்தனமாய் உணர்ந்தாள். உடல் முழுவதும் ஊடறுத்து, புளகாங்கிதம் மின்சாரமாய் விரவியது. தாய்மையின் பூரிப்பு....!!!!!!

பரபரப்பாகவும், விரைவாகவும் சட்டையை விலக்கி மார்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே கோதி எடுத்தாள். வாயிலுள்ள சூப்பியை அகற்றவும் குழந்தை அடம்பிடித்து அழுதது. அவசர அவசரமாக மார்புக் காம்பை குழந்தையின் இதழிடையே திணித்தாள்.

விறைத்துப் புடைதிருந்த முலைக் காம்பைப், பேராவலுடன் கவ்வி ஆக்ரோசமாக உறிஞ்சியது. சூப்பிக்கும், மார்புக்குமுள்ள வேறுபாட்டை உணர்ந்ததாலோ என்னவோ, குழந்தை இங்கிதமாய் முனங்கியபடி மூச்சு முட்ட உறிஞ்சியது.

இதுவரை நாளும், பால் வற்றிய தாயின் மார்பைச் சப்பிச்சலித்த குழந்தைக்கு, வளமான பால் சுரக்கும் மார்பகங்கள் சொர்க்கத்தைக் காட்டின. கால்களை உதைத்து, குதினியின் மார்பையும், கழுத்தையும் பிஞ்சுக் கரங்களால் கீறிப் பிறாண்டி நகக்குறி பதித்தது.

குமுதினியின் கண்கள் சுகானந்தத்தில்,போதையில் திளைத்து, அரைக்கண்ணாய் சொக்கிச் சுருங்கின. தாய்மையின் பூரிப்பை முற்று முழுதாய் அநுபவித்து நுகர்ந்தாள்.

குழந்தைக்கு வயிறு, காற்றூதிய பலூன் போலாகியது. குமுதினியின் மார்பகங்கள் வற்றிச் சுருங்கின. குழந்தை கெக்களமிட்டுச் சிரித்தது. அதன் திருப்தி முகத்திலும் கண்களிலும் பட்டவர்த்தனமாய்த் தெரிந்தது. குமுதினி, இறைவனுக்கு மானசீகமாய் நன்றியைச் செலுத்தினாள்.

"கோணேசா! இந்தப் பந்தப் பிணைப்பு நீடிக்கவேண்டுமே...." என மனதுக்குள் தியானித்துக் கொண்டாள். குழந்தையை மார்போட ணைத்து இறுகத்தழுவினாள். கன்னத்திலும், நெற்றியிலும் மாறி மாறி முத்தமழை பொழிந்தாள். குழந்தை பூரித்துச் சிரித்தது. அதற்கு இது முதல் ஆனந்த அநுபவம் போலும்.

படுக்கையறையைவிட்டு குழந்தையுடன் வெளியே வரவும், துளசியும் குளித்து முழுகி, சந்தணச் சவுக்கார மணம் கமகமக்க, வெளியே வரவும் சரியாயிருந்தது.

புன்னகையுடன் துளசி, "என்னக்கா, பாடாய் படுத்திச்சிதா பூனைக்குட்டி?..."

"இல்லையே! சமத்தாய் சுட்டித்தனமாயிருந்திச்சே...!.இனிமேல் நீ தேவையில்லயாம்..." என்று அம்சடக்கத்துடன் கண்ணைச் சிமிட்டி புன்னகைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாடி....செல்லம் ! உன்னையும் குளிப்பாட்டி விடுறன் " எனக் கூறி கையை நீட்டினாள் துளசி .....ம்....ஹூம்....தாயிடம் போகமறுத்து. குமுதினியை கட்டிப்பிடித்து நையாண்டி பண்ணியது. "அடி..கள்ளி...! உன்ர அப்பன் புத்தியை காட்டுறியா ? "என சொல்லிச் சிரித்தாள்.

"வயிறு முட்டப் பால் குடுத்தன்... என்னோட ஒட்டிற்றுது...!" என்று உள்ளர்த்தத்துடன் கூறி முறுவலித்தாள் குமுதினி.

தனது இறந்த குழந்தைக்காக வாங்கிச் சேர்த்திருந்த எல்லா உடுப்புகளையும் ஒட்டுமொத்தமாய்த் தூக்கிக் கொடுத்தாள் குமுதினி.

"இவையெல்லாம், இனி உன் குழந்தைக்குதான்..." சோகம் சூழ்ந்த முகத்துடன் அழாக்குறையாகக் கூறினாள்.

"ஏனக்கா இவ்வளவு உடுப்புகள்...?" எதுவும் புரியாது, ஆச்சரியமாகக் கேட்டாள் துளசி.

"எல்லாம் பிறகு விபரமாய் சொல்லுறன்.....!. நீ போய் வேண்டியதைப் போட்டுச் சாப்பிடு....."

"அக்கா! முன்பின் தெரியாத ஒரு பிச்சைக்காரிக்கு என்னவோ எல்லாம் செய்யுறீங்களே..!" என்று கசிந்துருகினாள் துளசி. நடப்பது எல்லாம் கனவா நனவா என, ஒன்றும் புரியாது திகைத்து நின்றாள் துளசி.

"இனி....இப்பிடி வேறுபடுத்திக் கதைக்கிற கதையெல்லாம் வேணாம். இனி, நீயும் குழந்தையும் எங்க குடும்பத்தில் சேர்த்தி...!" கண்கள், பற்பல பொருள் பொதிந்து ஒளிவீசின.

"நீயல்ல பிச்சைக்காரி.... நான்தான் பிச்சைக்காரி.... மடிப் பிச்சைக்காரி.." எனத் தனக்குள்ளே முனங்கிக் கொண்டாள் குமுதினி.

○•••••○

**(இந்தக் கதை, இலண்டனிலிருந்து வெளிவரும் 'கதை மஞ்சரி' இல் வெளிவந்தது)**

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் தாவும் மந்திகள்

**1980**-இல் யேர்மனி நோக்கி 'பெர்லின்' வந்து குவிந்த, ஈழத்து தமிழ் ஏதிலிகளின் கூட்டத்தில் மகானும் ஒருவன்.'ஏரோ புளட் - மாஸ்கோ' விமானத்தில் எக்கச்சக்கமாய் தமிழர்கள் வந்து குவிந்தனர். தான் கடமையாற்றிய ஆசிரியர் பணியைக் கைவிட்டு விட்டு, ஏதோ ஒரு நப்பாசையில், பெரும் எதிர்பார்ப்பில், கேள்விக் குறியுடன் புலம் பெயர்ந்தவன்.

மிகவும் குறுகிய நாட்களிலேயே, தனது செயல், முட்டாள் தனமானதென என உணரத்தலைப்பட்டான்.

'பெர்லின்' வந்து இறங்கியதுக்கு இரண்டொரு நாட்களின் முன்னர்தான், புதுச் சட்டம் நடைமுறைக்கு வந்திருந்தது. அகதிகளாக யேர்மனி வந்தவர்கள், ஓர் ஆண்டு காலத்துக்கு எதுவித வேலைகளும் செய்யமுடியாது. சமூக உதவியை மட்டுமே பெற முடியும் என்பதே அது.

ஆடு மாடுகள் போல அடைக்கப்பட்ட, அகதிகளின் வதிவிடத்தில் தங்கவே இடம் கிடைத்தது. சாப்பட்டுக்கு சிறிதளவு பணமும் கிடைத்தது. நாலைந்து பேர் கூட்டாகச் சேர்ந்து சமைத்துக் கொண்டனர். வேறு சிலருக்கோ சாப்பாட்டுடன் சேர்ந்த தங்குமிடம் கிடைத்தது.

உப்புச்சப்பில்லாத ஐரோப்பிய உணவுகள் வழங்கபட்டன. நாக்குக்குப் பிடித்தமான காரசாரமான பல்வகை உணவுகள் உண்டவர் களுக்கு, அப்படியான இடம் கிடைத்ததால் வெறுத்துப் போயினர் ஏன் வந்தோமென புலம்பினர்.

மாதா மாதம், அகதிகள் சம்பந்தப்பட்ட வெளிவிவகார பொலிஸ் பிரிவுக்குப் போய், வதிவிட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும். விடியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலேயே போனால்தான் காரியமாகும். தள்ளு முள்ளுப்பட்டே நம்பர் கிடைக்கும். அதுவும், அரபி, துருக்கி, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாட்டுக்காரர்கள், முரட்டுத்தனமாக இடித்துத் தள்ளிக் கொண்டு, முன்னே இடையில் வந்து எம்மவர்களைப் பின்னே தள்ளிவிடுவார்கள்.

இங்கும் எம்மவர்கள் அஞ்சி, அடங்கி, ஒதுங்கி மௌனியாகி விடுவர். விதியை நோவதைத் தவிர வேறு வழி...?

உணவு விடுதிகளிலும், சிறு வணிக நிலையங்களிலும் களவாக, அனுமதியற்ற வேலை தேடிச்செய்யலாம், என வதந்தி உலவியது.

மகானும், நண்பர்களுடன் சேர்ந்து நப்பாசையுடன் கடை கடையாக அலைந்து அவலப்பட்டனர். பொதுவாக, எம்மவர்களைக் கண்டால், பாக்கி.... பாக்கி... என்றே யேர்மனியர்கள் கேலியாகக் கூவியழைத்து அவர்களை அசிங்கப்படுத்துவர். பாகிஸ்தானியரை அவ்வாறுதான் அழைப்பார்கள்.

நட்புப் பாராட்டிய ஒரு பாகிஸ்தானியர் உதவியால், செய்திப் பத்திரிகைகளை வீடு வீடாக விநியோகிக்கும், களவு வேலை வாய்த்தது. அதிகாலையில், விநியோகிக்க வேண்டும். ஊர் விழிக்க முன், வேலை முடிந்துவிடுவதால், சிக்கல் ஏதுமில்லை.

இப்படியான வேலைகளுக்கு யேர்மனியர்கள் கிடைப்பதில்லை. அவர்களும் விரும்புவதில்லை. தாங்க முடியாத உறைபனிக் குளிரில், வேலை செய்வதை அவர்கள் கிஞ்சித்தும் விரும்புவதில்லை.

விதியை நொந்துகொண்டு வேலையைத் தொடர்ந்தான் மகான். அவனை, பத்திரிகை முகாமையாளருக்கு நன்கு பிடித்துக் கொண்டது. அதன்மூலம் மகான், இன்னும் சிலரையும் வேலைக்குச் சேர்த்தும்விட்டான்.

வீடு வீடாகச் சென்று பத்திரிகை பெட்டிகளிலும், கதவுத் துவாரங் களூடாகவும் தினசரியைத் திணிக்கவேண்டும், சில வயோதிபர்களுக்கு, படிகளில் ஏறி வாசலில் போட வேண்டும். மேலேறிப் போடுவதை முகாமையாளர் மிகவும் பாராட்டுவார்.

கிழடு கட்டைகளுக்கு அது மிகவும் மகிழ்ச்சி தரும். அதனால் அன்பளிப்புகளை காசாக உறையிலிட்டு, நன்றியும் சொல்லி கதவில் ஒட்டி வைத்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருசில வீடுகளில், மின் தூக்கி இல்லாவிட்டாலும், படிக்கட்டு களில் ஏறிப்போய் போடுவதால் நாரி கழன்றுவிடும். இயலாமையில் சிலவேளைகளில், படிக்கட்டில் இளைப்பாறி இருந்து, சுயகழிவிரக்கம் கொண்டு அழுவதுமுண்டு.

பனி கொட்டும் காலமான 'வின்ரர்' குளிர் காலத்தில், வீதி எங்கும் முழங்கால் புதையுமளவுக்கு தேங்காய்ப் பூ துருவல் போன்ற, வெண்பனிப் படலம் விரவிப் படர்ந்துகிடக்கும். பார்ப்பதற்கு மிகவும் அழகாகப் பரவசமாகத் தோன்றினாலும், கூரிய ஊசி குத்துவது போன்றிருக்கும் குளிர் மிகக் கொடுமையானது.

வாழ்க்கையில் முதலனுபவம் கால்,கைகளெல்லாம் விறைத்து மரக்கட்டை போல் உணர்வற்றுப் போய் விடும். அழுகின்ற குழந்தை களுக்கு வழிகின்ற மூக்குச்சளி போல் தொடர்ந்து வழியும் மூக்கைச் சிந்தவோ, துடைக்கவோ முடியாத அவலம் உழைக்க வேண்டும் என்ற வெறி, அவலங்களை அசட்டை செய்துவிடும். குளிர் துன்பமெல்லாம் இரண்டாம் பட்சமே.

நத்தார் பண்டிகைக் காலங்களில், கை நிறையக் காசுகளும், பரிசுப் பொருட்களும் இனாமாகக் கிடைக்கும்.

சில நண்பர்களின் அனுசரணையில், உணவு விடுதிகளில் சமையல் உதவிக்கு ஆள் தேவைப்பட்டபோதும், மாச்சல் பாராது-ஓய்வைப் பொருட்படுத்தாது அவற்றையும் செய்தான்.

சிறு துளி பெரு வெள்ளம் போல், பணமும் கை நிறையச் சேர்ந்தது. நண்பர்களுக்கு கைமாறாகக் கொடுக்குமளவுக்கு பணம் புழங்கியது. ஊரிலுள்ள உடன் பிறப்புகளுக்கும், நண்பர்களுக்கும் இடையிடையே தானாகவே முன்வந்து, பண உதவி செய்தான். அது அவனது பிறப்புக் குணம். தாய்,-தகப்பன் மூலம் வழி வந்தது.

ஒரு பகுதியைச் சேமித்துக் கொண்டான். அரசியல் மோதல்களால், தமிழகத்துக்கு புலம் பெயர்ந்திருந்த, மனைவி-பிள்ளைகளை அழைத்துக் கொள்ளத் தேவைப் படலாம் என்பதே அவனது நோக்கமாயிருந்தது. அதற்காகக் கடுமையாக மாடாய் உழைத்தான்.

உழைப்பு... உழைப்பு... பணம்... பணம்..... அதுவே அவனது தாரக மந்திரம்.

○•••••○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களின் நகர்வில், சில ஆண்டுகள் முன் நோக்கி விரைவாய் நகர்ந்தன.

அவனது வதிவிட - வேலை அனுமதிகளும் நிரந்தரமாக்கப்பட்டன. காசும் போதியளவு சேர்ந்தது. நல்லதொரு வழக்கறிஞரை ஏற்படுத்தினான். அவரின் திறமையால், குடும்பத்துடன் இணைவது சட்ட வரையறை என்ற காரணத்தை முன் வைத்து, நுழைவு அனுமதியும் கிடைத்தது. அவர்களும் வந்து சேர்ந்தனர்.

நாட்களின் நகர்வில், பிள்ளைகளுக்குப் பொருத்தமான பாடசாலைகளும் கிடைத்து, யேர்மன் மொழியில் கல்வி கற்கத்தொடங்கினர். கல்வி, இந்த நாட்டில் கட்டாயம்.

தமிழ்க் குடும்பங்களை, அவனது சுற்றாடலில் விரல்விட்டு எண்ணிவிடலாம். அவனது மனைவிக்குத் தெரிந்தவர்கள் ஒரு சிலரே. பெரும்பாலும் வீட்டில் தனியாகவே இருக்க வேண்டிய சூழல்.

நாட்டு நடப்புகளை அறிவதுக்கு, தமிழ் ஊடகங்கள் எதுவுமே யேர்மனியில் இல்லாத காலம் அது. சினிமாக்களோ, அலம்பல் (சீரியல்) நாடகங்களோ தோன்றி இருக்கவில்லை.

மகான், தினமும் இரவில் 'ரெஸ்ரோரண்ட்' வேலைக்குப் போய், நடுச்சாமத்தில்தான் வீடு திரும்புவான். வாரத்தில் ஒரே ஒரு நாள்தான் ஓய்வு கிடைக்கும்.

தமிழ் கோவில் எதுவுமே அங்கு இருக்கவில்லை. ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் மனைவி கத்தோலிக்கக் கோயிலுக்குப் போய் வருவாள். அங்குதான் சாத்தான் தொற்றிக் கொண்டது. அங்கு அறிமுகமான ஒரு கத்தோலிக்க தமிழர் குடும்பம் மூலமாக தவறான புதிய வழி காட்டல் ஏற்பட்டது.

வீட்டில் பெரும்பாலும் தனிமையிலிருந்த மனைவிக்கு, தவறான அந்தக் குடுப்பம் அறிமுகமாகியது. அவர்களின் வழி காட்டலில் அவளுக்கு, 'அலேலூயா' சபையினருடன் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. அவர்களுக்கு மதம் மாற்றுவதே முழு நேரப் பணி. அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டுவிட்டால், மீள்வதென்பது நடக்கவே நடக்காது. அதிலும் பெரிய கொடுமை என்னவென்றால் கத்தோலிக்க மதப் பிரிவினரே 'அல்லோயா'வுக்கு மாறி மதப் பிரசாரம் செய்ததுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குத் தெரிந்தவர்கள் மூலமாக, இந்த சேதி தெரிந்த போது, பெரும். பூகம்பம் வெடித்தது.

நம்ப முடியாமல் முதலில், அவனாகத்தான், மனைவியிடம் கேட்டான். அவளோ நேரடியாக ஏற்றுக்கொள்ளாமல், அப்படி இப்படி யென்று பொய் பிரட்டுகளைச் சொன்னாள்.

சைவக் கோயில்கள் அங்கு இல்லாததால், எல்லாமே கடவுள் தானே என்று அங்கு போவதாகவும்,. அதில என்ன தவறு..? என்று அவனிடம் திருப்பிக் கேட்டு வாதிட்டாள்.

அவன், எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவள் பிடிவாதமாக, ஒரே பிடியில் நின்றாள். பிரச்சனை விஸ்வரூபம் எடுத்து, முறுகல் முற்றி பேச்சு வார்த்தையே ஊமையாகியது.

கையறு நிலையில் மகான்,என்ன செய்வது எனத் தெரியாது தவித்தான். பிரச்சனையைச் சற்று ஆறப்போட்டால், அவள் வழிக்கு வருவாள் எனத்தவறாக எடை போட்டு ஏமாந்துவிட்டான்.

வீட்டில் அவள், அவனுக்குச் சமைப்பதேயில்லை. சமைத்த உணவுகளை'சேர்ச்சுக்கு' வேறு எடுத்துச் சென்று, அங்குள்ளவர்களுடன் பகிர்ந்து சாப்பிட்டாள்.

மகான் 'ரெஸ்ரொரண்ட்' டில் வேலை செய்ததால், அங்கேயே சாப்பிட்டுவிட்டு வருவான்.

எப்போதும், இரவு 12.00 மணிக்கே வேலை முடிந்து வரும் மகான், அன்று வேலை குறைவாக இருந்ததால், 9.00மணியளவில் வீட்டுக்கு வந்துவிட்டான். வீட்டில் மகளும், மனைவியும் இல்லை. மகன்மார்கள் இருவர் மட்டுமே இருந்தனர். அவர்களைப் பற்றிக்கேட்ட போது, தயக்கத்துடனும், மிரட்சியுடனும், வழமை போல் அவர்கள் 'சேர்ச்சுக்கு' போய் விட்டதாகச் சொன்னார்கள். அதைக்கேட்டதும், சர்வாங்கமும் கோபத்தில், குமுறிகுலுங்கியது.

இவ்வளவு நாளும், தன்னை ஏமாற்றியதை நினைத்தபோது, கோபம் உச்சிக்கு ஏறியது. பொறுமை காணாமல் போனது. 'விஸ்க்கி'யை எடுத்து மள மளவென மண்டினான்.

அளவு மீறிக் குடிப்பவனல்ல மகான். ஆனால் இன்று, மதுவில் முழுகினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதை உச்சிக்கு ஏறிய வேளைதான், மனைவி-மகள் இருவரும் வீட்டுக்குள் நுழைந்தனர். மகானைக் கண்டதும், மனைவி கதி கலங்கி அதிர்ந்துவிட்டாள். அவன் வழமை போல 12 மணிக்குப் பிறகுதானே வருவான் என எண்ணியிருந்தவளுக்கு மண்டை விறைத்துப் போனது.

"எங்கே...போய் கூத்தடிசிட்டு வாறீங்க...?" என கோபம் கொப் பளிக்க கேட்டபடி கன்னத்தைப் பதம் பார்த்தான்.

"அது..என்ர ..விருப்பம்.. என்னை எதுவும் கேட்க முடியாது... எனக்கு என்ர சபைதான் முக்கியம்..." ஆணவத்துடனும், அகங்காரத் துடனும் குரலை உயர்த்தி எதிர்த்துக் கதைத்தாள்.

மகான் தன்னை மறந்தான். கண்-மூக்குத் தெரியாமல், வெளுத்து வாங்கினான். மகன்மார்கள் குறுக்கே விழுந்து தடுக்கவுமே அமைதி யானான்.

அடுத்த நாள்....

ஒரு முக்கிய நிகழ்வுக்காக 'சுவிஸ்' க்குப் பயணமாகிவிட்டான். மீண்டும் வீடு திரும்பியபோது, மகன்மார்கள் மட்டும் வீட்டில் இருந்தனர். மகானைக் கண்டதும், பேந்தப் பேந்த முழித்தனர். மிகவும் கலவரத்துடன் காணப்பட்டனர்.

மெதுவாக, அமைதியாக விசாரித்த போது, தயக்கத்துடனும், பயத்துடனும், அவர்கள் இருவரும் சேர்ச்சைச் சேர்ந்தவர்களுடன், உடுப்புப் பெட்டிகளையும் எடுத்துக் கொண்டு போய்விட்டதாகக் கூறினர். மகான், சுவிஸ்க்குக் கிளம்பிய அடுத்த நாளே போய் விட்டதாகக் கூறினர். அவர்களையும் தம்முடன் வரச் சொல்லி வற்புறுத்தினராம். ஆனால், அவர்கள் மறுத்துவிட்டனர்.

மகானுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. என்ன செய்வது என்று குழம்பினான். "ஏன் நீங்க போகவில்லையா..?" ஈனஸ்வரத்தில் கேட்டான்.

"அந்தப் பைத்தியங்களுடன் போக நாங்களும் என்ன விசரன்களா...?" என வெறுப்புடன் முணு முணுத்தனர்.

○•••••○

நாட்கள் நகர்ந்தன........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தத் தகவலும் எட்டவில்லை. யாரிடமும் விசாரிக்கவும் இல்லை. ஒரு வாரம் கடந்த நிலையில், பதிவுத் தபால் ஒன்று, ஒரு வக்கீலிடமிருந்து வந்திருந்தது.

அதன் சாராம்சம் 'மகான், மனைவியையும்-மகளையும் துன்புறுத்தி வீட்டை விட்டு வெளியேற்றியதாகவும், இருவருக்கும் மேற் கொண்டு செலவுகளை, தன் மூலம் மாதா மாதம் கட்டவேண்டும்' என்றிருந்தது.

மகான் தாமதிக்காமல், அவனுக்கு ஏற்கனவே தெரிந்த வக்கீலைத் தொடர்பு கொண்டு நடந்தவற்றை விபரித்தான். தான் வீட்டில் இல்லாத வேளையில், அவர்களாகவே வெளியேறியதாகவும், மகன்மார்கள் அதற்குச் சாட்சி என்பதையும் கூறினான்.

அதன் பின்னர், இரண்டு பகுதி வக்கீல்களும், வாதப் பரிமாற்றங் களாகக் கடிதப்பரிமாற்றங்கள் செய்து கொண்டனர்.

விரைவில், குடும்ப நீதி மன்றத்துக்கு வழக்குப் போனது மகானை, எந்த வழியிலும் தண்டித்தேயாக வேண்டுமென்று 'அல்லேலூயா' பகுதியினர் மும்முரமாயிருந்தனர்.

பிரச்சனை தொடங்கியதிலிருந்து, தினமும் இரவும் -பகலும், அநாமதேய தொலை பேசியழைப்புகள் மகானுக்கு வந்து கொண்டே யிருந்தன. அவனைக் கண்ட மேனிக்கு மிரட்டினர். அவனும் தங்கள் சபைக்கு மதம் மாறிவந்து சேர்ந்தால், வழக்கைக் கைவிடுவதாக வலை வீசினர். தம்மை எதிர்த்தால், அவனைச் சும்மா விடப்போவதில்லை எனச் சவால்விட்டனர். இவை அனைத்தையும்,அவனது வக்கீலிடம் முறையிட்டான். அவர் அவனை அமைதியாயிருக்கும்படி, அறிவுறுத்தினார்.

கடிதங்கள் மூலமான தர்க்கத்தின் பின்னர், 6- மாதங்களளவில், முதல் முறையாக குடும்ப வழக்குமன்றுக்கு விசாரணைக்கு வந்தது. மகானது வக்கீல், மிகவும் திறமைசாலி. சர்வதேச சட்ட நுணுக்கங்களில் கில்லாடி.

மகானிடம், நீதிபதி கேட்டார், "பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி, இணைந்து வாழ வேண்டும்" என்று.

"புதிதாகப் பின்பற்றும், மதத்தை அறவே கைவிடவேண்டும்" இது மகானின் கோரிக்கை.... "உயிர் போனாலும் மீளவும் சைவ சமயத்துக்கு திரும்பமாட்டேன் "என்று அடித்துக்கூறி விட்டாள். பிரிவதே அவளது பிடிவாதமான முடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேர்மன் நாட்டுச் சட்டப்படி, குறைந்தது ஒரு ஆண்டாவது பிரிந்திருந்த பின்பே, மண முறிவு என்பது சாத்தியம் நியதி. ஆனால் அவனது வக்கீல் வைத்த வாதமோ அபாரமானது.

"எனது கட்சிக்காரர், ஈழத்தில் இந்துசமய சட்ட சம்பிரதாயப்படி மணம் புரிந்தவர். அங்குள்ள, கண்டியன் திருமணச் சட்டம் கூறுவதன்படி, மனைவியானவள் தானாகவே விட்டை விட்டு வேளியேறினால், மணமுறிவு கொடுத்ததாகவே அர்த்தப்படும். எனவே, இப்போதே மணமுறிவு அளிக்கப்படவேண்டும். காத்திருக்கவேண்டியதில்லை" என தனது வாதத்தை முன் வைத்தார்.

மனைவி தரப்பினர், வாயடைத்து நின்றனர். ஆனால் எதிர்க்க வில்லை. இரு தரப்புச் சம்மததுடன் அன்றே தீர்ப்பும் வழங்கப்பட்டது.

பெண் பிள்ளை வயது குறைந்ததால் தாயுடனும், ஆண் பிள்ளைகள் வளர்ந்தவர்கள் ஆதலால், அவர்கள் விருப்பப்படி தகப்பனுடனும் இருக்கத் தீர்ப்பாகியது

மகானைப் பொறுத்தமட்டில் சனி தோசம் நீங்கியது.

(யாவும் யதார்த்தமானவை)

(இந்தக் கதை, கனடாவிலிருந்து வெளிவரும், தீபம் மின்னிதழில் வெளியானது.)

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலைவேட்டை

போடியார் பொன்னம்பலம், சண்முகத்தைக் கூப்பிட்டு விட்டிருந்தார்

தாமதமில்லாமல் உடனே அவரைக்காண, மாளிகை போன்ற அவரது வீட்டின் முன் பவ்வியமாகப் போய் நின்றான் சண்முகம். அழுக்குச் சறமும் ஆயிரம் கண்கள் போன்று பொத்தல்கள் நிறைந்த பனியனுடன் அவர் முன் கூழைக் கும்பிடு போட்டபடி போய் நின்றான். வெள்ளை பனியன்தான், ஆனாலும், அது பழுப்பா கருப்பா எனச் சொல்ல முடியாதபடி அழுக்குப் படிந்திருந்தது.

சண்முகம் ஏழைஎன்றாலும் திடகாத்திரமான முறுக்கேறிய உடல்வாகு; அன்றாடம் காய்ச்சி; அழகிய மனைவி; அவனது முறைப் பெண்தான் முல்லை.

மணமாகி நீண்டநாளாகியும் குழந்தைப்பாக்கியம் இல்லை; கட்டுடல் குலையவில்லை. 'சண்முகத்துக்கு வாய்த்த வாழ்வு' என ஊரார் பொறாமைப் படும்படியான அழகு. இளவட்டங்கள் அவளைச் சுற்றி வட்டமடிக்கும்.

போடியாருக்கே அவள் மீது பிரேமையுண்டு என எல்லோரும் குசுகுசுத்துக் கொண்டனர். அவளை, தனது மனைவியைக் கேளாமலேயே வீட்டுவேலைக்கு வைத்திருந்தார். தொட்டதுக்கெல்லாம் அவளைத்தான் கூப்பிடுவார். அக்கம் பக்கம் பார்த்து, சின்னச் சேட்டைகளும் விடுவார். அவள் சிருங்காரமாய் நாணிச் சிரிப்பாள். சம்பளத்தைவிட தாராளமாக அஞ்சப்பத்தைக் கொடுப்பார்.

பண்டிகைக் காலங்களில் புதுச் சேலை சட்டையும், சண்முகத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாறன் சட்டை பனியன்களும் நிச்சயம் உண்டு. அவள், வீட்டு வேலைக்கு வந்தால், குட்டிபோட்ட பூனைபோல அவளையே சுற்றிச் சுற்றி வட்டமிடுவார் போடியார்.

அவரது மனைவி ஓர் அப்பாவி. துளியும் சம்சயப்படுவதில்லை. சண்முகம் கொஞ்சமும் படிக்காதவன். கோழி கிழிப்பது போல் கோணல் மாணலாய் கையொப்பம் மட்டும் போடத்தெரியும். அதுவும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாக இருக்கும். அவன் அவற்றைப் பற்றிக் கவலையே பட்டதில்லை. இளமையிலிருந்தே காடும் வேட்டையுமாய் பழக்கப்பட்டு விட்டான்.வேட்டையாடுவதுடன், சேனைப் பயிர்களும் செய்வான்.

"லைற்" விடப்போவது என்று சொல்லி நண்பனையும் அழைத்துக் கொண்டு பெருங்காட்டுக்கு அடிக்கடி போவான். மான், மரை, பன்றி என எதையாவது வேட்டையாடி காசு பார்ப்பான். மான், மரை அகப்படாத பட்சத்தில், காட்டுக் குழுமாடுகளையும் வேட்டையாடி, இறைச்சியைக் காய்ச்சி, மான்- மரையென விற்பதில் விண்ணன்.

வேட்டைக்குப் போகும் வேளைகளில், காட்டில் நாட்டுச் சாராயமும் காய்ச்சி- வடித்து ஊருக்குள் விற்பதுண்டு. சண்முகனின் கசிப்புக்கு தனி மவுசு. சொன்ன விலைக்கு விற்றுத் தீர்க்கும். மிகவும் தரமான சரக்காம்.

அவன் ஒரு சாந்தசொரூபி; ஆனாலும் மகாமுரடன். தானாக வம்புக்குப் போக மாட்டான் வந்தசண்டையை விடவும்மாட்டான். அதனால் அவனோடு, யாருமே தனகுவதில்லை. முறுக்கு மீசையும், உருண்டுதிரண்ட உடற்கட்டும் பார்ப்பவரை அச்சமுறச்செய்யும்.

"வாடா... சண்முகம்...! உனக்கு ஒரு பெரியவேலையிருக்கு... முன்னையமாதிரி கங்கை ஆற்று இறவடியில, திரும்பியும் ஒரு முதலை ஒரு மாட்டை இழுத்திற்றுதாம். என்ன வழிப்பட்டாவது சனியனை சுட்டுத் தாட்டாக்கணும். இப்பவே வெளிக்கிடு. அத சுடாம வராத.... வேண்டிய சாமான் சட்டுகள கட்டிக்கொண்டு போ.." கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் போடியார்.

நூற்றுக் கணக்கான மாடுகள் அவருடைய பட்டியிலுண்டு. அவற்றை மேய்க்கவே இரண்டு பேரைக் கூலிக்கு அமர்த்தியுள்ளார். சண்முகம் மறுபேச்சில்லாமல் பலமாய்த் தலையாட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தின நாளானாலும் பரவாயில்ல... அதிர தோலும் எனக்கு வேணும்" என்று சொல்லி பல ஆயிரம் ரூபாய் தாள்களை அவன் கையில் திணித்தார்.

"சரி..வாறன்....ஐயா...." பல்லிளித்தான் சண்முகம்.

ஒரு கூழைக் கும்பிடும் போட்டுவிட்டகன்றான். மனைவி முல்லையிடம் விபரத்தைச் சொல்லிவிட்டு, தேவையான சாமான்களை வாங்கிக்கொண்டு, அன்றைக்கே இறவடிக்குக் கிளம்பிவிட்டான்.

இறவடிக்கு நெருங்கி வந்ததும், தனது வழமையான சீட்டி ஒலி மூலம், சேனைக்காடு அதிர ஒலி எழுப்பினான். மாடு மேய்ப்பவர்களுக்கு அவனது சீழ்க்கை பழக்கப்பட்ட சிக்னல். அவர்களில் ஒருவன் குடிலில் இருந்து, பதிலாக சீழ்க்கை ஒலித்தான்.

அவனிடம் போடியாரின் வேண்டுதலைத் தெரிவித்தான். அவர்களுக்கும் விபரம் ஏற்கனவே தெரிந்திருந்தது போலும். அவர்கள் வயதுபோன ஒரு காய்ந்த மாட்டைத் தூண்டில் இரையாகத் தயாராக வைத்திருந்தனர்.

தேனீர் அருந்தி இளைப்பாறியதும் மாட்டுடன், இறவடி முகத்து வாரத்துக்கு வீடியொன்றைப் புகைத்துக்கொண்டு பொடி நடையாகப் போனான்.

கங்கை ஓரத்தில் நீர் நிலையை அண்டி, ஓரிடத்தைத்தேர்ந்து, ஆற்றோரம் படர்ந்திருந்த வெல்லை மரக் கிளையில் மாட்டைக் கட்டிவிட்டு, மாட்டுக்கு வெல்லங் குழைகளை வேண்டியளவு ஒடித்துப் போட்டான். தான் பலியாகப் போவதை உணராத மாடு, வெல்லங் குழையை ஆவலுடன் கவ்வி மேய்ந்தது.

வசதியான ஓரிடத்தில் சணல்சாக்கை விரித்து சப்பாணம் கொட்டி அமர்ந்தான் சண்முகம். மீண்டும் ஒரு பீடியைப் பற்றவைத்து 'தம்' இழுத்துக் கொண்டான். அவனது பீடிக்குள் புகையிலையுடன் சிறிதளவு கஞ்சாவும் கலந்திருக்கும்.

அது, அவனது விசேச தயாரிப்பு. நடந்துவந்த களைப்புக்கு கஞ்சாபீடி இதமான இலாகிரியை ஊட்டியது. புகையை ஆழ உள்ளிழுத்து அனுபவித்தான்.

கஞ்சாவின் மணம் அவனைச் சுற்றிச் சூழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று, பூரண நிலவு....

பால் போன்றவெளிச்சம் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. கங்கைக் கரையும், கட்டிவிட்ட பலிமாடும் நிலவொளியில் துல்லியமாய் பார்வைக்குப் பட்டன.

பல்வேறு இனப் பறவைகள், மிருகங்களின் விதவிதமான விசித்திர ஒலிகள் தொடர்ந்து, மாறி மாறி ஒலித்துக்கொண்டேயிருந்தன. அவற்றின ஒலிகளை வைத்து, அவற்றை அடையாளம் கண்டுகொள்வான் சண்முகம். அவை, பசியில், பயத்தில், அமைதியின்மையில், காதலில் இருப்பதை துல்லியமாய் உணர்ந்து கொள்வான்.

குள்ள நரிகள் இரண்டு, கஞ்சா மணத்தில் ஆட்கொள்ளப்பட்டு அவனது அண்மையில் வந்ததும் பின்னர், மனிதவாடை அடித்ததும் சடாரென ஓடி மறைந்தன.

நேரம் மெல்லெனக் கடந்தது........

நீண்டதூரம் நடந்துவந்த களைப்பு, உண்டமயக்கம், கஞ்சாவின் இலாகிரி அத்தனையும் ஒன்று சேர்ந்து சண்முகனின் கண்களை மெல்லத் தழுவி. உறக்கநிலைக்குத் தள்ளியிருந்தன. அவனை அறியாமலேயே குறட்டை ஒலியும் மெலிதாய் எழுந்தது.

ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்திருந்த வேளை, பலி மாட்டின் அவலஒலி அவனைத் தூக்கிவாரி எழுப்பியது. முதலையைக் கண்டோ, அல்லது அதன் கொடுவாயில் அகப்பட்டதாலோ மாட்டின் கதறல், அந்த இரவுவேளையில் காடே அதிரும்படி ஒலித்தது.

சண்முகம் துடித்துப் பதைத்து எழுந்தான்.கையில் துவக்கை வாரி எடுத்தபடி சரேலென எழுந்து, மாடுகட்டிய இடத்தை உற்று நோக்கினான். மாடு நீர்க்கரையில் தபக் தபக்கென துள்ளியடித்து, அவலமாய் கதறியது. நிலத்தில் கட்டிய மாடு நீருக்குள் இப்போது நிற்பதென்றால்......????

முதலை மாட்டைக் கவ்விவிட்டதென்பது உறுதி. வேகமாய் சரேலெனப் பாய்ந்த சண்முகம் மாடுநின்ற திசையில் 'ரோச்' ஒளியைச் சடுதியாகப் பாய்ச்சி, அதே நொடியில் துவக்கையும் குறிவைத்து விசையையும் அழுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவக்கின் வெடியொலியில் அத்துமான காடே அதிர்ந்து எதிரொலித்தது. பலதரப்பட்ட பறவைகள், மிருகங்கள் அலறிச் சத்தமிட்டன.

'ரோச்' ஒளியைப் பார்த்தவுடனயே கவ்விய மாட்டைக் கை விட்டு, நீருள் மூழ்கி மறைந்துவிட்டது முதலை. சூடுகுறி தவறி விட்டதோ.....??

நப்பாசையுடன் சண்முகம் ஓடிச்சென்று நீர்நிலையை, ஒளியைப் பாய்ச்சித் துல்லியமாய்ப் பார்வையால் துலாவினான். ம்ஹூம்....

முதலையின் சிலாவனையே இல்லை. நீர்நிலை சலனமற்றிருந்தது. அவனது வேட்டைத் துறையில் இதுவே முதல் தடவை. என்றுமே அவனது குறி தவறியதில்லை.

முதலை தப்பிவிட்டதை நினைத்து மனம் சங்கோசப்பட்டது; சினம் பீறிட தன்னையே கடிந்து சினந்து கொண்டான். முதலையின் பிடியிலிருந்து தப்பிய மாட்டைப் பார்க்கப் பச்சாத்தாபமாய் இருந்தது. மாட்டின் தொடைப்பகுதியிலிருந்து, இரத்தம் பீறிட்டு நீர் நிலையையும் நிறம் மாற்றியது.

"சீ....பாழாய்ப்போன நித்திரை...! ஒருவெடியில விழுத்தவேண்டிய சனியன்... தப்பிற்றுது..." மிகவும் அங்கலாய்த்துக்கொண்டான். அவமான உணர்வு அடி மனதிலிருந்து எழ, வாய்விட்டு முணுமுணுத்துக்கொண்டான்.

"எங்கேயடி...போகப்போறா ? என்ர கையாலதாண்டி உனக்குச் சாவு.."

ஆத்திரம் அடங்குமாப் போல இல்லை. 'கள்ள முதலை...இனி இண்டைக்கு வரவேவராது. 'இனி நாளைக்குத்தான் பார்க்கவேணும்' என்று எண்ணிக் கொண்டு குடிலை நோக்கி நடந்தான்.

நேரமும் நடுச்சாமம் கடந்திருந்தது.

சண்முகத்தின் வாடிய முகத்தைப் பார்த்த குடிலிலுள்ளவர்களுக்கு நடந்தது புரிந்துவிட்டது. அவனைச் சமாதானப் படுத்தினர்.

அடுத்த நாள் முழுப்பகலும் தூங்கினால்தான், இரவு முழுவதும் விழித் திருக்க முடியமென, மூசிமூசித் தூங்கினான். செக்கல்படவும் மாட்டை ஓட்டிக்கொண்டு இறவடிக்குப் புறப்பட்டான்.

நேற்றையப் பயத்தில் மாடு, அடம்பிடித்தது. அதன் சூட்சும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு, அதற்கு அறிவுறுத்தியது போலும். சண்முகம் தனக்குள்ளாகச் சிரித்துக்கொண்டான்.

"பயப்பிடாதடி செல்லம்!, இண்டைக்கு உன்ர மேலில முதலையிட, ஒரு பல்லுக் கூடப் படாது. அதுக்கிடையில அதுர கதைய முடிச்சிருவன்.. அடம் பிடிக்காம வாடி செல்லம்.. " என்று மாட்டைத் தடவிக்கொடுத்தான்.

அவன் தடவிக்கொடுத்ததும், மாடும் முரண்டு பிடியாமல் அவன் பின்னே இழுபட்டுப் போனது.

இன்றைக்கு கஞ்சா பீடி புகைப்பதில்லை என்று முடிவெடுத்துக் கொண்டு, சாதாரண பீடியையே பற்றவைத்தான். வாய் சப்பென்றிருந்தது. எச்சிலைக் காறித் துப்பினான்.

நேற்றையைப் போலவே,வேறு ஓரிடத்தில் வெல்லை மரத்தில் மாட்டைப் பிணைத்துவிட்டு, மாட்டின் பக்கத்திலேயே சிறு புதருக்குள் பதுங்கிக்கொண்டான்.

'லைற்'றையும், துவக்கையும் ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துக் கொண்டான். நேரம் மெல்ல மெல்ல நகர்ந்தது.

ஒரு வீடியையும் பற்றவைத்துகொண்டான்.

காட்டு பறவைகள், மிருகங்களின் வழமையான ஒலிகள் காதை நிறைத்தன. சோடி மயில்களின் அகவல், அவன் காதில்விழவும், அது அவனுக்கு நற்சகுனமாகவே தோன்றியது. மனதில் திடமான நப்பாசை எழுந்தடங்கியது.

ஆற்றுக் கரையோரம் அரைகுறை உறங்கத்திலிருந்த, கானாங் கோழிகள் அரண்டு வெருண்டு சிதறிப் பறந்தன. ஆக்காண்டிக் குருவிகள் எச்சரிக்கை ஒலி யெழுப்பி வட்டமடித்தன.

சண்முகம் உசாரானான். கண்கள் ஊசிக்கூர்மையாய் நீர்நிலையை மேய்ந்தன. மாடும் மிரண்டு திமிறியது. சூடுகண்ட மாடல்லவா? நான்கு -ஐந்து அறிவுள்ள மிருகங்களுக்கு சூட்சும அறிவுண்டு. ஆறறிவான மனிதர்களுக்குத்தான் அது கிஞ்சித்துமில்லை. முட்டாளாகவே வாழ்கின்றான்.

சண்முகம், இடது கையில் ரோச்சையும், துவக்குக் குழலையும், ஒருசேர உறுதியாகப் பிடித்தபடி, வலது கையயால் துவக்கின் விசையை ஸ்பரிசித்தபடி, தோள்பட்டையில் அழுத்தமாகப் பதித்துத் தயாரானான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டினருகே நீர்நிலை சலசலத்தது. மாடு மிரண்டு துள்ளித் திமிறியது.பெரும் சலசலப்புடன் நீரைவிட்டு மேலெழுந்த முதலை, மாட்டைநோக்கி அசுரவேகத்தில் பாய்வது நிலவொளியில் மங்கலாக தெரிந்தது.

சண்முகம் தாமதிக்கவில்லை.'ரோச்' ஒளிர்ந்த திசையில் குறி வைத்து விசையை அழுத்தினான். தாமதிக்காமல் அடுத்த தோட்டாவையும் நிரப்பிக் கொண்டு, கரையில் நீருக்குள் காலைப் பதித்தான்.

குறி கொஞ்சமும் தவறி இருக்கவில்லை; ரோச் ஒளியின் பிரகாசத்தில் முதலை வெள்ளை புரட்டி நீர் நிலையைக் கலக்கியடித்து அதகளப்படுத்தியது. நீர்நிலை கலங்கி இருண்டது.

சண்முகம் மீண்டும் முதலையின் தலையைக் குறிபார்த்துச் சுட்டான். முதலையின் துடிப்பு முற்றாக அடங்கியது. வயிற்றுப் பக்கத்தை மேலே காட்டியபடி சிறு அசப்புடன் நீர்மட்டத்தில் மிதந்தது.

கையோடு கொண்டுவந்திருந்த வீச்சுக் கயிற்றை சுருக்கிட்டு, முதலையைக் குறிபார்த்து வீசினான். ஒரே வீச்சிலேயே சுருக்கில் முதலையின் சிதைந்த தலைப்பகுதி சிக்கிக்கொண்டது. பொங்கிய பூரிப்புடனும், இறுமாப்புடனும் கயிற்றை இழுத்தான், மிகவும் கனதியாயிருந்தது.

"அப்பாடியோவ்.....இவ்வளவு கிடாக் கணக்கா இருக்கே..! நீதானா அடுத்தடுத்து மாடுகளை வேட்டையாடினது ?" என ஆச்சரியத்துடன் சொல்லிக்கொண்டான்.

மாட்டுக்கு என்ன புரிந்ததோ அமைதியாகி குரல் எழுப்பியது. சண்முகம் மூன்று முறை இடைவிட்டு சீழ்க்கை ஒலியை எழுப்பி குடிவிலுள்ளவர்களுக்கு வேட்டையின் வெற்றியை தெரியப்படுத்தினான். பதில் சீழ்க்கையும் உடனே ஒலித்தது.

சண்முகத்தின் நாக்கும் வாயும் நமநமத்தன. கஞ்சாப்பீடியைப் பற்றவைத்து ஆவலுடன் ஆழமான 'தம்' ஒன்றை இழுத்துப் புகையை விழுங்கினான்.

மாடு மேய்ப்பவர்கள் விரைவாகவே மூச்சிரைக்க ஓடிவந்தனர். சண்முகத்தைப் வாயாரப் புகழ்ந்து பாராட்டினர்.

"தம்பியளா.....!.இனி நீங்களாச்சு... முதலையாச்சு...! ஐயா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலைத் தோல் வேணுமெண்டவர். இப்பவே, இரவோட இரவா உரிக்கப்பாருங்க. இப்பிடியே விட்டுற்கு , நாளைக்கு உரிக்கலாமெண்டால் நரிகள், இல்லாட்டி வேறமிருகங்கள் கடிச்சுக் குதறிப்போடும். நான் இப்பவே ஊருக்குப் போறன். ஐயாட்ட விபரம் சொல்ல வேணும்." சண்முகம் வேட்டையாடிய கெக்களிப்பில் பரபரத்தான்.

சண்முகம் பரபரப்புடன் இரவோடிரவாகக் கிளம்பினான். பால்நிலவு ஒளிவீசி வழித் துணையாயிற்று. சில மணிநேர நடையின் பின் ஊரை வந்தடைந்தான். வீட்டை நெருங்கியபோது, வீட்டினுள் வெளிச்சம் மங்கலாய் தெரிந்தது.

"என்ன இவள் வெளிச்சத்தில நித்திரை கொள்ளமாட்டாளே.. என்ன சங்கதி....?" என்று யோசித்துக்கொண்டே வீட்டை நெருங்கியவன், சத்தம் போடாது மனைவிக்கு எதிர்பாராத அதிர்ச்சி கொடுக்க நினைத்து, யன்னலின் ஈவு ஊடாக ஊடுருவி நோட்டமிட்டான்.

சண்முகத்துக்குத் தூக்கிவாரிப்போட்டது. உச்சியில் இடியிறங்கியது போலிருந்தது.

மனைவி முல்லையின், செல்லச் சிணுங்கல் ஒலி அவனது காதில் நாராசமாய் துளையிட்டது. நெஞ்சு தகிர்த்துக் கனன்றது

இதயம் துடிப்பது காதில் 'டக்டக்' என்றில்லாமல் 'டொக் டொக்' என்றுகேட்டது. இடுக்கினூடே கூர்ந்து தன் வேட்டைப் பார்வை யால் குடைந்தான்.

இரத்தம் கொதித்து உடல் பூராவும் வியாபித்தது.

மங்கிய ஒளியில், போடியாரின் அணைப்பில் அவனது மனைவி ஆடை அலங்கோலமாக விலகிய நிலையில் மெய்மறந்து துவண்டு கிடந்தாள்.

சண்முகம் சுய சிந்தனையை முற்று முழுதாய் இழந்தான். பகுத்துணரவோ, சிந்திக்கவோ சற்றும் அவகாசமிருக்க வில்லை. அவன் படிப்பறிவில்லாதவன்.. ஏமலாந்தி....!

வீட்டுக்கதவை ஆக்ரோசமாக முழுபலத்தையும் ஒன்றுசேர்த்து முரட்டுத் தனமாய் உதைத்தான். கதவு படாரென திறந்து விரிந்தது.

அவர்கள் இருவருமே சுதாரித்து எழ முயல, சண்முகம் அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவகாசம் அளிக்கவில்லை. இரண்டு குண்டுகள் அடுத்தடுத்து இருவரையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தன.

அடுத்தடுத்த இரண்டு வெடிகளின் கோரமான பேரொலியில், வீட்டைச் சுற்றியிருந்த மரங்களில் தங்கியிருந்த காக்கைக் குருவிகள், உறக்கம் கலைந்து அவலமாக ஒலியெழுப்பி கலைந்து பறந்தன....

இது சண்முகனின் இரண்டாவது முதலை வேட்டை....

துவக்கு கிடையாய் நிலத்தில் சரிய, சண்முகம் இடிந்து போய்....

கற்சிலையாய் வாசற்படியில்.... பிரமைபிடித்து... ஒடிந்து.... சரிந்தான்.....

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# வாய்க்காலும் வரம்புகளும்

கார்த்திகை மாதம், நாய்களின் காதல்(வலன்டைன்) மாதம்.

பக்கத்து வீட்டுப் பெட்டை நாய் வள்ளிக்கு மதன நீர் சுரக்கத் தொடங்கி இரண்டொரு நாட்களாயிற்று. வள்ளி பருவக்குமரி போல் மிளிர்ந்தாள். இனி அவளின் எடுப்பு வேற "லெவல்".

வடிவேலின் வீட்டு நாய் சிங்கன்தான் முதலில் அதை மோந்து மோப்பம் பிடித்து அறிந்துவிட்டான். அன்றிலிருந்து, சாப்பாட்டுக்கே வர அவனுக்கு நேரம் இல்லை போலும். வள்ளியைச் சுற்றிச் சுற்றி இராப் பகலாய் வட்டமடித்து வழியத் தொடங்கிவிட்டான்.

அதன் பிறகுதான், மற்றத் தெரு நாய்க் கூட்டங்களும், அடுத்தடுத்த வீட்டு நாய்களும் விசயத்தை மோப்பம் பிடித்துக் குவிந்தன. ஆனாலும், சிங்கன்தான் கதானாயகனாகக் கோலோச்சினான்.

திடகாத்திரமான உடம்பு, அதுக்குத் துணையாயிற்று. இரவு முழுவதும், நாய்க் கூட்டத்தின் விரகதாபப் புலம்பலாக உறுமலும், குரைப்பும் சுற்று வட்டாரத்தில் யாரையுமே நிம்மதியாகத் தூங்கவிடவில்லை. அது, வடிவேலை மிகவும் சினமடையச் செய்தது. நித்திரை கலைந்து, எழுந்து வெளியே வந்து கற்களை தாறு மாறாக எறிந்து கலைத்தான்.

ஏதோ ஒரு நாய்க்கு, குருட்டு வாக்கில் எறிபட்டிருக்க வேண்டும். வலியில் அலறியடித்தது. மற்ற நாய்களும் திக்குதிசை தெரியாது கலைந்து ஓடின.

அதன் பின்னரே, வடிவேலும் மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்தான். கோழி கூவி எழுந்து பழகப்பட்ட வடிவேலை, நாய்களின் குரைப்புச்சத்தம் மீண்டும் எழுப்பிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமை போல் மனைவி, அவனுக்கு முன்னரே எழுந்து அடுப் படியில் அடைக்கலமாகிவிட்டிருந்தாள். மகள் செவ்வந்தியும் எழுந்திருந்து, வீட்டின் வறண்ட முற்றத்தை, சரக் சரக்கென பெருக்கத் தொடங்கியிருந்தாள்.

பன்குளத்தில், அமைந்திருந்தது வடிவேலின் வீடு. வளவு நிறைந்த மா, பலா, கொய்யா, போன்ற கனி தரு மரங்களும், தென்னைகளும் செழிப்பாக வளர்ந்திருந்தன. மூடு பனியின் ஈரப்பதன் ஒடுங்கி,மரக்கிளை களில் நீர்த்துளிகளாய்ப் பரிமளித்து முத்து முத்தாய் உதிர்ந்து கொண்டி ருந்தன. வடிவேலின் உச்சந் தலையிலும், வெறுமேலிலும் சில குளிர்ந்த துளிகள் வீழ்ந்த போது, உடல் சிலிர்த்தது. போர்வையால் தலையை யும், உடலையும் போர்த்திக் கொண்டான்.

முற்றத்தில் சடைத்து வளர்ந்திருந்த வேம்பு மரத்திலிருந்து ஒரு குச்சியை ஒடித்து, பற்களை விளக்கியவாறு, காலைக் கடன் கழிக்க புதர்ப்பக்கம் ஒதுங்கினான்.

நேற்றிரவு சாப்பிட்ட, குரக்கன் புட்டும், தேங்காய்ச் சம்பலும் வயிற்றில் கடமுடத்து ஆர்ப்பாட்டம் செய்தன. செத்தல் மிளகாய் சம்பல் தன் வேலையைக் காட்டியது. மாசிக்கருவாட்டின் சுவையில், கொஞ்சம் அதிகமாகவே சாப்பிட்டுவிட்டிருந்தான். மனைவியும், வஞ்சக மில்லாமல் செத்தல் மிளகாயைச் சுட்டு, சம்பல் இடித்திருந்தாள்.

வயிற்றை வெகுவாகக் கலக்கியதால், வழமையைவிட சற்று நேரம் எடுத்து, ஆற அமர இறக்கி வைத்து விட்டு... அப்பாடா.. என்று வந்தான்.

நாய் வள்ளியும், அவளது காதலர்களும் மீண்டும் வீட்டுத் தெரு வாசலில் குவிந்திருந்தனர். வீட்டு நாய் சிங்கன், திமிராய் கெத்துக் காட்டி மிடுக்குடன் நின்றான்.

"கார்த்திகை பிறந்தால் இதுகளின்ர கரைச்சல் தாளமுடியாது.... அப்பப்பா." என்று புறு புறுத்துக் கொண்டான் வடிவேலு.

வீட்டைநெருங்கும்போதுதான் எதார்த்தமாக, செவ்வந்தி பார்வையில் பட்டாள். கிணற்றடியில் சமையற் பாத்திரங்களை, உமிச் சாம்பலுடன் சேர்த்து தென்னம் பொச்சால் துலக்கிக் கொண்டிருந்தாள்.

அவளது பார்வை மட்டும், நாய்க்கூட்டத்தின் விரகதாபச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்லாபங்களின் மேல் மொய்த்து, முற்றாய் ஊன்றித் திளைத்திருந்தது.

வடிவேலின் வீட்டு நாய் சிங்கன், அசத்தலாக பெட்டை நாய் வள்ளியை வசியமாக்கி அணுகிப் பிணைச்சல் போட்டிருந்தது. மற்றைய நாய்கள், ஆற்றாமையில் முறுகி கறுமி உறுமின. ஒன்றையொன்று கடித்துக் கொண்டன.

சிங்கனும் வள்ளியும் பிணைச்சலில், எதிர் எதிர்த் திசையில் இழுபட்டுக் கொண்டிருந்தன. இறைவனால் படைக்கப்பட்ட-சபிக்கப் பட்ட பரிதாபத்துக்குரிய இனம் அவை.

தங்கள் வீட்டு நாய் சாதித்துக் கொண்டதை நினைத்து, செவ்வந்தி தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டாள். அவற்றின் பிணைப்பில் இணைந்த பார்வையை அகற்ற மறந்து வெறித்துப் பார்த்துக் கொண்டி ருந்தாள் செவ்வந்தி.

அண்மையில் வந்த வடிவேலுவுக்கு மகளின் அபத்தமான நிலையைப் பார்த்து, திகீர் என்று சங்கடமாகி மனதை உதைத்தது.

பல் விளக்கிய வேப்பங் குச்சியின் கசப்பை உமிழும் சாக்கில், பலமாகக் காறி உமிழ்ந்தான். அது ஒரு உசுப்பலாகவே இருந்தது. செவ்வந்தியும் தன்னை சடுதியாகச் சுதாரித்துக் கொண்டாள். பாத்திரங் களை மும்முரமாக உரசிக் கழுவத் தொடங்கினாள்.

வடிவேலு, வீட்டுத்தெரு வாசலில் குவிந்திருந்த, நாய்களை நோக்கி கல்லை விட்டெறிந்தான். அவை வெருண்டு கலைந்து ஓடின.

மகளை நினத்தும், அவளது முடங்கிப் போயிருக்கும் திருமணத்தை நினைத்தும் அவனது மனம் அங்கலாய்த்துக் கொண்டது. வடிவேலு, கால், கை முகத்தைக் கழுவிமுடித்ததும், காலைச் சாப்பாடும், சீரக-மல்விக் கோப்பியும் மனைவி பரிமாறினாள்.

சூரியன் சோம்பல் முறித்து, கிழக்கு வானிலிருந்து மெல்ல மேலெழுந்து கொண்டிருந்தது. மேற்கு வானம் செக்கச் சிவந்திருந்தது.

மேற்கில், சில நாட்களாகவே வானம் செங்கோலம் பூண்டிருந்தது. அது, மழைக்கான கட்டியம் என்பது வடிவேல் முதற்கொண்டு பலரதும் நப்பிக்கை. குளத்தில் போதியளவு நீரில்லாததால், மழையை, பல விவசாயிகளும் பெரிதும் எதிர்பார்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்ட உடனேயே, வழமையைவிட வேளைக்கே கிளம்பி னான். மண்வெட்டியை எடுத்துத் தோளில் தொங்க விட்டபடியே வயலுக்குப் போக ஆயத்தமானான்.

"ஏனப்பா இண்டைக்கு வெள்ளனையோட கிளம்பிறியள்? சாப்பிட்ட சாப்பாடு கொஞ்சம் செரிக்கட்டுமே." என்றாள் மனைவி.

"ஓமோம்...! பக்கத்து வயற்காரன், இரவில வாய்க்கால மறித்து, நமக்குப் பாயவேண்டிய நீரை, களவாகத் தனது வயலுக்குப் பாச்சுவது போலத் தெரியுது. அவன் வயலுக்கு வரமுதல் போனால், களவைக் கண்டு பிடிக்கலாம் எண்டு நினைக்கிறன்." என்று சொல்லிக்கொண்டே அவசர அவசரமாகக் கிளம்பினான்.

வாசலில், மறி நாய்க் கூட்டம் நிற்குமோ? என யோசித்துக் கொண்டே தெருவுக்கு வந்தான். நேற்று, நாய்க் கூட்டத்துக்கு, கல்லெறிந்து காயப்படுத்தியது ஞாபகம் வரவே, இரக்கம் சற்று மனதிலெழ மனம் இரங்கினான்.

"பாவங்கள்.! வாயில்லாச் சீவன்கள். இயற்கை நியதிக்கு அவை தான் என்ன செய்யும்? " எனத் தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்டான். இனி அவற்றை, எப்போதுமே துன்புறுத்துவதில்லை என உறுதியும் எடுத்துக் கொண்டான். நல்லவேளையாக, நாய்கள் எவையுமே அவன் கண்ணிற் படவில்லை.

நாய்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு வந்தவனின் காலடியில், நற நறவென ஏதோ முட்டைக் கோதாய் நொறுங்கியது. இயல்பு நிலைக்கு மீண்டவன் காலடியை கவனித்தான். அங்கு, பெரிய நத்தை ஒன்று, பின் பகுதி நொறுங்கிய நிலையில், தலையை உள் வாங்கி பரிதாபமாய்க் கிடந்தது.

"அச்சொச்சோ....!" என இரக்கத்தில் உச்சுக்கொட்டினான். எப்போதுமே நிலத்தை அவதானித்து நடக்கும் வடிவேலு, வேறு சிந்தனை யில் அவலத்தைச் செய்துவிட்டான். இரக்க சுபாவமுடைய வடிவேலு, பச்சாதாபப் பட்டான். அரை குறையாக நொறுங்கிய நத்தையை, மண்வெட் டியால் மிகுந்த அவதானமாக வாரி எடுத்து, வீதியோர புற்புதரிடையே விட்ட பின், சிறிது நேரம் அதனையே அவதானித்துக் கொண்டிருந்தான். நத்தையும் அச்சம் நீங்கி, மெதுவாக தலையை வெளியே நீட்டி மெல்ல நகர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது, வடிவேலுவிற்குச் சற்று ஆறுதலாக இருந்தது. வயலை நோக்கி விரைவாக நடந்தான்.

வடிவேல், எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவன் மரங்களைக் கூட, தேவையற்று வெட்டவே மாட்டான் பாம்பைக் கண்டாலுங்கூட அடிப்பதில்லை. மணலை வாரி இறைத்து எறிந்து துரத்தி விடுவதே அவன் சுபாவம்.

போகும் வழியில், பற்பல சிந்தனைகள் எதேச்சையாக எழுந்து மனதில் அலைமோதின.

இந்தப் போகத்துக்கான நீர்ப்பாசனம், மட்டு மட்டாகவே கிடைத்தது. நீண்ட கோடையால் குளத்து நீர்மட்டம், கீழிறங்கியதால் வாரத்தில் ஒரு நாளே நீர் பகிந்தளித்தனர். சென்ற வாரம், பக்கத்து வயற்காரன் இரவிரவாய் வாய்க்காலை மறித்து, தனது வயலுக்கு நீரைப் பாய்ச்சிக்கொண்டான். வடிவேலின் வயலுக்கு சிறிதளவே நீர் பாய்ந்திருந்தது. மழையும் தவறியதால், அவனது வேளாண் பயிர்கள் பாதிப்படைந்தன.

இன்னும், இரண்டு வாரங்கள் ஒழுங்காக நீர் பாய்ச்சினால், நெல்மணிகள் முற்றி விளைந்துவிடும். இந்தப் போகத்தை, வடிவேல் மிகவும் நம்பியிருந்தான். அறுவடையின் பின், தடைப்பட்டிருக்கும் மகள் செவ்வந்தியின் திருமணத்தை , எவ்வழிப் பட்டும் முடித்துவைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தான்.

மகளின் திருமண ஏக்கத்தை துல்லியமாய் எடை போட்டிருந்தான். காலா காலத்துக்கு முடித்து விட்டால், தலைப் பாரம் இறங்கிவிடும் என்பது அவனது முடிபு. அவளோடு ஒத்த உறவுக்காரப் பெண்களும், பாடசாலைத் தோழிகளும் திருமணம் செய்து, குழந்தை குட்டிகளும் பெற்றுவிட்டனர். அவை அவனது மகளின் மனதை மட்டுமல்ல, அவனது மனதையுமே வெகுவாகவே அல்லல் படுத்தியது.

சிந்தனையில் மூழ்கியபடியே வயலை வந்தடைந்தான்.

முதலில், அவனது வயலுக்கு நீர் பாயும் பிரதான வாய்க்காலை நோட்டமிட்டவன், அதிர்ந்துவிட்டான். அவனது வயல் வாய்க்கால் சற்று முன்னர்தான் திறந்துவிட்டிருப்பது பட்டவர்த்தனமாய்த் தெரிந்தது. வரம்பில் படிந்திருந்த ஈரலிப்பான சேற்றுச் சகதி மணல் காட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தது. சுற்றும் முற்றும் பார்வையைச் சுழல விட்டான்.

பக்கத்து வயற்காரன், வடிவேலை சடுதியாகப் பார்த்துவிட்டு, வரம்பில் ஏதோ செய்வது போல் பாசங்கு பண்ணிக் கொண்டிருந்தான். அவனது வயல் வரப்பில், நீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்தது. வடிவேலுவுக்கும் கோபம் பொங்கித்ததும்பியது. பலமாகச் சத்தமிட்டான்.

"கந்தையா அண்ணை..! உங்கட திருட்டு வேலையை திரும்பவும் காட்டிற்றீங்களா? என்ர வயலுக்குப் பாய வேண்டிய நீரை மறித்து, இரவு முழுக்க உங்க வயலுக்குப் பாச்சியிருக்கிறிங்களே.. ! இது என்ன நியாயம்?.... ஆண்டவனுக்கே இது அடுக்காது....நீங்க நல்லா இருப்பீங்களா? நாசமாய் போயிருவீங்க......" கைக்கு அகப்பட்ட வாய்க்கால் சேற்றை, இரு கைகளாலும் வாரியெடுத்து கந்தையாவை நோக்கி வீசினான்.

"என்னடா...? வீண் கள்ளப் பட்டம் கட்டுறாய் பொறுக்கி நாயே..!" என்று வீறாய்ப்பாய் சீறிக்கொண்டே வடிவேலை நோக்கி, பாய்ந்து வந்தான் கந்தையா.

முரட்டுத் தேகம் கொண்டவன் கந்தையா ஓங்கி ஒன்று விட்டானாக இருந்தால் வடிவேலு பச்சடியாகி விடுவான்.

வேகமாக வந்த கந்தையா, வடிவேலின் கையைப் பற்றி முறுக்கி, ஒரு குத்துவிட்டு கீழே தள்ளியும் விட்டான். நோஞ்சானான வடிவேலு, நிலை தடுமாறி வாய்க்காலுக்குள் தொபீரென்று விழுந்தான்.

கந்தையா, அதோடு நிறுத்தாமல், விழுந்து கிடந்தவனை மேலும், தினாவெட்டாக ஆத்திரத்தோடு ஏறிமிதித்தான். ஆனாலும் வடிவேல், சடுதியாகச் சுதாரித்துக் கொண்டு துள்ளி எழுந்தான். உடல் முழுவதும் சகதி ஒட்டிக்கொண்டு வழிந்தது. பொறுமை கட்டுமீறியது. சேற்றில் கிடந்த மண்வெட்டியும் கைக்கு எட்டியது. உறுதியாகப் பற்றிக் கொண்டான்.

மண்வெட்டி வேகமாய், மேலே.... மேலே.... உயர்ந்து சடுதியாக இறங்கியது. அதனைச் சற்றும் எதிர்பாராத கந்தையன், தன்னைச் சுதாரிக்க முன், மண்வெட்டி அவனது மண்டையை "ணங்" என்ற ஒலியுடன் மோதிப் பதம் பார்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையன் நிலை குலைந்து "தொபீர்" என்று வாய்க்காலுள் அடியற்ற மரம் போல் சரிந்தான். மண்டை பிளந்து அதிலிருந்து சீறிப்பாய்ந்த குருதி வயலுக்குப் பாய்ந்த நீரை, செந்நீராய்க்கிற்று.

வாய்க்கால் நீர்,குருதி கலந்து சலசலத்துப் பாய்ந்தது. வடிவேல், குருதியைப் பார்த்ததும் திகைத்து மெல்லென நிதானத்துக்கு வந்தான்.

கந்தையன் வாய்க்கால் நீரில், சுயநினைவை இழந்து சடலம் போல் கிடந்தான். எந்தவித அசைவுமில்லை. வடிவேலை பயம் கவ்விக்கொண்டது.

"ஐயோ ..முருகா...! "என அதிர்ச்சியில் அதிர்ந்து கூவினான். உடல் பட படக்க, மனம் பதை பதைக்க, தலையில் கைகளை வைத்தபடியே, வரம்பில் முழந்தாளிட்டு குத்துக் கல்லாய்க் குந்தினான். ஆக்ரோசமாய் வயல் வரம்பை, தன்னை மறந்து ஓங்கி அடிக்கத் தொடங்கினான்.

வெகு தூரத்தே... தொடு வானத்தில், மின்னல் கீற்றுக்கள் பளிச்சென ஒளிர இடி சன்னமாய் முழங்கிற்று.....

(இக்கதை, சிரித்திரன் இதழில் 1975 – வெளிவந்தது. 'தகவம்' கொழும்பு தமிழ் சங்கத்தால் சிறந்த சிறுகதையாகத் தெரிவாகி பரிசு பெற்றது. தினக்குரல் வார வெளியீட்டிலும் மீள் பிரசுரமாகியது. முதலில் எழுதியது தவறிவிட்டதால் மீண்டும் எழுதியது. சிறு மாற்றங்கள் இருக்கலாம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி வலியது

திலாவெளி நெடுஞ்சாலையில், அலஸ் தோட்டப் பகுதியில் அமைந்திருந்தது புனிதனின் பல்லங்காடி. சிறியகடைதான், ஆனாலும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அந்தப் பகுதியில் தங்கியிருப்பதால், அவர்களது தேவைக்கு ஏற்ற பல விதமான பொருட்களைத் தேவையறிந்து வாங்கி வைத்து, நியாயவிலையில் விற்பதாலும், சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுவதாலும் , அவனது கடையைப் பெரும்பாலும் நாடுவார்கள் அவனது நாணயத்தையும், இங்கிதத்தையும் பார்த்து, மேலதிகமாகவே காசு கொடுப்பார்கள். வருமானம் நன்றாகவே இருந்தது. புறநகர் பகுதியென்பதால் வாடகையும் மிகக்குறைவு.

புனிதனின் வீடு திருமலை பெரியகடைப் பகுதியில் அமைந் திருந்தது. வியாபாரம் முடிந்ததும் கடையைப் பூட்டிவிட்டு தினமும் வீட்டுக்குப் போய், அடுத்த நாளே வேளைக்கு வருவான். அங்கு தங்குவதில்லை.

'ஸ்கூட்டி' யை திருத்தத்துக்காகக் கொடுத்திருந்தான். ஒரு வாரமாயிற்று. இன்று போய் நாளை வா..என்று இழுத்தடித்ததால், பேருந்தோ, 'தனியார்' வாகனங்களையோ போக்குவரத்துக்குப் பயன் படுத்தினான்.

அவனைக் கண்டவுடன், அவன் வாகனத்தை திருத்துவது போல பாவனை காட்டி, அவன் அகன்றபின் வேறு வேலையைத் தொடருவார்கள். இது அவர்களது வாடிக்கை. புனிதனும் அவர்களைக் கணகாட்டுப் படுத்தாது, தருகின்றபோது தரட்டுமென்று பொறுமை காத்தான்.

இன்று வியாபாரம் மும்முரமாய் நடந்ததால், சற்றுத் தாமதமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை எட்டு மணியைத் தாண்டியிருந்தது.

கடையைப் பாதுகாப்பாகப் பூட்டிவிட்டுத் தெருவுக்கு வந்தபோது, கும்மிருட்டு கவிந்திருந்தது. தெருவிளக்கும் எரியாதிருந்தது. கருமழை மேகம் முக்காடிட்டு மூடியிருந்தது; மழையும் பெய்யும் போலிருந்தது் குளிர்காற்று, அதனைக் கட்டியம் கூறியது.

பேருந்து நிறுத்தம், கடையிலிருந்து அண்ணளவாக ஐம்பது மீற்றர் மட்டில் தள்ளியிருந்தது. நிறுத்தத்துக்கு வந்தவன், நிலாவெளி திசையை நோக்கிப் பார்வையை வீசினான்.

'கொறோனா'வின் சில்மிசத்தால், நெடுஞ்சாலை வெறிச்சோடி கும்மிருட்டில் மூழ்கிக்கிடந்தது. தாரூற்றிய வீதியும், சுற்றாடலும் ஒரே கரும் போர்வையைப் போர்த்தி,இரண்டறக் கலந்திருந்தன. கண்ணுக் கெட்டிய தூரம்வரை, எந்த ஒரு வாகனத்தின் விளக்கொளியையோ, இரைச்சலையோ காணவில்லை.

"சரி! வாறபோது ஏதாவது வரட்டும்'' என நினைத்துக்கொண்டு, கைத் தொலை பேசியை எடுத்து நீவினான். அது உடனேயே கண்சிமிட்டி அணைந்துவிட்டது. வியாபார மும்முரத்தில், அதற்கு மின்சாரம் ஊட்ட மறந்து போயிருந்தான், கோடையில் வற்றிப் போன குளம் போல, பற்றறியின் கொள்ளளவு அடிமட்டத்தைத் கோடிட்டுக் காட்டியது. மீண்டும் அதனை அணைத்து, சட்டைப் 'பக்கெற்' றுக்குள் திணித்துக் கொண்டான்.

நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் போல, கருமேகங்கள் கவிந்து இருளை இரட்டிப்பாக்கியிருந்தது. கூதல் காற்று உடலை வருட, புனிதனின் உடல் சிலிர்த்துச் சில்லிட்டு நடுங்கியது.

'ஸ்கூட்டர்', திருத்தக் கொடுத்த 'கராஜ்' காரனை முதல் தடவையாக மனதுக்குள் திட்டிக்கொண்டு, நாளைக்கு சற்றுக் கடுமையாகக் கதைத்தேயாக வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஏதாவது வாகனம் வரும்வரை, குளிரைத் தாக்குப் பிடித்தாக வேண்டுமே...!

சற்றுத் தொலைவிலிருந்த கடலின் ஓங்காரமான இரைச்சலும், வீறுகொண்ட அலைகளின், ஆக்ரோசமான மோதுகைகளும், கடல், பக்கத்தே வந்தவிட்டது போல அச்சமூட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையை அண்டி வீடுள்ளவர்கள், எப்படித்தான் காலம் தள்ளுகிறார்களோ எனநினைத்துக் கொண்டான். ஆழிப்பேரலையின் அவலத்தைக் கண்டவர்களல்லவா அவர்கள்.....

மாலைநேரம் உலா வரும் நுளம்புகளின், கைவரிசை வரவரக் கூடியது. அங்கிங்கெனாதபடி கடித்துக் கடைசியில் முகத்தில் ஊசி போட்ட ஒரு நுளம்பை அடிப்பதாக நினைத்து, தன்னையே ஆக்ரோசமாக அறைந்துகொண்டான்.

இப்போது, மழையும் சாதுவாகத் தூறத்தொடங்கியது.......

சற்றுத்தொலைவில், ஏதோவொரு வாகனத்தின் இரைச்சலுடன் கூடிய மங்கிய ஒளிக்கற்றையையும் புனிதன் அவதானித்தான், கூர்ந்து காதுகளை நுண்மையாய்த் தீட்டி, கண்களை இடுக்கிப் பார்த்தபோது, அது மோட்டார் இருசக்கர வாகனம் எனத் தனக்குள் தீர்மானித்துக்கொண்டு ஏமாற்றத்தில் உச்சுக்கொட்டிக் கொண்டான்.

அவனை அண்மித்த வாகனத்தின் இரைச்சல் காற்றில் கரைந்து மறைய, அது உருண்டு வந்து ஓய்வெடுப்பது போல நின்றது.

பழுதடைந்துவிட்டதோ.......?

அதனைந் தொடர்ந்து, பேரிரைச்சலுடன் பிரகாசமான ஒளிக் கற்றையைப் பாய்ச்சியவாறு வேறு ஒரு வாகனம் வேகமாய் வருவதும் தெரிந்தது. அது, நிச்சயம் பேருந்தேதான் என நிச்சயப் படுத்திக்கொண்டு, தன்னைத் தயார்ப்படுத்தினான், தன்னையும் ஏற்றிக்கொண்டு போவார்களோ என்ற சந்தேகமும் அதேவேளையில் எழாமல் இல்லை.

கையை மேலே தூக்கிப் பிடித்து ஆட்டியபடி நின்றான். அதுவும் வேகத்தைக் குறைப்பது போல், அதன் இரைச்சலிலிருந்து தெரிந்தது.

முன்னதாக வந்த இரு சக்கரவண்டி, ஓரமாக நிற்காமல் வீதியின் நட்ட நடுவே நின்றிருந்தது.

புனிதனின் ஆழ்மனம் பட... பட... என அடித்துக்கொண்டது, ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதோ என அச்சப்பட்டான். அடுத்தகணம் அவன் அச்சப்பட்டது நடந்தேவிட்டது,

வேகமாய் வந்த பேருந்து, வேகத்தைக் குறைத்தாலும் கூட, நட்ட நடுவீதியில் வெளிச்சமில்லாது நின்ற வாகனத்தை ஓரமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரசிவிட்டு, நிற்காமல் மீண்டும் வேகமெடுத்து ஓடி மறைந்துவிட்டது.

"மகே..அம்மே.. ! " என்ற அவலக்குரல் கடல் இரைச்சலையும் மேவி கூக்குரலாய் புனிதனின் காதுகளில் மோதி ஒலித்தது.

புனிதன் எதுவுமே யோசிக்கவில்லை. விபத்துற்றவனை நோக்கி பாய்ந்தோடினான்,

இரத்தவெள்ளத்தில், கால் கைகளை அடித்தபடி,"அம்மே.... அம்மே." என அவலமாய் முனங்கியபடி கிடந்தான் ஒரு இளம் வாலிபன், அவன் வந்த வாகனம் முட்டைக் கோதாய் நொறுங்கி வீதியோரமாய், அவனைப் போலவே அவலமாய்க்கிடந்தது.

அவனது முனங்கல் வார்த்தைகளிலிருந்து, அவன் சிங்கள இளைஞன் எனத் தீர்மானித்துக்கொண்டான். புனிதனுக்கு சிங்களம் அச்சரமாகப் பேச வராது. ஆனால், சாராம்சத்தைப் சற்றுப் புரிந்து கொள்வான். அவ்வளவுதான்....

இரு இனத்தவரும், மற்றவர் மொழியை ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளாதது எவ்வாறான அரசியல் தவறென அந்தக்கணத்திலும் சிந்தையில் சடுதியாய் சதுராடி மறைந்தது.

"மல்லி....மல்லி....ஹோமத? தெமல தென்னவாத......?." எனத் திக்கித் திணறிக் கேட்டான். அவனிடமிருந்து, முனங்கலைத்தவிர எந்தப்பதிலுமே வரவில்லை.

விபத்துற்றவனின் கைபேசியும் அவனைப் போலவே சிதிலமாய் நொறுங்கிக்கிடந்தது.

என்ன செய்வதென பரிதவித்த புனிதன், பதற்றத்துடன் தெருவின், இருமருங்கும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பார்வையைச் செலுத்தினான்.

கருமை படர்ந்த அத்துமானமான மயான அமைதியில் வீதி உறைந்து உறங்கிக்கிடந்தது. அக்கம் பக்கத்து வீடுகள் எல்லாமே 'கொறோனா' அச்சத்தில் அமைதியாக உறக்கத்தில் ஆழ்ந்திருந்தன. எவரினதும் ஆளரவத்தையும் காணமுடியவில்லை. அவர்களின் உதவியைக் கோருவது சாத்தியமில்லை

தனது கைத் தொலைபேசியை, ஏதோவொரு நப்பாசையுடன் அழுத்தினான், திருமலை பொதுவைத்தியசாலையுடன் தொடர்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தி, அவசர அழைப்பைப் பெற முயன்றான். தெய்வாதீனமாக தொலை பேசியும் மங்கலாக ஒளிர்ந்தது. இணைப்பும் கிடைத்தது.

அவன் தமிழில் கேட்டதுக்கு சிங்களத்தில் பதில்வந்தது. அத்தடன். சிங்களத்தில் கதைக்கச் சொல்லியும் கேட்டனர்.

"அலஸ்காடன்.....அக்சிடன்ற்........" எனத் திக்கித்திணறி சொல்லி, முடிக்க முதலே தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

தமிழுக்கு அவ்வளவுதான் மரியாதை......

புனிதனுக்கு ஆத்திரம் பீறிட்டது. அவனது தொலை பேசியும் தானாகவே செயலிழந்தது.

அவனது மனம் துடிதுடித்துப் பரிதவித்தது. அதேவேளை நிலாவெளிப் பக்கமிருந்து, ஏதோவொரு வாகனத்தின் மங்கலான வெளிச்சம் தெரிந்தது. மெலிதான இரைச்சலும் காதில்விழ, அது ஆட்டோதான் எனத்தீர்மானித்துக் கொண்டான்.

அண்மையில் வரும்போது, கையையாட்டி அதனை நிறுத்த முயன்றான். வாடிக்கையாளன் என்று நினைத்து ஆட்டோவும் நின்றது.

ஆட்டோகாரன், சிங்களத்தில் கேட்க, புனிதன் தமிழில் பதில்சொல்லி, விபத்து நடந்ததை சுட்டிக்காட்ட.....

"நே..நே..." என்று சொல்லிக்கொண்டு ஆட்டோவை இயக்கி வேகமாய் மறைந்துவிட்டான்.

புனிதன் துவண்டுபோனான். ஒரு மனித உயிர் தனது கண் முன்னே இறப்பதைக் காண மனம் ஏற்கவில்லை. எந்த இனமோ, மதமோ ஒரு உயிரல்லவா...?

செய்வதறியாது பரிதவித்து நின்ற வேளை, நெருங்கிய நண்பன் ஒருவன் போனில் அவனை தெய்வாதீனமாக அழைத்தான். அவசர அவசரமாக நிலைமையை சுருக்கமாய் விளக்கவும், மேற்கொண்டு, தான் கவனிப்பதாகக் கூறி தொடர்பைத் துண்டித்துக் கொண்டான் நண்பன்.

அப்பாடா... எனப் பெரியபாரம் ஒன்று குறைந்ததாய் நினைத்து நிம்மதிப் பெருமூச்செறிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பன், சிங்களம் நன்கு பரிச்சயமானவன். அதனால் முழு நம்பிக்கையுடனிருந்தான். பத்து நிமிடங்களில்......

'அம்புலன்ஸ்' ஒன்று நீலநிற ஒளியைச் சுழலவிட்டபடியே புயல் போல் வேகமாய் வந்துநின்றது.

புனிதனிடம் சிங்களத்திலேயே கதைத்தனர். தனக்கு சிங்களம், தெரியாதெனச் சொல்லவும், விபத்துற்றவனை தூக்கி ஏற்றினர். புனித னையும் தங்களுடன் ஏற்றிக்கொண்டு விரைந்தனர்.

பொது வைத்தியசாலையில் விபத்துப்பிரிவில் சேர்த்ததுடன் புனிதனையும், அங்குள்ள பொலீசில் ஒப்படைத்தனர். விபத்துற்றவனின் சட்டைப் பையிலிருந்து எடுத்த அட்டைகள், பத்திரங்களைப் பார்த்து விட்டு, அவன் சிங்களவன் என்று தெரிந்ததும் துரிதமாக இயங்கினர்.

பல மருத்தவர்கள் வந்து குவிந்தனர்.

தீவிர பரிசோதனைகள் நடந்தன. எல்லோர் முகத்திலும் வாட்டம், கரு மேகமாகப் படர்ந்தது. உயிர், ஏற்கனவே பிரிந்துவிட்டதாக தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அரை மணித்தியாலம், முந்தி வந்திருந்தால் பிழைக்க வாய்ப்பு இருந்திருக்கலாம் என்பது அவர்களின் கணிப்பு.

பொலீசார், புனிதனிடம் துருவித்துருவி விசாரித்தனர். அவன்தான் விபத்தை ஏற்படுத்தியிருப்பானோ என்ற கோணத்தில் விசாரணை போவது போல் உணர்ந்து திகைத்துப் பதைபதைத்தான்.

சற்றுநேரத்தில்.........

விபத்துப்பிரிவுக்குள், அரக்கப் பறக்க ஒருவன் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தான். மருத்துவத் தாதிகளிடம் சிங்களத்தில் " எங்கே என் மகன்? " என்று குளறிக் கத்தினான்.

அவனது அவலக் குரலைக்கேட்டு, டாக்டர் அவனிடம் வந்தார்.

"விபத்தானது உனது மகனா?" எனக்கேட்கவும், குளறிக் கொண்டே பலமாய் தலையையாட்டினான்.

"என் மகன் தப்புவானா மாத்தயா.....?" என பதகளிப்புடன் நப்பாசையில் கேட்டான், கண்களில் கண்ணீர் பொலபொலத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறங்கையால் துடைத்துக்கொண்டான். அவனைப் பார்க்கவே மிகவும் பச்சாத்தாபமாயிருந்தது.

டாக்டர், அவனை மிகவும் பரிதாபமாகப் பார்த்தார். தலையைக் குறுக்கு மறுக்காய் ஆட்டி, உதட்டையும் பிதுக்கினார். அதனைப் பார்த்த அவனது மனம், திகீர் எனக்கருகியது.

முகத்தில் கவலை, கருமேகமாகப் கவிந்தது. சினிமாக்களில், டாக்டர்கள் சொல்வது போல வார்த்தைகளை நின்று நிதானித்து அந்த டாக்டரும் கூறினார்.

"மனதைத் திடப்படுத்திக் கொள். உன் மகனை உயிரற்ற நிலை யில்தான் இங்கு கொண்டு வந்தனர். ஒரு அரைமணித்தியாலம் முந்திக் கொண்டுவந்திருந்தால் சிலவேளை காப்பாற்றியிருக்கலாம். தலையில் பலமான காயம். தலைக்கவசம் கூடஅணிந்திருக்கவில்லை. பெருமளவு இரத்தம் வெளியேறியிருக்கிறது. எங்கள் கையில் எதுவுமேயில்லை. எல்லாம் அவ்வளவுதான்."

தகப்பனுக்கு, உச்சியில் இடியிறங்கியது போலிருந்தது.சிங்களத் தில் ஏதேதோ சொல்லி அரற்றினான். சுற்றிலும் ஒருமுறை நோட்டமிட்டான்.

அண்மித்து, பொலீசாருடன் நின்றிருந்த புனிதனை அடையாளம் கண்டு கொண்டான்.

இருவருக்குமே கணப்பொறி தட்டியது. ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொண்டனர்.

"ஐயோ....!.ஐயா....! நீங்க என்னை நிறுத்தியபோது, நானும் ஒத்துழைத்திருந்தால் என் மகன் தப்பியிருப்பானே....!." எனப் பொருள் பட கொச்சைத் தமிழில் ஓலமிட்டான். தன்தலையில் வேகமாய் அடித்துக் கொண்டான். அவனது பரிதவிப்பைப் பார்த்து புனிதனுக்கும் கண்கள் கலங்கின.

பொலீசாருக்கு, புண்ணியன் சொன்னவை - நடந்தவை பட்ட வர்த்தனமாய் வெளித்தன. புனிதனை, முதல் முறையாக மரியாதையுடன் பார்த்தனர்.

(பாண்டிச்சேரி (புதுச்சேரி)யிலிருந்து வெளிவரும், 'விடியல் இலக்கிய இதழ்' நடாத்திய ஈழத்து, சிறுகதைப் போட்டியில் தெரிவாகிய சிறுகதை அக்டோபர் – 2021)

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிஜங்களைக் கதை வடிவில் தருபவர் மயில் மகாலிங்கம். அவரின் படைப்புகள் காலப்பதிவுகளாக இனங்காட்டுபவை.

நீண்ட காலத்திற்கு பின்னரும் இவரின் கருவூலங்கள் காலக் கண்ணாடிகளாக விளங்கப்போகின்றன.

இவரது சிறுகதைகள் வாசகர்களின் மனதில் நிறைவினைத் தருமென நினைக்கின்றேன். வாழ்த்துகின்றேன்.

- கலாபூசணம் திருமலை சுந்தா

மயில் மகாலிங்கத்தின் சிறுகதைகள் மனித மனத்தின் நுட்பங்களை வெகு இயல்பாக வெளிக்கொணரும் ஆற்றல் கொண்டவை. இவரது பாத்திரங்கள் அனைத்தும் நாம் அன்றாடம் சந்திக்கும் மாந்தர்களே.

அந்த வகையில் தனது மணவாசனை வீசும் படைப்புக்கள் மூலம், தனது மண்ணையும், மக்களையும் வரலாற்றில் வாழ வைக்கிறார்.

-மகுடம் வி. மைக்கல் கொலின்

மகுடம்
ISBN: 978-624-5849-16-1
9 786245 849161
500.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org